www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

அடுத்த இதழ்
ஜனவரி 11 இல்

இதழ்~87 டிசம்பர் 14.1995 ~ ஜன 10.1996 விலை 7.00



## யாழ்ப்பாணத்தின் பின்:

# யாபா பட்டுண?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வடக்கில் சிங்களக் குடியேற்றம்:
# தமிழ் மக்களுக்குப் பரிசு!

நீர்ததேக்க, நீர்ப்பாசன முறைகளின் கீழ் வறண்ட வலயத்தைச் சேர்ந்த இடங்களில் விவசாய குடியேற்றங்களை உருவாக்கும் வேலை 1930களில் ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களது சிறு உற்பத்தி அபிவிருத்திக் கொள்கையின் பிரதான அம்சமாக காணப்பட்டது. நீர்ப்பாசன கட்டுமானங்கள், நிலங்களை வளப்படுத்தி குடியிருத்துவதற்காக விவசாய குடும்பங்களை தேர்ந்தேடுத்தல், பொதுவசதிகளை ஏற்படுத்தல் என்பன அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. 1981ம் ஆண்டளவில் பத்து லட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் பரப்பில் 488,000 விவசாயக் குடும்பத்தினர் குடியிருத்தப்பட்டனர்.

සිංහල ජනපද පිහිටුවීම
හා
ජනවාර්ගික ගැටළුව




அதன் பிறகு மகாவலித் திட்டதிற்காக கையேற்கப்பட்ட நிலங்களில் இன்னும் அரசின் ஏற்பாட்டின் கீழ் குடியேற்றமயமாக்குதல், என்பது குறிப்பாக விவசாய - உற்பத்தி நாடொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதனைப் பேணல் எனும் பெயரில் செயற்படுத்தப்பட்டன.

விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை கஷ்டப்பட்ட ஏழை விவசாய மக்களுக்கும், தொழில் வாய்ப்பு தேடியலையும் ஏனைய மக்கட் பிரிவுக்கு பிரித்து வழங்கும் எனும் ஆளும் பிரபுத்துவ அரசியலின் தேவை, இச் செயற்பாடுகளுக்கு வாய்ப்பளித்தது.

சர்வஜனவாக்கெடுப்பு வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கருத்து இச்செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தது.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் வரை குடியேற்றங்களை வியாபித்தபோது குடியேற்றவாசிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சிங்கள மக்களாகவே காணப்பட்டதானது இனமுரண்பாடுகள் வளரக் காரணமானது.

1. இதற்கான செலவுகள் அனைத்தையும் தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்குவது என்றும், பெறப்படும் பிரயோசனம் நாட்டின் சகல மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

2. பயன்படுத்தக்கூடிய இடங்கள் அனைத்திலும் தமிழ் விவசாயிகள் போதுமானளவினர் இல்லை என்பது போன்ற காரணங்களால் மேற்குறிப்பிட்ட அரசின் நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்பட்டது.

நாட்டின் இனங்களுக்கிடையில் இருக்கின்ற ஐக்கியம் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதன் மூலம் பாதிப்புக்குள்ளாகும் என ள - தமிழ் அரசியற் தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மொழி, கலாசார பண்பாட்டு ரீதியில் தங்களுக்கென்று இருக்கும் தனித்துவத்தைக் கொண்ட இனம் ஒன்றை இந்நடவடிக்கையின் மூலம் பாதிப்புக்குள்ளாக்கி, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களில் குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் வேற்றின மக்களைப் பரப்புதலின் மூலம் இனவி

→ 9

## தீர்வு தியாகத்தை பயனற்றதாக்கும்!

உத்தேச தீர்வுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அதிகாரம் வழங்கப்பட்டால் ''ரிவிரச'' இராணுவ நடவடிக்கையினால் பெற்றுக்கொண்ட வெற்றியைப் போலவே அதற்காகத் தமது பெறுமதிமிக்க உயிர்களைத் தியாகம் செய்தது பலனற்ற நடவடிக்கையாகிப் போகும் எனச் சிங்களப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் காமினி ஜயசூரியவினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு தீர்வுத்திட்டம் தொடர்பாக மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அரசினால் முதலில் இவ் யோசனைகள் முன்வைக்கப்பட்டதன் காரணமாக அவற்றை அப்படியே செயற்படுத்த முயற்சி எடுக்கக் கூடாது. இவ் யோசனைகள் நுணுக்கமான முறையில் பொதுமக்களின் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளன.

மிகப் பெரும்பான்மையானவர்கள் இந்த யோசனைகளை நிராகரித்துள்ளனர். அதனால் இந்த யோசனைகளைப் பலவந்தமாக மக்கள் மீது திணிக்க முன்வர வேண்டாமென நாம் கோருகிறோம்.

எமது சிறு தீவைத் துண்டு, துண்டாகப் பிரிப்பது அநாவசியமானது. அதனை விட எமக்குப் பெறுமதியான பல விடயங்களைச் செய்ய வேண்டியுள்ளது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக வட-கிழக்கிலுள்ள மக்கள் பெருந்துன்பத்திற்குள்ளாகியுள்ளனர். யுத்த பயங்கரத்திலிருந்து அவர்களுக்கு ஆறுதலளிப்பது மட்டுமல்ல, அதனால் ஏற்பட்ட காயங்கள், அடையாளங்களையும் நீக்க வேண்டும். நியாயமும், நீதியும் மீள ஸ்தாபித்து அவர்களுக்குக் காட்ட வேண்டும். பேதங்கள் காட்டப்பட்டதாலும், பயங்கரத்தினாலும் நசுக்கப்பட்ட இனமொன்றைத் திரும்பவும் ஐக்கியப்படுத்த வேண்டும். இந் நோக்கத்தைப் பேதங்களைக் காட்டுவதால் அல்ல, ஒற்றுமையாகச் செயற்படுவதனாலேயே நிறைவேற்ற முடியும்.

இரத்தக் களரியொன்றின் ஊடாக அரச அதிகாரத்திற்கு வரப் பயங்கர நோக்கங்களை நோக்கிச் சிலரைத் தூண்டி விட்டுத் தமிழ் அரசியல்வாதிகளும், சில மத குருமாரும் செயற்பட்டனர் என்பதைக் கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

தமிழர்களல்லாத மக்கள் படுகொலை செய்யப்படும்போது அப்படுகொலைகளைக் கணக்கெடுக்காது விடுவதும், சிங்கள மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து பாதுகாப்பைத்தேடிச் செல்லும் போதும் அவர்கள் கண்டும் காணாமல் இருப்பதும், இவ்விதமாகச் செயற்பட்டால் தேசிய ஒற்றுமையொன்றைக் கட்டியெழுப்ப முடியுமா?

(திவயின-199510109)

## கூ.மொ.வி. நிறுவனத்தில் 2 கோடி மோசடி!

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு (C.W.E.)உரிய லொறிகள் 40 இன் இயந்திர (என்ஜின்) இலக்கங்களையும், இயந்திரங்களையும் களவாக மாற்றியுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யுமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் இரகசிய பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

24 ஸ்ரீ, 27 ஸ்ரீ, ஆகிய வாகனங்களுக்கு இவ் இசூசு லொறிகளின் முதல் இயந்திர இலக்கங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் முன் அறிவித்தலின்றி மாற்றப்பட்டுள்ளது.

அதற்குப் புறம்பாக இன்னும் இசூசு லொறிகள் ஆறில் உள்ள இயந்திரங்கள் கூ. மொ.நி றுவனத்திற்குரியனவை அல்லவெனத் தெரியவந்துள்ளது.

இவ் ஆறு இயந்திரங்களும் புத்தளத்தில் புலிப் பயங்கரவாதிகளிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என சந்தேகமொன்று சில கூ.மொ. நி. ஊழியர்களினுள் நிலவுகிறது.

மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இயந்திரங்கள் நாற்பதினதும் பெறுமதி ஏறக்குறைய ரூபா இரண்டு கோடி அளவாகும் எனக் கூ. மொ. வி. இத்தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கிறன.

இது தொடர்பான விசாரணையொன்றின் போது கூ.மொ.நி. தலைவர் தர்மரத்ன ஹேரத், அவைப்பற்றி பொது முகாமையாளரிடம் கேட்குமாறு சுருக்கமாகப் பதிலளித்தார்.

கூ.மொ.நி. பொது முகாமையாளர் டீ.கே.ஜீ. அமரசிங்க தனக்கு அது பற்றி எதுவும் தெரியாது எனக்கூறியுள்ளார்.

கூ.மொ.நி. குச் சொந்தமற்றதாக அடையாளங்காணப்பட்ட அவ் வாகனங்களின் பதிவிலக்கங்களின் சட்ட பூர்வ இயந்திர இலக்கங்களும், முறையற்ற விதத்தில் தயாரிக்கப்பட்ட இயந்திர இலக்கங்களும் எம்மிடம் உள்ளன.

(லக்பிம-19951203)

## தொண்டாவுக்கு நெருக்கடி!

தோட்டங்களைத் தனியார் மயப்படுத்லுக்கு எதிராக 5 அரசியற் கட்சிகள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. தனியார் மயப்படுத்தலை நிறுத்தாவிட்டால் தாங்கள் டிசம்பர் 5ம் திகதி பாராளுமன்றத்தில் பெருந்தோட்டத்துறை தொடர்பான வரவு - செலவு திட்டத்தின் மீதான விவாதத்தின் போது எதிர்த்து வாக்களிக்கப் போவதாகவும் இவ்வரசியற் கட்சிகள் தெரிவித்திருந்தன. நவம்பர் 28ம் திகதி ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதத்திலேயே மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கதிற்கு ஆதரவான 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நடவடிக்கைக்கு ஆதரவாகவுள்ளனர். அனுப்பப்பட்ட மேற்படி கடிதத்தைத் தொடந்து அவ்விவாதத்திற்கு முன்தினமான 4ம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதியுடன் சந்தித்து இதுபற்றி பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்தின் போது அமைச்சர் தொண்டமான் பிரதியமைச்சர் எஸ். சந்திரசேகரன் உட்பட பேர்னாட் சொய்ஸா, இந்திக குணவர்தன, கே.பீ.டி. சில்வா, வை.பீ.டீ. சில்வா, பெட்டி வீரக்கோன், ராஜா கொல்லுரே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தோட்டங்களைத் தனியார் மயப்படுத்துவதை தாங்கள் எதிர்ப்பதாக இவர்கள் அனைவரும் தெரிவித்திருந்தனர். ஜனாதிபதியும் இதற்குப் பதிலளிக்குமுகமாக 'பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொள்வோம்' என தெரிவித்திருந்தார்.

கதை இப்படி வலுத்துக்கொண்டே போன போது அமைச்சர் தொண்டமான் 'எங்களது கோரிக்கையை ஈடுசெய்யாது போனால் அரசுக்கு நாங்கள் வழங்கும் ஆதரவை நிறுத்த வேண்டியேற்படும்' என தெரிவிக்கவே உணர்ச்சி வசப்பட்டவராக ஜனாதிபதி தொண்டமான் அவர்களின் அவ்வாறான தாம் ஆதரவை நாடியிருக்கவில்லை என தெரிவித்தாராம்.

எவ்வாறிருப்பினும் தொடந்து நடத்தப்படும் இப்பேச்சுவார்த்தையில் இறுதி முடிவு காணப்படும் வரை தனியார் மயப்படுத்தலை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலின் பின் அமைச்சர் தொண்டமானுக்கும் அரசுக்குமிடையிலான முறுகல் நிலை மேலும் மோசமடைந்துள்ளது என தெரியவருகிறது.

ஏனெனில் தொண்டமான் மீதான ஏயர் லங்கா ஊழல் குற்றச்சாட்டை மேற்படி சம்பவத்தின் பின் அரசு முடுக்கிவிட்டுள்ள விடயம் இதனை ஊர்ஜிதப்படுத்துகிறது. இனி இவ்வாறான நடவடிக்கைகள் தொடருமென்றே எதிர்பார்க்கலாமோ?

## நடுநிலைக்குற்ற நீதிமன்றம்
## ஒன்று தேவை!

யுத்தக் குற்றவாளிகள், சர்வதேச மனிதாபிமான சட்ட திட்டங்களை மீறுபவர்கள் தொடர்பாக வழக்கு விசாரணை நடத்துவதற்காக நடுநிலைக் குற்ற நீதிமன்றமொன்றை அமைக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

மோதல் நிகழும் சந்தர்ப்பங்களில் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது கடும் யுத்தக் குற்றமெனக் குறிப்படும் அச் சங்கம் 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளை ஆயுதமேந்த விடக்கூடாது எனவும், அவர்களை மோதல் நடவடிக்கைளில் ஈடுபடுத்தக் கூடாதெனவும் தெரிவிக்கிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக நான்கு நாட்களாக நடத்தப்பட்ட அம் மாநாடுத் தொடரின் பின் அவ் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

(திவயின-199511209)

**வீ.ஆனந்தன்**

மட்டகளப்புப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்

மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் ஸ்தாபகர். நீண்ட கால உறுப்பினர். மட்டகளப்புப் பிரதேச நாட்டார் இலக்கியத்தில் அதிக ஆர்வம் கொண்டவர்.

80களில் வெளிவந்த 'களம்" இலக்கியச் 'சஞ்சிகையின் ஆசிரியர்களுள் ஒருவர். மலையாள கலை, இலக்கியங்களை மொழிபெயர்த்து தமிழுக்கு அறிமுகம் செய்தவர்களுள் குறிப்பிடப்பட வேண்டியவர். அவ்வப்போது கவிதைகளையும் எழுதியுள்ள இவர் சிறந்த விமர்சகரும் கூட.

ஆனாலும் என்ன!

95.12.05இல் புதுக்குடியிருப்பில் நடந்த துப்பாக்கிச் சமரின் இடையில் சிக்குண்டு மரணமெய்தியவர்களுள் இவரும் ஒருவராகிப் போனார்.

**வீ.ஆனந்தன்**

*பத்துப் பதினைந்து கிலோ ஈயத்தை*
*காய்ச்சியென் காதுகளில்*
*ஊற்றியயது ஏனோ?*
*மேலும் -*
*நெருப்புக் கொள்ளிகளை தூக்கியே வந்து*
*கோடுகள் போட்டதேன் உடம்பு எங்கிலும்?*

*உன்னை நேசித்த மனசை*
*ஒருகோடி சோகங்கள்*
*மொட்டைக் கத்தியால் கீறிக் கிழித்தனவே*
*நெஞ்சைப் பிளந்து*
*துண்டு துண்டாய் எறிந்தனவே எங்கோ*

*கட்டை மீசைக்காரன்*
*உனது விமர்சனத்தின்*
*கோபத்துக்குப் பயந்து நடு நடுங்கிய*
*போதுதான்*
*கவிதையின் முகத்தைக் கண்டு வியந்தேன்*
*நான்*
*கை குலுக்கினேன்*

*இலக்கியக் கூத்து காட்டுபவர்களை...*
*பம்மாத்து எழுத்தாளர்களை...*
*கம்பீர வார்த்தைகளால்*
*சுட்டுக் காயப்படுத்தினாய்*
*நாறுகின்ற பிணங்களான*
*அவர்களது கவிதைகளைப் புதைக்க*
*நல்ல நல்ல குழிகள் வெட்டினாய்.*
*ரொம்ப அழகாக*

*அங்கீகரிக்க முடியவில்லை*
*காவாலி-களிசறைகளின்*
*துப்பாக்கி வேட்டுகளுக்கு*
*சோறு-கறியாகிப் போனதை.*
*உனது உயிர்.*

*தமிழ் எழுத்துலகின் மகா புனிதனே!*
*உன்னை சுட்டுக் கொலை செய்த*
*இரத்தவெறியனை எனக்குக் காட்டித்தா.*
*காணுகிற இடத்தில் வைத்து*
*கத்தியால் குத்தி சாக வைப்பேன் அவனை*

1995.12.07 -எம்.எல்.எம்.அன்ஸார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





யாழ்ப்பாண ஆக்கிரமிப்பின் பின் அநுரத்த கொடியேற்றுகிறார்

# நாட்டைப் பிளப்பதற்கான முதற்படி!

சூரியக்கதிர்' என மொழியாக்கப்பட்ட 'றிவிரச' நடவடிக்கை யாழ் துரையப்பா அரங்கில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டதுடன் முடிவுக்கு வந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றி நிரந்தரமான வெற்றிக்கான தொடக்கமே என்றும் நாட்டில் அமைதியைக் கொண்டுவருவதற்கான மூன்றுகட்ட நடவடிக்கையின் முதற் கட்டமே இது என்றும் அரசு தரப்பு செய்திகள் கூறுகின்றன. இதையடுத்து அரசாங்கத்தின் 'மட்டுப்படுத்தப்பட்ட' நடவடிக்கைகள் கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் வரலாறு காணாத வெற்றியாகக் கணிக்கப்பட்ட 'றிவிரச' தாக்குதல் நடவடிக்கை வலிகாமம் பூராவிலிருந்து 'கட்டாக்காலி மாடுகளையும், நாய்களையும் ஒரு சில வயோதிபர்களையும்' தவிர ஏனையோரை தென்மராட்சி வடமராட்சி நோக்கி இடம் பெயர்த்துவிட்டுள்ளது. அரசுப் படைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்ட போதும், அரசாங்கம் அங்கே சிவில் நிர்வாகத்தை கொண்டு வருவது பற்றிப் பேசிவருகின்ற போதும் 'பிரச்சினை இன்னமும் முடிந்து விடவில்லை' என்பது மட்டும் தெளிவு.

யாழ்நகரை அரசபடைகள் கைப்பற்றியதில் அரசுக்கு இரண்டுவிதமான லாபங்கள் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஒன்று; வெல்லப்பட முடியாதது என்று நம்பப்பட்ட பிரதேசத்தை கைப்பற்றியதன் மூலமாக இராணுவத்தினர் மத்தியில் உற்சாகத்தையும், பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது இந்த அரசு. இரண்டாவதாக அரசியல் ரீதியாக ஐ.தே.க. அரசாங்கங்களை விட சிறப்பான அரசியல் தலைமையை இந்த அரசாங்கம் வழங்கிய தென்பதால் மாபெரும் அரசியல் வெற்றியைப் பெற்றுள்ளது என்பதாகும். பயங்கரவாதத்தை இந்த அரசு மேன்மை தங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையின் கீழ் முற்றாக ஒழித்துக் கட்டும் என்பதை நிரூபித்துள்ளது என்ற கருத்தும் தென்னிலங்கை மன உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் பலமான நிலையில் நின்று புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு வந்தால் மட்டுமே பேச முடியும் என்று அரசாங்கத்தால் கூற முடிகிறது என்பதும் அரசாங்கத்தின் புதிய சாதனைகளே என்றும் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு அம்சங்களும் இந்த அரசாங்கம் தேர்தலை முன்வைத்தால் அதில் மீள வெற்றிபெறும் வாய்ப்பை அதற்கு கொடுத்துள்ளதாகவும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஆகவே இந்த வெற்றி பொ. ஐ. மு. அரசாங்கத்திற்கு தற்காலிகமாகவே ஒரு வெற்றிதான் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய அரசாங்கம் இவ்வாறு வெற்றி பெற்றதற்கான காரணங்களாக பிரதான மாக பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன:

(அ) இலங்கையின் இன்றைய ஜனாதிபதியின் அரசியல் தலைமைத்துவம்,

(ஆ) ஆயுதப் படையினருக்கு வேண்டிய ஆயுத தளபாடங்களை வழங்கியமையும், யுததம் செய்வதில் உறுதியாக அரசு இருந்தமையும்,

(இ) அரசாங்கத்தின் சமாதானத்திற்கான விருப்பையும் அதற்கான அதன் அர்ப்பணிப்பையும் உலக நாடுகளும் உள்நாட்டு மக்களும் நம்பியமை,

(ஈ) புலிகளுக்கு எதிரான உலக மக்களின் அபிப்பிராயம்.

இந்தக் காரணங்கள் அரசாங்கத்தின் தரப்பிலான வெற்றிக்கான காரணங்களாக கூறப்பட்ட போதும், இவற்றை விட முக்கியமான காரணம், விடுதலைப்புலிகளின் அரசியல் தூரதிருஷ்டியின்மை என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்படவேண்டும். அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் எந்தக் கெரில்லாக் குழுவும் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படையான நெறிமுறைகளைக் கூட புலிகள் தமது கவனத்தில் எடுத்ததில்லை என்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். இலங்கை அரசாங்கம் புலிகளை திட்டமிட்டு தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி விடலாம் என்று எத்தனித்தும், அவற்றை வெளிப்படையாகவே செய்ததும், பேச்சுவார்த்தையின் போது இழுத்தடித்ததும், புலிகளை சமாதான காலகட்ட அமைதிநிலையை உடைக்கும் நிலைக்கு தள்ள முயற்சித்ததும், யாவரும் அறிந்த உண்மைகள். அரசாங்கம் மக்களிடமிருந்து புலிகளை தனிமைப்படுத்த வைத்த கண்ணியில் புலிகள் மாட்டுப்பட்டது, ஏப்பிரல் மாத திருகோணமலை தாக்குதலின் போது தெளிவாயிற்று. இதற்கும், விடுதலைப்புலிகளின் அரசியல் தூரதிருஷ்டி இன்மையே காரணம். இந்த அரசாங்கம் அமைதி, சமாதானம், ஜனநாயகம் என்ற முழக்கங்களுடன் ஆட்சிக்கு வந்தமையும் அந்தப் பலத்துடனேயே அது சமாதான முயற்சியில் ஈடுபடுகிறது என்பதையும், அந்தப் பலமே அதற்கு யாழ்ப்பாணம் உட்பட உலகுபூராவும் ஆதரவை உருவாக்கியுள்ளது என்பதையும் புரிந்து கொண்டிருந்தால் புலிகள் அரசாங்கத்தின் அரசியல் முன் முயற்சியை உரசிப் பார்க்கும் சந்தர்ப்பத்தை மக்களுக்கு கொடுத்திருக்க முடியும். மக்கள் மத்தியில் இந்த அரசாங்கம் செல்வாக்குடன் இருக்க வேண்டுமானால், அது எந்த முழக்கங்களை முன்வைத்ததோ அவற்றை நடைமுறையில் செய்தாக வேண்டும் என்ற அடிப்படையை புரிந்து கொள்ளும் அரசியல் மனோ பலம் புலிகளுக்கு இல்லை. தான் சொன்ன கொள்கைகட்கு கொஞ்சமும் விசுவாசமற்ற அரசு விரைவிலேயே மக்களின் முன் அம்பலமாகிப் போயிருக்கும் என்பதை அவர்கள் ஆராயத் தயாராக இருக்கவில்லை. யுத்தங்களின் வெற்றி ஆயுங்களின் பலத்தில் தான் தங்கியுள்ளது என்ற நம்பிக்கையின் செல்வாக்கிலிருந்து அவர்கள் இன்னமும் விடுபடாமலே இருக்கிறார்கள். இதனால், யுத்தத்தை முதலில் தொடக்கி வைத்தவர்கள் - அதற்கு ஆயிரம் காரணங்கள் இருப்பினும் - தாம் என்ற குற்றச்சாட்டிற்கும் இதன் மூலம் தமிழ் மக்கள் உரிமைபோராட்டத்தை அரசியல் பின்னடைவுக்கு உள்ளாக்கியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டை பாத்திரமாகியுள்ளனர்.

யுத்தத்தில் வெல்வதுஎன்பது அரசியல் ரீதியான பலத்தில் தான் பிரதான மாக தங்கியுள்ளது என்ற உண்மையை புலிகள் மூன்றாவது தடவையாகவும் மறந்து விட்டிருந்தனர். முதற்தடவை இந்தியப்படையினருடான யுத்தத்தின் போதும் இரண்டாவது தடவையாக பிரேமதாச காலத்து யுத்தத்தின்போதும் புலிகள் விட்ட அரசியற் தவறு போராட்டத்தை மிகுந்த பின்னடைவுக்கு உள்ளாக்கியது என்பதை அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இராணுவ ரீதியில் அவர்கள் இறுதியில் வெற்றி பெற்றிருந்த போதும், அரசியல் ரீதியாக போராட்டத்தை மாபெரும் பின்னடைவுக்கு உள்ளாக்கியுள்ளனர் என்பது தான் உண்மை. இத்தகைய அரசியல் தோல்விகள் நீண்ட கால நோக்கில் இராணுவ ரீதியிலான தோல்விகட்கும் தவிர்க்க முடியாமல் வழிவகுக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கவில்லை. தவிரவும் இத்தகைய தவறுகள் மக்களை மேலும் மேலும் சொல்லொன்னாத் துயரத்துள் அமிழ்த்துகின்றன என்ற உண்மையைக்கூட அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை.

இந்த அரசாங்கத்தின் சமாதான பேச்சுவார்த்தை காலத்தின் போது புலிகள் தாக்குதலை திருமலையில் தொடங்கியமை, தமது அரசியல் முன் முயற்சியை விட, தமது அரசியற் பலத்தைவிட, இராணுவ பலத்திலேயே அவர்களது நம்பிக்கை பிரதானமாக இருக்கிறது என்பதையே காட்டியது.

தவிரவும், தமது ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் மக்களிடையே தமது இருப்பை பேணுவதற்கு, பயன்படுத்திய ஜனநாயக விரோத வழிமுறைகள், விடுதலையின் பெயரால் நியாயப்படுத்தப்பட்ட மாற்றுக் கருத்துக்கள் மீதான தடை, முஸ்லிம் மக்கள் தொடர்பாக அவர்கள் எடுத்த மோசமான முடிவுகள், போன்றவை அவர்களுக்கு எதிரான சக்திகளை இந்த அரசாங்கம் தன்னுடன் வியூகமமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பை நன்றாகவே ஏற்படுத்தி இருந்தன.

முன்னைய அரசாங்கங்களின் திட்டமிட்ட குடியேற்றங்கள் மீதான புலிகளது தாக்குதல்கள் இவர்களை உலக மக்களினதும், சிங்கள மக்களினதும் முன்னால் மேலும் அரசியல் ரீதியில் அம்பலமாக்கியுள்ளன. தென்னிலங்கையிலுள்ள, தமிழ் மக்களது விடுதலை, ஜனநாயக உரிமைகள் மீது அக்கறையுள்ள சக்திகளை மேலும் மேலும் இனவாத சக்திகளை நோக்கித் தள்ளிவிடுவதில் இந்நடவடிக்கைகள் நிறையவே பங்களிப்புச் செய்தன. இவையெல்லாம் இந்த அரசாங்கம் போன்ற ஒரு போலி ஜனநாயக அரசுக்கு பெரியளவுக்கு பலம் சேர்ப்பவையாக இருந்தன.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததற்கான காரணம் இராணுவ ரீதியான காரணமாக இருந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அதுவும் - ஒரு அரசியல் தீர்வை முன்வைக்காமலே யுத்தத்திலீடுபடுவதை - நியாயப்படுத்தும் வாய்ப்பை உருவாக்கியிருந்தது. அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களைப் பேசி அவற்றிலே முறிவு ஏற்பட்டிருக்குமாயின் அத்தகைய ஒரு முறிவு அரசியல் ரீதியில் இன்றுள்ளது போன்று ஒரு கையறு நிலையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்காது.

இந்த யுத்தம் தொடங்கிய பின், வலிகாமத்திலிருந்து முழு மக்களும் வெளியேறிய பின்னும், அவர்களுக்கான உதவிகள் செய்ய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உரிமை மறுக்கப்பட்ட பின்னும், தொடர்புசாதனங்கள் எதையுமே அனுமதிக்காமல் செய்தித்தணிக்கையை வைத்துக் கொண்டே மக்கள் மீது ஒரு யுத்தத்தை அரசு கட்டவிழ்த்து விட்ட போதும், அரசாங்கம் எத்தகைய அரசியல் எதிர்ப்பை உள்ளேயும் சரி வெளியிலிருந்தும் சரி, குறிப்பிடத்தக்க அளவுக்கு பெறவில்லை என்றால், தமிழ் மக்களது இந்தப் பரிதாப நிலைக்கு புலிகளின் அரசியல் முன் முயற்சியின்மையே பிரதான காரணமாகும். ஆக, அரசுக்கு எதிரான சக்திகளை ஒன்றுதிரட்டி தம்மால் வென்றெடுக்கவும், தமக்கு ஆதரவாக நிறுத்தவும், தமது அரசியற் கோரிக்கையின் நியாயத்தன்மையை உறுதியாக வலியுறுத்தவும் வேண்டிய அடிப்படை கெரில்லா அரசியல் நெறிமுறையை புலிகள் கவனமெடுக்காமல் விட்டிருந்தமையே இன்றைய தோல்விக்கான அது தற்காலிகமான பின்னடைவே என்பதை புலிகள் சொன்ன போதும் - முக்கியமான காரணமாகும்.

உண்மையில் இந்த அரசாங்கம் புலிகளுடன் யுத்தத்தை நடாத்துவது என்று கூறி, சமாதானத்துக்கு அவசியமானதே இந்த யுத்தம் என்பதை மிகவும் வெற்றிகரமாக நம்பவைத்துக் கொண்டிருக்கிறது. பல தமிழ் புத்திஜீவிகள் முதல், தமிழ் கட்சிகள் வரை இந்த 'சமாதான யுத்தத்தை' ஆதரிப்பதற்கு காரணம் அரசாங்கத்தினைச் சார்ந்து நிற்பதை விட அவர்களுக்கு வேறு மாற்று வழி இன்மையால் என்பதும், ஒரு முக்கியமான காரணமாகும். ஆனால் உண்மையில் இந்த யுத்தம் புலிகளுக்கு எதிரானதா அல்லது மக்களுக்கும் அவர்களது அரசியல் உரிமைகட்கும் எதிரானதா என்பதை கூர்ந்து கவனிப்பவர்கள் புரிந்து கொள்ளலாம். வடக்கின் மீதான பொருளாதாரத் தடை, பணம் எடுத்துச் செலத் தடை, கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழ் மக்கள் மீது காட்டப்படும் பாரபட்சமான நடைமுறைகள் இந்த யுத்தத்தை தமிழ் மக்களின் மீதான யுத்தமாகவே இனங்காட்டுகின்றன. சில பத்திரிகையாளர்கள் குறிப்பிட்டதுபோல, புலிகளுடனான யுத்தத்தில் இது தவிர்க்க முடியாத ஒன்று என்று லேசாக எடுத்துவிட முடியாது. ஏனென்றால் இன்றைய அரசின் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள், சாதாரண தனிப்பட்ட நபர்களதும், நிறுவனங்களதும், முயற்சிகளை விட மிகவும் அற்பமானவையாகவே உள்ளன! பேச்சு வார்த்தைக்கு வருவதானால் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு வர வேண்டும் என்று சொல்வது, பேச்சுவார்த்தைக்கும் சமாதான முயற்சிக்கும் வைக்கப்படும் முதலாவது பெரிய முட்டுக்கட்டையாகும். ஆயுதங்களை கீழே போடுவது என்பது சரணாகதி என்பதும், சரணாகதி அடைபவர்களுக்கும் சம அந்தஸ்து கொடுக்கும் அளவுக்கு இலங்கை ஜனாதிபதியும் அரசாங்கமும் தம்மை இதை எழுதுகிற கணம் வரை மெய்ப்பித்த தில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இன்று தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும் இடம் பெயர்ந்துள்ள, வவுனியா வந்து நிர்க்கதி ஆகியுள்ள மக்களின் எதிர்காலம் தான் என்ன? அவர்களை திரும்ப பழைய இடங்களுக்கு திரும்பி வருமாறு அரசாங்கம் அழைத்துள்ளது. இந்த அழைப்பு மக்களை பகடைக்காய் ஆக்கி விளையாடும் அரசியல் நெருக்கடி அல்ல என்பதற்கு உத்தவாதம்? அவர்கள் திரும்பிப் போவதை மறுக்கும் புலிகளுக்கு அரசியல் ரீதியாக கொடுக்கின்ற ஒரு நெருக்கடியல்ல என்பதற்கு என்ன உத்தரவாதம்? வலிகாமத்தில் இராணுவம் எவ்வாறு நடந்து கொள்ளுமோ என்ற அச்சமல்ல, புலிகளது மிரட்டலே மக்களை அங்கிருந்து அகதியாக விரட்டியது என்ற வாதத்தினை சொந்தப் புத்தியும், யாழ்ப்பாண யுத்த கால நிலைமை அனுபவங்களும் உள்ள ஒருவர் முற்று முழுதாக நம்பமுடியாது. ஏற்கெனவே மக்கள் மீது தொடர்ச்சியான ஷெல்லடிகளையும், குண்டுமாரிகளையும் பொழிந்த படையினர், அந்த மக்களுடன் நன்றாக நடப்பார்கள் என்பதை நம்பவைக்காமல் அவர்களை போகுமாறு கூறுவது வெறும் தட்டிக்கழிப்பு நடவடிக்கை மட்டுமேயன்றி வேறு ஏதுவுமாக இருக்க முடியாது. பென்சன்நியர்கள் இனிமேல் வவுனியா வந்து பென்சன் எடுக்கவேண்டும் என்பது இன்னும் ஒருபடி மேலே போய் இந்த அரசாங்கம் அகதிகள் விடயத்தை எப்படி அணுகப்போகின்றது என்பதைக்காட்டுகின்றது.

'அரசியல் தீர்வுப் பொதி' இப்போது, 'சுதுநெலும்' காரர்கள் நேரம் வந்தால் மட்டும் கதைக்கும் விவகாரமாகிப் போய்விட்டது. ஜனாதிபதி மட்டும்தான் அதை எப்போதாவது ஞாபகம் வைத்திருந்து குறிப்பிடுகிறார். அரசாங்கம் அதன் பெயரைத்தவிர மற்றவற்றை மறந்து விட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. இராணுவ வெற்றிகள் அடுத்தடுத்து தொடருமானால், அவற்றை வீசி விடவும் இந்த அரசு தயங்காது என்பதற்கு இவையெல்லாம் நல்ல உதாரணங்கள்.

வடக்கே சிங்கக்கொடியை பறக்கவிடுவதாலும், யுத்தத்தை தொடர்ந்து நடாத்தி புலிகளின் வாலை ஒட்ட நறுக்கிவிடுவதாலும், பிளவுண்டுள்ள தேசங்களை ஒன்றாக இணைத்து விட முடியாது; சமாதானத்தையோ ஐக்கியத்தையோ, சாதித்துவிட முடியாது. இவற்றால் நாட்டை மேலும் மேலும் பிளவுபடுத்த மட்டுமே முடியும். மாறாக, அரசியல் ரீதியான தீர்வு ஒன்றை கண்டு அவற்றை மகாபக்குவமாக நடைமுறைப் படுத்துவதற்கான வழிகளை உருவாக்குவதன் மூலமாக, தமிழ் மக்கள் இனரீதியான ஒடுக்கு முறையிலிருந்து விடுபடமுடியும் என்பதை நம்பும் ஒரு சூழலை உருவாக்க வேண்டும். அப்போதுதான் பிளவுண்ட தேசங்கள் ஐக்கியப்படல் சாத்தியம். இந்த அடிப்படை கணக்கெடுக்காவிட்டால், இந்த வெற்றி 'சமாதானத்திற்கான ஆரம்பப்படி' அல்ல. சமாதானத்தின் சவக்கிடங்குக்கான முதலாவது வெட்டு ஆகவே அமையும். வேறுவார்த்தையில் சொன்னால் நாட்டைப்பிளப்பதற்கான பொ.ஐ.ஐ.மு. அரசாங்கத்தின் ஆரம்பப்படியாக இது அமையும்!




நாச மறைப்பான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# சொல்வதைத்தவிர வேறு வழியில்லை

## "மயானங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதற்காக காத்திருக்கவில்லை!"

நாம் எங்கெங்கு அலைந்து திரியினும் - கந்தல் துணி கட்டி கஞ்சிக்கு வழியில்லாது இருப்பினும்; சோற்றுப்பருக்கைக்காய் எமது குழந்தைகள் நெஞ்சம் வெடித்தழும் ஈனப் பொழுதுகளிலும் உரத்துச் சொல்லத்தயங் கோம்- எமது மண் யாழ்ப்பாணமே. நாமும் அங்குதான் பிறந்தோம். எமது மூதாதையர்க ளின் எலும்புகள் உக்கிப்போன அடக்கஸ்த லங்களும் வானுயர மினாராக்கலிருந்து காற் றில் தவழ்ந்து வந்த ''பாங்கொலி'' ஒலித்த பள்ளிவாசல்களும் அங்குதான் உள்ளன.

துரத்தப்பட்டவர்களாய் இங்கு நாம் தவித் துக்கிடக்கிறோம்: உண்ண உணவில்லை. உடுக்க உடையில்லை, படுக்க இடமில்லை. ''பரதேசியாய்'' வாழ்வு தேய்ந்து போகிறது. அரை தசாப்தத்திற்கு மேலாய் நரக வாழ்வின் அவலத்திலிருந்து தப்பி - எப்போது எமது பிறந்த மண்ணுக்குச் செல்வோம் எனக் காத் திருந்தோம்.

காத்திருத்தலின் இறுதி நம்பிக்கையும் ''ரிவி ரெச'' கொடும் வெள்ளத்தின் மூலம் அழித் துச் செல்லப்பட்டு விட்டது; எமது வீடுகள் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றன. எமது மண் பேய் அலையும் மயானமாய் மாறிக் கிடக்கி றது. எங்களை இரக்கமில்லாது துரத்திய புலி கள் ஓடிவிட்டார்கள் என்று சந்தோசப் பட லாம்தான். ஆனால் எங்களை வாஞ்சையு டன் வாரியணைத்த தமிழ் மக்கள் இப்போது அனைத்தையும் இழந்து எங்களைப்போல் தவித்து நிற்கின்றனரே.

எங்களைத்துரத்தியவர்களை; நாங்கள் வெறுக்கத்தயங்காத பொழுதினிலும் - நாங் கள் தமிழ் மக்களை நேசிக்கிறோம். அவர்க ளின் துன்பம் எங்களையும் சுடுகிறது. அவர் களின் கண்ணீர் எங்களையும் நனைக்கிறது. அம்மக்களின் சமாதிகள் மீது நாங்கள் மாட மாளிகை கட்ட வேண்டுமென ஒரு போதும் விரும்பவில்லை! விரும்பப்போவது மில்லை! எங்கள் மார்க்கமும் இதைத்தான் சொல்கிறது.

யாழ் மண்ணிலிருந்து புலிக்கொடிகளை அகற்றிவிட்டு சிங்கக் கொடிகளை பறக்கவி டுவதால் எங்கள் வாழ்வில் வசந்தம் வரப் போவதாக சொல்வதில் எந்த உண்மையும் இல்லை. கொடிகளை மாற்றுவதில் எமது வாழ்வு மலர்ந்து விடுமென சொல்பவர்கள் வெறும் முட்டாள்களாகவே இருப்பார்கள்.

நாங்கள் அனைத்தையும் இழந்துதான் வந் தோம்; ஆனால் எங்கள் இருதயங்கள் எங்க ளிடம்தான் இருக்கிறது. உப்புக்கரிக்கும் புத்த ளம் என்றால் என்ன? மூச்சுவிடக் கூட அனு மதி பெற வேண்டிய கொழும்பு என்றால் என்ன? எங்கள் இருதயங்கள் எங்களுட னேயே இருக்கிறது. எங்கள் இருதயங்களை கொன்றுவிட்டு எம்மை மயானங்களுக்கு கொண்டு செல்லப் போகிறார்களா?

யாழ் மண்ணைப் பிடிக்கும் இராணுவத்தின் சாதனைகளை அரசாங்கத்தின் தொடர்பு சாத னங்கள் விளம்பரப்படுத்தும் போது - புத்தள வாசிகள் சொல்கிறார்கள்:- ''அகதியே, நீ இனி யாழ்ப்பாணத்திற்குப் போகலாம்! எங் கள் மண்ணையும் எங்கள் வளங்களையும் ஆக்கிரமித்திருக்கிறீர்கள், உடனடியாக போய்விடுங்கள்'' என்று கொழும்பில் இருக் கும் அகதி முகாம்களை சுற்றி இருப்பவர்கள் இனி இந்தத் தீண்டத்தகாதவர்களை துரத்தி விடலாம் என முறைத்துக் கொண்டிருக்கி றார்கள். ''யாழ்ப்பாணத்திற்கு ''ஆமி' போனபின் நீங்கள் இனி போகலாம்தானே'' சந்திப்பவர்கள் ஒவ்வொருவரும் நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். இது பயம் தருவ தாய் இருப்பதுடன் வன்முறையின் முதல் எச்சரிக்கையாகவும் இருக்கிறது!

எங்கள் வாழ்வு 1990க்குப் பின் இப்படித் தான் இருக்குமென எழுதப்பட்டிருக்கி றதோ? எங்கள் மக்கள் பயந்து போய் கிடக் கின்றனர். செத்தாலும் - சிறைக்கூடங்க ளுக்கு அழைத்துச் செல்லப்படும் மயானவா சிகளாக நாங்கள் யாழ்ப்பாணம் போக ஒரு போதும் தயாரில்லை! அன்று துப்பாக்கி முனையில் எங்கள் தாயகத்திலிருந்து எங் களை புலிகள் அனுப்பி வைத்தார்கள். இன்று துப்பாக்கி முனையின் ஊடே தெற்கிலிருந்து எங்களை அரசாங்கம் அனுப்பப்பார்க்கிறது.

யாழ் முஸ்லிம் மக்களின் தலைகளின் மேல் தான் சிங்கள அரசின் ராணுவ வெற்றி கொண்டாடப்படப்போவதாக கதைகள் பர வலாக அடிபடுகின்றது. இப்போது நடந்து கொண்டிருப்பது கௌரவ யுத்தம். அரசு என் றாலும், புலிகள் என்றாலும் இது பொருந் தும். இக் கௌரவ யுத்தங்களின் போது அப் பாவி தலைகள் வெட்டிச்சாய்க்கப்படுவதும் அப்பாவிகள் பலிக்கடாக்களாக்கப்படுவ தும் வரலாற்றுக்காலம் தொட்டே தொடரும் சோகமாகும். இச்சோகம் இன்று எம்மையும் பயமுறுத்துகிறது.

நாங்கள் ''சோனகத்தெருவுக்கும்'','' பொம்மை வெளிக்கும்'', ''பறங்கித்தெரு வுக்கும்'', ''செம்மாத்தெருவுக்கும்'', சாவகச் சேரிக்கும்'' ,நாச்சிக்குடாவுக்கும்'' போய்- எம்மண்ணில் சுதந்திரமாக நடப்பதற்கு அவாக் கொண்டுதான் இருக்கிறோம். அது துப்பாக்கி முழங்காத நிறந்தர சமாதானமிக்க தமிழ் மக்கள் சுதந்திரமாய் சூழ இருக்க; நல் லூர், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், தொண் டமானாறு கோயில்களில் திருவிழா நடக்க - பள்ளிவாசல்களில் பாங்கொலிக்க சாத்திய மான சூழலில்தான் நாங்கள் போகத்தயாராக இருக்கிறோம். மாறாக உயிரைக் கையில் பிடித்தலையும் நிச்சயமற்ற சூழலில், இருப்பை அச்சுறுத்தும் நாய்கள் ஊளையி டும் பயங்கர பொழுது கவியும் பிரதேசங்க ளில் நாங்கள் வாழ ஆசைப்படவில்லை.

1990ல் புலிகளுக்கும் அரசுக்குமிடையே இரண்டாவது ஈழயுத்தம் ஆரம்பிக்கப்பட்ட சில மாதங்களின் பின்; மன்னார்தீவு இராணு வத்தின் வசமானது. மன்னார்தீவிலிருந்து புலிகளினால் விரட்டப்பட்ட முஸ்லிம்களை மன்னார்த்தீவிற்கு கொண்டுசென்ற மீளக்கு டியேற்றுவதற்கு கடந்த அரசு பகீரதப் பிரயத் தனம் மேற்கொண்டதும் - கடந்த அரசில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்கள் மன் னார்கதீவிற்கு முஸ்லிம்களை போக வலியு றுத்தியும் மன்னார்தீவு முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் அங்கு போவ தற்கு தயாராக இருக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த விடயம்.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் தங்களு டைய நலன்களுக்காக வேண்டி சந்தர்ப்ப வாத முடிவுகளை இவ்வகதிகள் விடயத்தில் எடுப்பது இம்மக்களை தற்கொலைக்குத் தள் ளுவதாகவே அமையும். நிரந்தரத்தீர்வு அல் லத நிரந்தர அமைதி வருவதற்கு முன், முஸ் லிம்கள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்படுவது குறித்து முஸ்லிம் அரசியல் தலைமைகள் தீர்க்கமாக தங்களுடைய முடி வுகளையும்- நிலைப்பாடுகளையும் பகிரங்க மாக வெளிப்படுத்தவேண்டும்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றால் என்ன? அல்லது ஏனைய முஸ்லிம் அரசி யல் கட்சிகள் என்றால் என்ன? அல்லது பொதுஜனமுன்னணியில், ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தலை மைகள் என்றால் என்ன? அல்லது வடமா காண மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் என்றால் என்ன? இவ்விடயத் தில் தங்களது நிலைப்பாட்டை இம்மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவது இன்று அவசி யமானதாகிவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இன் றைய அரசாங்கத்தில் புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சராக இருக்கும் எம்.எச். எம். அஷ்ரஃப்புக்கும் இந்த விடயத்தில் என்ன நிலைப்பாடு உள்ளது என்பது மிக வும் முக்கியமானது. ஒன்று:- வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் முஸ்லிம் காங்கிரசிடமே இருக்கிறது என அஷ்ரஃப் சொல்வதாலும், இரண்டு; மீளக்கு டியேற்றத்திற்கும் புனர்வாழ்விற்கும் பொறுப்பான அமைச்சராக இவர் இருப்பத னாலுமாகும். இதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நிலை கட்டாயமாக இவ்விடயத் தில் தெளிவுபடுத்தப்படவும் வேண்டுமென வடமாகாண முஸ்லிம்கள் விரும்புகிறார்கள்.

எமது மக்கள் துப்பாக்கிகளையும் மனிதாபி மானமற்ற அதிகாரங்களையும் வெறுக்கிறார் கள். அது புலிகள் என்றால் என்ன? இலங்கை அரசாங்கம் என்றால் என்ன?



# தவறுகளின் விலை - செலுத்துவது மலையக மக்கள்



மலையக மக்கள் மீதான அரச பயங்கர வாதம் அவர்களது இருநூற்றாண்டுகால வர லாற்றில் அவர்கள் மீது திணிக்கப்பட்டு வரும் ஒன்றாகும். சுதந்திர இலங்கையின் பரிமாணங்கள் இவற்றில் பயங்கரமானவை யாக மாறிவந்திருக்கின்றன. மலையகத்த மிழ் மக்களது வாழ்வுரிமை பறிக்கப்பட்டு 50 ஆண்டுகளை எட்டப்போகின்ற இவ்வே ளையில் கூட இன்னும் 5,000,00 மக்கள் (இ) சனநாயகத்தின் கண்களான வாக்குரிமை யும், பிரசாவுரிமையும் இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

மலையக மக்கள் மீதான பொலிஸ் தாக்குதல் வரலாற்று ரீதியாக 1939ம் ஆண்டு வரலாற்று புகழ் பூத்த வெலஸ்ஸ தோட்டப் போராட்டத் தின் போது முதன் முதலாக நடத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து முல்லோயா டெவன், கீரைக்கொல்லை, கொட்டியா கொல்லை போராட்டங்களின் போதும் எண்ணிறைந்த சந்தர்ப்பங்களிலும் பொலீஸ், இராணுவ, மற் றும் குண்டர் தாக்குதல்கள் அரச ஆதரவுடன் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில் வடகிழக்கு மலையகத் தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தையும், பேரினவாத அழித்தொழிப்பு ஆட்சியையும் எதிர்கொண்ட வட-கிழக்கு இளைஞர்களின் ஆயுதம் தாங்கிய எழுச்சி தவிர்க்க முடியாத தாக்கத்தை மலையகத்திலும் ஏற்படுத்தியது. வட-கிழக்கின் அதிர்வுகள் மலையகத்திலும் எதிரொலித்தன. இதன் விளைவாக பல நூற் றுக்கணக்கான மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும், காணாமல் போயிருப்பதோடு பல்லாயிரக்க ணக்கான இளைஞர்கள் அடையாள அட் டையில்லாத காரணத்தால் மட்டுமல்ல அடையாள அட்டையில் ''தமிழர்'' என அடையாளப்படுத்தப் பட்டிருப்பதாலும் கைது செய்யப்படுகின்றனர்.

இக்கைதுகளும், காணாமல் போதல்களும் 1977ம் ஆண்டின் பின்னரான காலப்பகுதி யில் உக்கிரமாக நடந்திருக்கிறது. இவற்றுக் கான தார்மீக ஆதரவை மலையக அரசியல், தொழிற்சங்க, தொண்டர் தாபனங்கள் வழங் கியுள்ளன என்பதற்கு மறுக்கப்பட முடியாத சான்றுகளுண்டு.

தென்னிலங்கையில் 89/90ம் ஆண்டுகளில் எழுந்த கிளர்ச்சியின் போது பதுளை மாவட் டத்தில் 150க்கும் மேலான மலையக தமிழ் இளைஞர்களும் சப்பிரகமுவ மாகாணத்தில் பல இளைஞர்களும் காணாமல் போனார் கள். சனாதிபதி பிரேமதசாவின் கொலையை அடுத்து வந்த டி.பி. விஜே துங்க ஆட்சியில் ஆயிரம் ஆயிரமாய் மலை யக இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்ச்சிப் போக்கு கொழும்பிலும் புறந கர் பகுதியிலும் இருந்த நிலைமாறி இன்று மலையகத்தின் ஒவ்வொரு தமிழ் இளைஞ னையும், ஒவ்வொரு தோட்டங்களையும், நகரங்களையும் எட்டியிருக்கிறது.

உக்கிரமான விடுதலைப் போர் நடக்கும் வட கிழக்கு மாகாணங்களின் நிலையைப் போன்றே மலையகத்தின் நிலையும் இன்றி ருக்கிறது. மலையக நகரங்களும், தோட்டங் களும் மலையக இளைஞர்களுக்கு பாதுகாப் பற்றவையாக மாறிவருகின்றன. அண்மைக் காலங்களில் கொலன்னாவ, ஒருகொடவத்த எண்ணைய்க்குதத் தாக்குதலின் பின்னரான சம்பவங்களில் மலையக இளைஞர்/யுவதி கள் காடையர் கூட்டங்களாலும், பொலிஸ், இராணுவ குழுக்களாலும், கண்மூடித்தன மாக வதைக்கப்பட்டமை (சரிநிகரில்) அம்ப லப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் உண்மை நிலை அதனிலும் கொடூரமானது.

இந்நிலையில் ''மலையக விடுதலை முன்ன ணி'' இளைஞர்கள் கைது செய்யப்பட்டு ஒரு வருடகாலம் பூர்த்தயாகிவிட்டபோதும் அவர்களது விடுதலைபற்றியோ, விசா ரணை பற்றியோ எந்த வித விபரமும் பெறமு டியாத இறுக்கமான நிலைமை நிலவுகின்றது. டாக்டர் சாந்தகுமார் ஆறுமுகம் காளிமுத்து, பிரான்சிஸ் சந்திரகுமார் உட்பட கைது செய் யப்பட்ட இளைஞர்கள் குறித்து மலையக அரசியல், தொழிற்சங்க, தொண்டர் நலதாப னங்களின் நிலைப்பாடு என்ன என்பது தெரி யாதிருப்பதோடு அவை மௌனமாக இதனை அங்கீகரிக்கின்றனவா எனவும் வினா எழுப்ப வேண்டியுமுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு அமைத் துள்ள மலைநாட்டின் (தாண்டி குளங்கள்) தடை முகாம்களில் நீண்ட வரிசையில் நிறுத் தப்படும் மலையக இளைஞர்களும், மக்க ளும் தாம் செய்த குற்றம் என்னவென்று தெரி யாமல் சிங்கள பொலீசாரின் ஒடுக்குமு றைக்கு உள்ளாக்கப்பட்டு வருவது வரலாற் றின் இன்னொறு தவறை அரசு தெரிந்தும் செய்வதைக் காட்டுகிறது.

அட்டன், தலவாக்கலை, நுவரெலியா, பதுளை, அப்புத்தளை, களுத்துறை, நோர் வூட், பொகவந்தலாவ, மஸ்கெலியாவில் எல்லாம் புலிகள் நடமாடுவதாகக் கூறி அர சாங்கம் மேற்கொள்ளும் வக்கரித்த இன வொழிப்பு ஆக்கிரமிப்பு மற்றும் மேலாதிக்க நடவடிக்கைகள் ஏற்படுத்தும் எதிர்விளைவு களை எவரும் உய்த்துணராமல் இருக்க முடி யாது. வரலாற்றின் இன்னொரு தவறுக்கான விலையும் அதிகமாகத்தான் இருக்கப் போகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானத் தீர்வு: மாயை(ம்)மான்!



ஈழபாரதி

தமிழ் மக்கள் மட்டுமல்ல சமாதானத்தை விரும்பிய-அநேக சிங்கள மக்களும் விரும்பிய நம்பிய தலைவி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க. இவரது பெயரிலேயே சமாதானம் மறைந்திருப்பதாக எல்லோருக்கும் ஒரு பிரமை. இவர் 62வீதமான வாக்குகளை பெற்றதை வைத்து இலங்கையில் இனவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதாக பலர் கூக்குரலிட்டனர். இந்த எதிர்பார்ப்புக்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் முக்கிய காரணம் அவருடைய பெயரில் ஒட்டியுள்ள குமாரணதுங்க என்ற பெயர். ஆம்! விஜய குமாரணதுங்க பற்றிய அபிப்பிராயம் தெற்கில் அவ்வாறுதான் உள்ளது.

இன்றைய நாட்டின் ஜனாதிபதி இலங்கையில் இனவாதத்தை பாரியளவில் நடைமுறைப்படுத்துவதில் முன்நின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர்களில் ஒருவர் மட்டுமல்ல முன்னாள் ஐக்கிய சோசலிச முன்னணியின் (U.S.A) தலைவர்களில் ஒருவராக இருந்து, தன்னை ஒரு மார்ஸ்ஸிட்டாக வெளிப்படுத்தியவர், என்பது தான் இலங்கை அரசியலில் முரண்நகை!

எப்படி சந்திரிகா குமாரதுங்க என்ற தனிநபரை மட்டும் முன்னிலைப்படுத்திப் பார்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சிங்கள மக்கள் மறந்தார்களோ, அவ்வாறே சில தமிழ் புத்திஜீவிகளும் கூட மறந்தனர். இன்று சந்திரிகா குமாரணதுங்க சிங்கள பௌத்த பேரினவாத கட்சியின் தலைவி, அக்கட்சியையும், அதன் கொள்கைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர். இவர் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக முன்வைத்துள்ள யோசனைகள் வரவேற்கக்கூடியவை மட்டுமே. பாராட்டக்கூடியவையல்ல. ஏனெனில் இவை ஒற்றையாட்சிமுறையை மாற்றி சில அதிகாரங்களைப் பகிர்ந்து ஒன்றியம் ஒன்றை உருவாக்க யோசனை கூறியுள்ள போதும், இலங்கை ஒரு பௌத்த நாடு என இந்த யோசனைகளில் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை தொடர்ந்தும் நிலைநாட்டுவதற்கு சாதகமாக இருக்கும் சில முக்கிய அமைச்சுக்களான பாதுகாப்பு அமைச்சு, பௌத்தசாசன அமைச்சு என்பனவும், தொல்பொருள் திணைக்களம், சுவடிகள் திணைக்களம் என்பனவும் முக்கிய திணைக்களங்களாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்கின்றன.

சந்திரிகா மீதான நம்பகத்தன்மை இங்குதான் கேள்விக்குள்ளாகின்றது; சந்தேகப்படவைக்கின்றது. ஏனெனில் சந்திரிகா மாபெரும் வெற்றியீட்டி பதவிக்கு வந்த பொழுது, மட்டுமல்ல புலிகள் சமாதானத்தைக் குழப்பினார்கள் எனக் கூறப்படும் ஏப்பிரல் மாதம் வரை நாடு முழுவதும் எடுத்த கணிப்பீடு 16வீதமான மக்கள் மட்டுமே, இனப்பிரச்சினைக்கு யுத்தமே தீர்வு என நம்புகின்றனர் எனத் தெரிவித்தது.

ஆனால் அதன் பின் சமாதானப் பேச்சுவார்த்தை குழம்பிய பின் 67வீதமான சிங்கள மக்கள் யுத்தமூலமான தீர்வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த இருகணிப்பீட்டையும் செய்தவர்கள் சர்வதேச மிட்ரோவேஸ்கி (Mitofsky International) என்ற குழுவைச் சேர்ந்தவர்கள். சந்திரிகா மீதான நம்பிக்கையீனம், பெரிதாக ஒன்றுமில்லாத தீர்வு யோசனைகளை பதவிக்கு வந்த போதே வெளியிடாமல் இழுத்தடித்ததுடன் பிணைந்துள்ளது என்றால் மிகையல்ல. அன்று இருந்த மக்கள் ஆதரவுடன் ஏன் சந்திரிகா அவர்கள் தீர்வு யோசனைகளை முன் வைக்கவில்லை? சிங்கள மக்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்பட்ட பின் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டதற்கு காரணம் என்ன? இந்த இழுத்தடிப்பு புலிகளுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களுக்கும் சந்திரிகா மீது சந்தேகத்தை உருவாக்கியது.

புலிகள் அரசியல் தீர்வு பற்றிம் பேசவில்லை. நடைமுறைப்பிரச்சினை பற்றியே பேசினர் என அரசதரப்பினர் கூறுகின்றனர். புலிகளிடம் தீர்வு யோசனைகள் தொடர்பான சில கருத்துக்களை முன் வைத்தோம், அவர்கள் அதைக் கணக்கிலும் எடுக்கவில்லை. பதிலும் கொடுக்கவில்லை என்கின்றனர். ஆனால் அரசே முதலில் மக்களின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு அரசியல் தீர்வு பற்றிப் பேசுவோம் எனக்கூறியது. புலிகளும் அரசியல் தீர்வை வைக்கும்படியான தமது அழுத்தத்தை பிரயோகிப்பதற்குப் திலாக மக்களின் நடைமுறைப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப்பாவித்தனர். அதற்குப் பாவிக்கப்பட்ட காய்தான் பூநகரி பாதை. அரசாங்கம் இப்பிரச்சினையில் சிக்கலில் மாட்டிக்கொண்டு பின் மீள்வதற்காக புலிகளே முதலில் நடைமுறைப் பிரச்சினைபற்றி பேசுவோம் எனக் கூறினர் எனப் பேச்சை மாற்றி விட்டது. எமக்குள்ள கேள்வி இது தான்; சமாதானத்தை விரும்பிய மக்களே சந்திரிகா அவர்களை இந்நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்தனர். புலிகளல்லவே.

ஆகவே தீர்வு யோசனைகளை முதன் முதலில் புலிகளின் முன் அல்ல மக்களின் முன்பே வைத்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல், தீர்வு யோசனைகளை முன்வைப்பதில் தயக்கம் காட்டியது ஏன்? இந்த தயக்கத்தை புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். இப்பொழுது புலிகள் மீது சமாதானத்தைக் குழப்பியவர்கள் என குற்றஞ் சாட்டுவது அர்த்தமற்றது. ஏனெனில் புலிகள் அப்படித்தான் செய்வார்கள். அது ஒரு கெரில்லா இயக்கம் என்பது மட்டுமல்ல, அவ்வியக்கம் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், தனது தலைமையைப் பாதுகாத்துக்கொள்ளவும்; தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆயுத பலத்துடன் கைப்பற்றி தன் வசம் வைத்துள்ளது. இவ்வியக்கம் பிழையான தலைமைத்துவத்தின் மூலம் இனவாத பாசிச நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. ஆனால் தம் நலன் கருதி இவர்கள் முன்வைக்கும் அரசியல் கோரிக்கைகளும் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் இன கலாசாரத் தனித்துவத்தைப் பாதுகாக்கவும், முன்வைக்கும் அரசியல் கோரிக்கைகளும் முரணானவைகளல்ல. இந்தக் கோரிக்கைகள் முரண் இல்லாதபடியால் தமிழ் மக்களும் புலிகளும் ஒன்று என நிறுவுவது இனவாதிகளதும் அரசாங்கத்திற்கு வால் பிடிப்பவர்களதும் செயல். ஆனால் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கத்திற்கு ஒரு பொறுப்பு இருந்தது. அந்தக் கடமையைச் செய்வதில் இருந்து முதலில் தவறியது சந்திரிகா அவர்கள் தலைமை வகிக்கும் அரசாங்கமே என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. அரசாங்கம் தாம் முன்வைத்ததாக கூறப்படும் தீர்வு யோசனைகளை தமது பிரதிநிதியான அரசாங்க அதிபருக்கு கூட இது வரை உத்தியோக பூர்வமாக அனுப்பிவைக்காமல் விட்டது நகைப்புக்கிடமானது.

யாழ் நகர் மீது வடபகுதி மக்களை புலிகளிடம் இருந்து விடுவிப்பதற்கான யுத்தத்தை மேற்கொண்டது. விடுவிக்கப்பட்ட இடங்களில், மக்கள் இல்லை. இப்பொழுது வலிகாமத்திலும் மக்கள் இல்லை எனத்தெரியவருகிறது. ஆகவே உண்மையில் இலங்கை இராணுவம் வடபகுதி மக்களை விடுதலை செய்வதற்காக இப்போரை முன்னெடுக்கவில்லை. மாறாக, தமிழர்களின் தாயக மண்ணில் தனது ஆக்கிரமிப்பையே மேற்கொள்கின்றது.

தமிழர் தாயகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பில் யாழ் நகரைக் கைப்பற்றுவதே இலங்கை இராணுவத்தின் இறுதி நோக்காக இருந்தது. இந்த வெற்றியானது இனப்பிரச்சினையை தீர்க்காது என்பது மட்டுமல்ல யுத்தத்தையும் முடிவுக்கு கொண்டு வராது என சில சிங்கள புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரை ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. இரண்டுமே, சிங்கள பேரினவாதக் கட்சிகள் மட்டுமல்ல ஜே.வி.பி, புலிகள் என்ற 'பயங்கரவாதிகள்' உருவாவதற்குக் காரணமான அரசியல் சூழ்நிலைகளுக்கு வித்திட்டவையும் கூட.

இன்று புலிகளை அழிப்பது என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் யுத்தத்திற்கு ஆதரவாக ஏரிக்கரைப் பத்திரிகைகள் முதல், ரூபவாஹினி வரை,அனைத்து ஒலி/ஒளி பரப்புச் சேவைகளும் சிங்கள மக்களை யுத்த மனோபாவத்தில் வைத்திருக்க தம்மாலான பணியை செவ்வனே செய்கின்றன. ஏரிக்கரை ஆங்கிலப் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் ''இலங்கை கிரிக்கெட்டில் வென்றதைப்போல யுத்தத்திலும் வென்று வரவேண்டும்'' என கொச்சைத்தனமாகக் கூறியுள்ளது

முப்படைகளிலும் பதவி வகிக்கும் முன்னைய அரசாங்கம் பதவி வகித்தபோது ஜே.வி.பியை ஒழித்துக் கட்டுவது என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் படுகொலை செய்ததில் இவர்கள் பங்கு ஒன்றும் குளைவானதல்ல. அப்பொழுதெல்லாம் இந்நாட்டின் அதிமேன்மை தகு ஜனாதிபதி மட்டுமல்ல, சு. கட்சி, கூட்டுக் கட்சிகள், மற்றும் பல பத்திரிகை ஆசிரியர்கள், புத்திஜீவிகள், கண்டித்து அறிக்கைகள் மட்டும் விடவில்லை. அவற்றுக்கு எதிரான பல போராட்டங்களையும் நடத்தினர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

இன்று அதே இராணுவம் புதிய அரசாங்கத்தின் கட்டளைப்படி பணியாற்றுகிறது. அந்தத் தகுதியினால் மட்டும் இந்த இராணுவத்தினர் இன்று தேசிய வீரர்களாக, மண்ணின் மைந்தர்களாக, நாட்டைப்பாது காப்பவர்களாக, போற்றிவாழ்த்தப்படுகின்றனர். மக்கள் மட்டுமல்ல புத்திஜீவிகள் கூட 71ம் ஆண்டு அரசாங்கத்தை மறந்து, அதே கட்சி அரசாட்சி நடத்த ஆதரவளித்துள்ளனர். அதே போல 87ம் - 88ம் ஆண்டு இராணுவத்தினரின் செயல்களை மறந்து இன்று அவர்களை தமது காவலர்களாக அரவணைத்துபுலிகளைப் போல் வீரத்தியாகிகள் பட்டமும் கொடுக்கின்றனர்.

ஜே. ஆர். காலத்திலோ, பின்னர் பிரேமதாச காலத்திலோ இந்தப் தலைவர்களும், இவர்களது முப்படையினரும் தம் நடவடிக்கைகளால் மக்கள் முன் அம்பலப்பட்டுப்போயினர். அதனால் மக்கள் அவர்களுக்கு எதிராகப் போராடுவது பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால், ''மனிதாபிமான முகத்துடன்'' இன்று பதவி வகிக்கும் ஜனாதிபதியும் அவரின் கீழ் உள்ள முப்படையினரும் தம்மை மக்களின் நண்பர்களாக வெளிக்காட்டுபவர்கள். இதனால் முன்னையவர்களை விட பின்னையவர்கள் பயங்கரமானவர்கள். மக்களை மறைமுகமாக ஏமாற்றுபவர்கள். மக்கள் இவர்கள் மீதே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மக்கள் மட்டுமல்ல புத்திஜீவிகள் கூட வரலாற்றை திரும்பிப் பார்க்க எறுத்து விடுகின்றனர். இன்று தேசிய வீரர்களாக, மண்ணின் மைந்தர்களாக இருக்கும் இராணுவத்தினர், அப்பாவிச் சிங்கள மக்களுக்கு எதிராக தமது ஆயுதங்களை திருப்பும் நாள் வெகு தொலைவில் இல்லை.

புலிகளை ஒழிப்பது என்ற பெயரில் தமிழ் மக்களை அழிக்கும் ஐ.தே.கவையும், ஸ்ரீ.ல.சு.க.வையும், ஜே.வீ.பியை அழிப்பது என்ற பெயரில், சிங்கள இளைஞர்களை 71ம் ஆண்டு சு. கட்சியும் 87-89ம் ஆண்டுகளில் ஐ.தே.க.வும் அழித்ததையும் மறந்து மீண்டும் மீண்டும் மாறி மாறி, இவ்விரு கட்சிகளையும் ஆட்சி அதிகாரத்திற்கு தெரிவு செய்வதல்ல தமிழ், சிங்கள மக்களின் கடமை!

## கம்பன் கோட்டம்

## கரும்புலிக்குகையான கதை!

95. டிசெ.1இல் வெளியான ஆங்கில, சிங்கள தினசரிகளில் வெளியான ஒரு படம் தொடர்பான என் அதிர்ச்சியையும், வேதனையும் தெரிவிக்கும் நோக்குடன் இந்தக்கடிதத்தை எழுதுகிறேன். குறிப்பிட்ட அப்படம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட இருமாடிக்கட்டடம் ஒன்றினைக்குறிக்கிறது. அக்கட்டிடம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் தங்குமிடம் என குறிப்பிட்டபட்டிருந்தமை நான் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். கற்பனைகளும், பொய்யுரைகளும் வரைகடந்து போயின என்பதை உணர்ந்தேன்.

குறிப்பிட்ட அக்கட்டிடம் கம்பகோட்டம் எனப்படும் கோட்டமாகும். தமிழ்க் காப்பிய உலகின் பெரும் புலவன் கம்பனையும், அவன் இயற்றிய கம்பராமாயணத்தையும், இலங்காபுரியில் அறியாதவர் யார்?

இக்கம்பன் கோட்டத்தை கம்பன் கழகம் எனப்படும் கழகம் நிர்வகித்து வருகிறது. இக்கம்ப கழகத்தின் இளம் அங்கத்தவர்கள் என் போன்ற ஆசிரியர்களின் நான் மாணாக்கர்கள் ஆவார். அவர்கள் பொதுமக்களிடம் நிதிதிரட்டி உருவாக்கியதே கம்பன்கழகமும் கம்பன் கோட்டமும். அங்கு பல்லாயிரக்கணக்கான புத்தங்களும் அரும் பெரும் கலைப்பொக்கிஷங்களும் உள்ளன.

உங்களால் பிரசுரிக்கப்பட்ட குறிப்பட்ட அப்படத்தில், இராமனைப் பின்னணியாகக் கொண்டு தெரியும் 'அனுமான் எனப்படும் ஆஞ்சநேயரின் ஓவியம், இராமாயணக் காட்சிகள் வரையப்பட்ட ஓவியக்கட்டிங்கள் என்பன காணப்படுவது இதனை உறுதிப்படுத்துகிறது.

இந்த உண்மைகள் யாவற்றையும் கம்பன் கழகத்தின் காப்பாளர் என்ற முறையில் நான் உறுதிப்படுத்துகிறேன். சிங்கள, ஆங்கில நாளிதழ்களில் வெளியான அந்தப்படம் தொடர்பான தவறான அபிப்பிராயத்தை இந்தக் கடிதம் நீக்கும் என நம்புகிறேன்.

மேலும் அரசாங்கமானது அக்கம்பகோட்டத்தைப் பாதுகாக்க முழு நடவடிக்கையையும் எடுக்கும் எனவும் நம்புகிறேன்.

வித்துவான் வேலன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணத்தாக்குதலும் பொதுமக்களும்!

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி வந்த ஒருவர் நிலைமையை பின்வருமாறு விபரித்தார்.

''அங்கு ஒருவருடைய முகத்தையும் பார்க்கமுடியாது. எல்லோருடைய முகங்களும் பயத்தினால் இருண்டு விறைத்துப் போய் இருக்கின்றன. எல்லோருடைய பேச்சிலும் அர்த்தமற்ற விஷயங்களே காணப்படுகின்றன. தொடர்ச்சியாக கேட்கும் ஷெல் சத்தங்களை தாங்கவே முடியாது. இராணுவம் கைப்பற்றிய இடங்களில் அட்டூழியங்கள் இடம்பெறுவதாக பயங்கரமான தகவல்கள் உலாவுகின்றன. அவை உண்மையா பொய்யா என்று கூட அறிய முடியாது இருக்கின்றது. அவற்றை உதாசீனம் செய்து எவரும் அநாவசியமாக ஆபத்தில் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை. அங்கு எல்லோரும் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலை இழந்துவிட்டார்கள். பல வருட காலமாக நாங்கள் செம்மறி மந்தையைப் போலவே இப்போது நாம் செம்மறி மந்தைகள் போல் நடக்கின்றோம். உயிர்தப்ப வேண்டும் என்ற உணர்வில் மட்டுமே செயற்படுகிறோம். எல்லோருக்கும் விரைவில் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருக்கின்றது. நான் தங்கியிருந்த இடத்தருகே ஒரு விமானத் தாக்குதல் நிகழ்ந்தது. அங்கே பலர் கொல்லப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். நான் அந்தப்பக்கமே போகவில்லை. அதைப்பற்றி எதையுமே தெரிந்துகொள்ள விரும்பவில்லை. அங்கு சிலருக்கு மட்டுமே சரியான தகவல்கள் தெரியும். இன்னும் இரண்டு நாட்கள் த்ங்கியிருந்தால் எனக்கும் பைத்தியம் பிடித்திருக்கும். நானும் என் குடும்பத்துடன் யாழ்ப்பாணத்தை விட்டு கிளாலியைக் கடந்து கிளிநொச்சிக்கு வந்து விட்டேன்.''

யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையான மக்கள் தமது வீடு வாசல்களை விட்டுதென்மராட்சிப் பகுதிக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வருவது பற்றி உலகெங்கும் பிரச்சாரப்படுத்தப்பட்டது.

இதே வேளை விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாண எல்லைப் புறங்களில் பாதுகாப்பற்ற கிராமங்களில், சிங்கள மக்களை கண்மூடித்தனமாக படுகொலை செய்தனர். அவ்வாறு கொல்லப்பட்ட நூற்றுக்கும் அதிகமானவர்களில் பெண்களும் சிறுவர்களும் அடங்குவர்.

விடுதலைப்புலிகள் மக்களை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்படி பல வழிகளிலும் தூண்டினார்கள். ஒக்டோபர் மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் ஒன்றை விடுவித்தார்கள். அதில் ''எவரும் இவ்வறிவித்தலை அசட்டை செய்யக்கூடாது. நாங்கள் மிகுந்த துணிவுடன் பூதாகரமான சக்தி ஒன்றிக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் எம்மைப் பல முனைகளிலும் தாக்கக்கூடும். நாமும் அதே போன்று எதிர்த்தாக்குதலை தொடுப்போம். இனவாதத்தில் ஊறிப் போயுள்ள அரசை, நாம் முழத்துக்கு முழம் நின்று எதிர்த்துப் போராடப் போவதால் மக்கள் அனைவரும் இன்றே இரவோடிரவாக தென்மராட்சிக்கோ வடமராட்சிக்கோ போகுமாறு கோருறோம்.'' இவ்வறிவித்தலின் பின்னர் மறுநாள் விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் யாழ். வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். அங்கிருந்த வைத்தியசாலை அதிகாரிகள் தாம் என்ன செய்ய வேண்டும் என அவரிடம் பதற்றத்துடன் கேட்டனர். ஒலிபெருக்கியில் விடுக்கப்பட்ட அறிவித்தல் விடுதலைப்புலிகளால் தான் விடுக்கப்பட்டது என அறிவிக்கப்படாததால், நீங்கள் அதிகம் பதட்டப்படத்தேவையில்லை. ஆனாலும் ICRC அடையாளமிட்ட எல்லைக்குள் தங்கியிருப்பது அவ்வளவு சாத்தியமானது இல்லை எனவும், இராணுவத் தாக்குதல்களின் போது இரு தரப்பில் ஒருவராவது பாதுகாப்பு வலய ஒப்பந்தத்தை மீறினால் தாம் அதனை சுற்றி கண்ணிவெடிகளைப் புதைக்க வேண்டி வரும் என்றும், அதன் பின் நீங்கள் எவருமே இங்கிருந்து வெளியேற முடியாது எனவும் அவர் கூறினார். இன்னும் சில இடங்களில் முகங்களை மூடிக்கட்டியபடி வீடுகளுக்குள் புகுந்து விடுதலைப்புலி அங்கத்தவர்கள் மக்களை பீதிக்கொள்ளச் செய்கின்ற வகையில் நடந்துகொண்டுள்ளனர். அத்துடன் பெருந்தொகையான அகதிகள் செஞ்சிலுவைச்சங்க காரியலயத்துக்கு அருகிலுள்ள யாழ். ஜோன் பொஸ்கோ பாடசாலையில் தங்கியிருந்தார்கள். அவ்விடத்தில் விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட ஒரு வித றப்பர் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. அது தங்களை அங்கிருந்து வெளியேற்ற புலிகளால் அடிக்கப்பட்டது என மக்கள் ஊகித்துக் கொண்டார்கள்.

மக்கள் வெளியேறுவதற்கான பிரதானமான வேறு காரணங்கள், எல்லோருமே அறிந்தது போல் இலங்கை அரசாங்கத்தினதும் அதன் இராணுவத்தினதும் நடவடிக்கைகளினால் உருவானது ஆகும். அரசாங்கத்தினால் அளிக்கப்பட வேண்டிய சாத்தியமான ஒரு பாதுகாப்பு உத்தரவாதமும் யாழ்ப்பாண மக்ளுக்கு அதனால் வழங்கப்படவில்லை. ஆனாலும் அது அரசாங்கத்தின் பிரதான கடமையாகும். அதேவேளை நவம்பர் 2ம் திகதி அரசாங்கத்தினது இராணுவப் பேச்சாளர் பொதுமக்களில் 10பேர் மட்டுமே கொல்லப்பட்டதாக உறுதி செய்யப்படாத செய்திகள் சொல்வதாக கூறினார். யாழ் அரசாங்க அதிபரின் தகவல்களைக்கூட அவர் நிராகரித்தார். இதற்கு சற்று நேரத்துக்கு முன் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாநாயக்கா குமாரதுங்க அவர்களின் உரையில் இராணுவ நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறுவதோடு பொதுமக்களின் உயிரிழப்புக்கள் மிகவும் குறைவாகவே இருப்பதாகவும் கூறினார். ஆனால் வான் தாக்குதல்களும் ஷெல்வீச்சுக்களும் மோதல் நிகழ்ந்த பகுதிகளில் குடிமக்கள் செறிவாக உள்ள இடங்களிலேயே நடத்தப்பட்டுள்ளன. பொதுமக்களும் இறந்தவர்களை கூட அவசர அவசரமாக புதைத்துவிட்டு தப்பி ஓடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால் அரசாங்கத்தின் கூற்றுப்படி விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும், மக்களை அவ்விடங்களை விட்டு விலகி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படியும் கேட்டுக் கொண்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் யாழ் புறநகர் பகுதியில் அகதிகள் தற்காலிகமாகத் தங்கியிருந்த இடங்கள் கூடத் தாக்குதல்களுக்கு உட்பட்ட போது, பாதுகாப்பான இடங்கள் இருந்தனவா? அங்கு மக்களின் அனுபவங்களோ வெறும் அழிவும் பயங்கரங்களும் மட்டும் நிறைந்ததாகவே இருந்தது.

இலக்குகளை குறிவைத்து வான் தாக்குதல் செய்வது என்பது முன்னர் கூட கற்பனையானதாகவே இருந்ததால், இப்போது நடைபெறும் இன்றைய தாக்குதல்களை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. மேலும் சாதாரண சிங்கள மக்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய குரூரமான படுகொலைகளும் யாழ் மக்கள் மத்தியில், இராணுவம் இவற்றிற்காக தங்களை பழி வாங்கக் கூடும் என்ற பீதியை உருவாக்கியதாலும் அவர்கள் தமது இடங்களை விட்டு வெளியேறினார்கள்.



தணிக்கை என்ற பெயரில் அரசாங்கம் செய்திகளை மறுப்பதன் மூலம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. உண்மையிலேயே செய்தித் தணிக்கை அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் பற்றி எவ்வாறு சிந்திக்கிறது என்பதையே காட்டுவதாய் உள்ளது. இதே வேளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசங்களில் என்ன நடக்கின்றது என்பதை அறிவது மிகவும் கடினமானது. ஆனால் கிடைக்கும் தகவல்களின் படி கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் பொதுமக்களுடன் மிகப் பண்பாக நடந்து கொள்ளும்படி இராணுவத்தினருக்கு கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இருப்பினும் இங்கு முறையானதொரு இராணுவ நடவடிக்கை என்பது கடுமையான ஷெல் தாக்குதல்களிலும் தேவையற்ற வான் தாக்குதல்களிலுமே தங்கியிருக்கின்றது. இந்நிலையில் இராணுவத்தினர் பண்பாக நடந்துகொள்வது என்பது ஓர் அர்த்தமற்ற செயலாகவே இருக்கும். ஏனெனில் இராணுவ நடவடிக்கையின் பிரதான போக்கு மக்களை தமது வீடுகளை விட்டும் கிராமங்களை விட்டும், விரட்டியடிப்பதாகவே உள்ளது.

## பொதுமக்கள் உயிரிழப்பும் காயப்படுதலும்:

ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்றவை பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரிகள் (அரசாங்க அதிபர்) கணக்கிட்டதன்படி 104 பேர் உயிரிழந்தும் 194 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

மேற்கூறிய புள்ளி விபரங்கள் இராணுவம் அச்சுவேலியிலிருந்து கோப்பாய் நோக்கி நகர்ந்த பொழுது நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். உண்மைப் புள்ளிவிபரங்கள் இதை விடக் கூடுதலானதாகவே இருக்கக்கூடும். ஏனெனில் மேற்கூறியவை இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்க நிவாரணத்துக்காக தம்மை பதிவு செய்தபோது பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் மட்டுமே.

அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் புள்ளிவிபரங்கள் அவைப் பதியப்பட்ட நேரங்களைப் பொறுத்தும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை புள்ளி விபரங்களோடும் வித்தியாசப்படக்கூடும். 26ம் திகதி அரியாலையில் தென்னந்தோப்பு ஒன்றினுள் 10 பேர் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்தின் கிழக்கெல்லையிலுள்ள அரியாலைக் கிராமமானது மோதல் நடைபெறும் இடத்திலிருந்து 5மைல்களுக்கு அப்பாலுள்ளது. அன்று காலை 7மணியளவில் நடந்த வான்தாக்குதலாலேயே இப்பத்துப்பேரும் கொல்லப்பட்டனர். ஆனால் ஆரம்பத்தில் வந்த அறிக்கையின்படி 20முதல் 30பேர் வரை கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

மேலே 30ம் திகதி கொல்லப்பட்டதாகப் பதியப்பட்டுள்ள 46பேரும் 29ம் திகதி நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களே ஆவர். இது யாழ்ப்பாணத்திலிருந்து 6 மைல்களுக்கு அப்பாலுள்ள நீர்வேலிப்பிரதேசத்தை கைப்பற்ற இலங்கை இராணுவமும் விடுதலைப்புலிகளும் கடுமையாக மோதிக்கொண்ட தினமாகும். அன்று அதிகாலை இராணுவத்தால் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் யாழ்ப்பாண நகரசபை எல்லைகளுக்குள் குறிப்பாக நல்லூர்ச் சந்தை, பருத்தித்துறை வீதி போன்ற இடங்களில் வீழ்ந்து வெடித்தன. பொதுமக்கள் கொட்டும் மழையிலும் தமது இருப்பிடங்களை விட்டு ஓட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பெரும்பாலான உயிரிழப்புக்கள் மோதல் நடைபெறுகின்ற இடத்திலிருந்து 6 தொடக்கம் 9 மைல்களுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் வான் தாக்குதல் காரணமாகவே ஏற்பட்டுள்ளன. அரசாங்க அதிபர் அலுவலகத்தால் பதியப்பட்ட 46பேர்களில் 42பேர் வான் தாக்குதல்களாலும் 4பேர் ஷெல் தாக்குதல்களாலும் கொல்லப்பட்டனர். இவர்களுள் 30பேர் ஆனைக்கோட்டையிலும் 12பேர் சாவகச்சேரியிலும் 4பேர் கொக்குவிலிலும் கொல்லப்பட்டனர்.

இதே நாட்களில் நடந்த பல அழிவுகள் பற்றி வெவ்வேறு ஊடகங்களுக்கு ஊடாகவும் தகவல்கள் கிடைத்தன. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து 1/4மைல் தூரத்திலுள்ள கொக்குவில் பொற்பதி வீதியில் புக்காரா விமானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையினால் இனம் காண முடியாத வகையில் சிதைக்கப்பட்ட ஒரு வயோதிப மாது உட்பட 6பேர் கொல்லப்பட்டதாகச் சம்பவத்தை கண்ணால் கண்டவர் கூறினார். சிதைவுற்று இறைச்சித் துண்டுகளாக சிதறிக்கிடந்த உடல்களை கூட்டி அள்ளி புதைப்பதற்கு, தானும் உதவியதாகச் சொன்னார். அத்தாக்குதல் விடுதலைப்புலிகள் காரியாலயத்திற்கு அருகில் நடத்தப்பட்டதாக இன்னுமோர் தகவல் கூறுகிறது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க பாதிரியாரின் தகவலின்படி 14பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுள் இரு சகோதரிகள் (வயது 8, 10) இரு சிறுவர்கள் (7,12) ஒரு சிறுமி( 14) 3பெண்கள் (25,26,30) மேலும் 6 பேரும் அடங்குவர். கூழாவடி, மூனிப்பாய் ஆகிய இடங்களில் 5பேர் இறந்தும் 10பேர்காயப்பட்டுமுள்ளனர். நவாலியிலுள்ள கத்தோலிக்க நலன்புரிநிலையத்திற்கு அருகில் ஒரு சிறுமி (15) கொல்லப்பட்டும் 4சிறுவர்கள் காயப்பட்டுமுள்ளனர். சாவகச்சேரியிலுள்ள பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடுகள் வானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையால் சேதமாக்கப்பட்டன. இதன் பின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்த ஒரு வயோதிப மாது உட்பட 12பேர் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவருமே அகதிகளாவர். பல உடல்கள் சிதறிய நிலையிலும் இரண்டு உடல்கள் அநாதரவான நிலையிலும் கிடந்தன. அனேகமாக இத்தாக்குதல்கள் எல்லாம் அதிகாலையிலேயே நடந்தன. பிரதானமாக சம்பவங்கள் நடந்த சூழ்நிலைகளையும், இடங்களையும் பொறுத்து அத்தகவல்களும் புள்ளிவிபரங்களும் வேறுபடுகின்றன.

ஒக்டோபர் 31ம் திகதி மக்கள் சாவகச்சேரியை நோக்கி தொடர்ச்சியாக பயணித்த செம்மணி பாலத்தின் மீது குண்டுகள் குறிவைத்து வீசப்பட்டன. இதில் இரு பொது மக்கள் கொல்லப்பட்டனர். 29ம்திகதி ஆனைக்கோட்டையில் நடந்த சம்பவத்தில் பல உடல்கள் அடையாளம் காணப்பட முடியாதவாறு சிதைந்து இருந்ததால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சரியாக கணிப்பிட முடியவில்லை என சில தகவல்கள் கூறுகின்றன. இடைக்கிடை மழைபெய்யாது இருக்கும் பொழுதும் கருமேகங்கள் விலகுகின்ற பொழுதும் குண்டுவீச்சு விமானங்கள், கீழே இருந்து மேற்கொள்ளப்படும் எதிர் ஏவுகணைத் தாக்குதல்களைத் தவிர்க்கும் வகையில், ஓர் சிறிய கரும் புள்ளியாக சத்தம் கூட கேட்காத உயரத்தில் வரும். பின்னர் திடீரென நிலைக்குத்தாக பாரிய சத்தத்துடன் கீழ் நோக்கி வந்து மின்னல் இடி முழக்கம் போல் குண்டுகளைப் பொழிந்துவிட்டுச் சென்றுவிடும். 1980களில் சீனத் தயாரிப்பான சியாமாச்சட்டி விமானங்கள் இதைவிடத் தாளப்பறந்து தாக்கும் போதும் கூட பொது மக்களின் குடிமனைகளே மோசமானதாக சேதமடைந்தன.இங்கு முதல் முறையாக யுத்தத்தில் இறந்த போராளிகளின் எண்ணிக்கையை விட இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை குறைவானதாகவே காணப்படுகிறது. அதாவது 7:1 என்ற விகிதத்தில் உள்ளதாக எவரேனும் கூறலாம். உண்மையிலேயே பொதுமக்களின் அழிவு குறைந்ததற்கு காரணம் அரசாங்கம் எடுத்த பயனுள்ள நடவடிக்கைகள் என்பதை விட தொடர்ந்து யுத்த பீதிக்குள்ளான மக்கள் தாமாகவே பிரதேசங்களை விட்டு வெளியேறியமையே காரணமெனலாம். அரசாங்கம் சிறிதளவேனும் அவர்களைப்பற்றிக் கரிசனையுடன் சிந்தித்திருந்தால் இவ் உயிரழிவுகளைக் கூடத் தவிர்த்திருக்கலாம்.

## அகதிகள்:

அநேகமாக ஒக்டோபர் 20ம் திகதியில் இருந்தே முகாம்களில் தங்கியிருந்த அகதிகள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறத் தொடங்கிவிட்டனர். பெரும்பாலும் அவர்கள் வலிகாமம் பிரதேசத்தில் இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து வந்தோரும், தீவுப்பகுதியில் இருந்து கடந்த 3 வருடங்களுக்கு மேலாக அகதிகளானவர்களுமேயாவர்.

இவர்களுக்கென விடுதலைப்புலிகள் கிளாலியைக் கடந்து கிளிநொச்சிக்கு செல்ல இலவச படகுச் சேவையை நடத்தினார்கள். இவர்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் விடுலைப்புலிகள் இவர்கள் மீது எப்போதும் ஒரு பிடியை வைத்திருந்தனர். வன்னிப் பிரதேசத்தில் அகதிகளாய் இடம்பெயர்ந்த மிகவும் வறிய மக்களுக்கும் இது பொருந்தும்.

மேலும் கிளாலியை கடந்து வரவிரும்பிய ஏனையோரிடம் அண்மையில் சேகரிக்கப்பட்ட மண் மீட்பு நிதி ரசீதை காண்பிக்கும்படி கோரப்பட்டது. அதனைக்காட்டிய பின்னரே அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து இன்னும் பலர் சைக்கிள்கள் மூலமும் நடந்தும், 9மைல்களைக் கடந்து சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்களில் அடைக்கலம் தேடினர். இவர்களில் பெரும்பாலானோர் அண்மையில் யுத்தம் நடந்த பிரதேசத்தில் இருந்து வந்தவர்களாவர். இவர்கள் திரும்பிப் போவதற்காக எந்த வித சாத்தியப்பாடும் இல்லாதவர்கள். இவர்களுக்கு மீதம் இருந்ததெல்லாம் வெறும் இடிபாடுகள் மட்டுமே. இவர்கள் தவிர திரும்பிப் போவதற்கென இன்னும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பவர்கள் ஓரளவிற்கேனும் சொத்துள்ளவர்களே.

அக்டோபர் 29ம் திகதி யாழ் நகரில் மிகுதியாக தங்கியிருந்தவர்கள் தமது வீடுகளுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் அகதிகளாக தஞ்சமடைந்தனர். இவ்வாறான பாதுகாப்பான இடங்களுள் செஞ்சிலுவையினரால் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலை பகுதியும் அடங்கும். இது தவிர யாழ்ப்பாண புகையிரத நிலையம், புனித பத்திரிசியார் கல்லூரி, பரி. யோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, நல்லூர் வணக்கத்திற்கிய தலங்களும் அகதிகள் தங்குமிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 5000ம் அகதிகள் தங்கியுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பிரதேசம் 1987ம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ் நகரை நோக்கி முன்னேறிய வேளையில் பெருந்தொகையான அகதிகளைக் கொண்டிருந்த இடமாகும். கொக்குவில் ஆடியபாதம் வீதிக்கு வடக்கே இருந்த மக்களும், கோண்டாவிலில் வாழ்ந்தவர்களும் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டார்கள். நவம்பர் 1ம்திகதி யாழ் போதனா வைத்தியசாலை, நோயாளிகள், வைத்திய அதிகாரிகள் உட்பட 200 பேருடன் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அடுத்தடுத்த நாட்களில் புலிகளின் அறிவித்தலைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை விட்டு மக்கள் வெளியேறுவது மேலும் அதிகரித்ததாக தகவல்கள் கூறுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல்களின் படி யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தவர்களின் தொகை ஏறத்தாழ 50,000 ஆகும். வணக்கத் தலங்களிலும் பாடசாலைகளிலும் இவ்வாறு மக்கள் தங்கியிருக்கிறார்கள் என அரசாங்கத்திற்கு அறிவிக்கும் படியும் அங்கிருந்து தகவல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. நவம்பர் 3ம் திகதி அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கையில் சாவகச்சேரி பிரதேசத்தில் (தென்மாராட்சி உ. அ. அ. பி.) 73,000 புதிய அகதிகளும் கிளாலியைக் கடந்து கிளிநொச்சிக்கு வருவதற்காக 25000ம் குடும்பங்களும் காத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நவம்பர் 6ம்திகதி அரசாங்க நிருவாக அறிக்கையின்படி கிளிநொச்சிக்கு வந்திருக்கும்.

1,10,000 ம் குடாநாட்டு அகதிகளில் 70,000ம் பேர் புதிதாக வந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் சாதாரண சனத்தொகை 3,00,000மாக கொள்ளும் போது மேலும் ஒரு லட்சமோ இரண்டு லட்சமோ இக்கணிப்பீட்டுக்குள் உள்ளடக்கப் படாதவர்களாகவே இருக்கலாம். இறுதியாக வந்த அறிக்கைகளின்படி யாழ் வைத்தியசாலையில் ஒரு சில வைத்தியர்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. நோயாளிகள் வேறு வழியின்றி அண்மையிலுள்ள ஒரே ஆதார வைத்தியசாலையான,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோயாளிகள் நிரம்பி வழிகின்ற சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அங்குள்ள கட்டில்கள், காயப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டதோடு நோயாளிகளான பொதுமக்கள் தரையில் படுப்பதற்கு நிர்பந்திக்கப் படுகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து நிர்ப்பந்திக்கப்பட்ட அகதிகளுள் பெரும்பாலானோர் வயது முதிர்ந்தவர்கள். ஆதலால் தொடர்ந்து நடக்க முடியாதவர்களாக வீதிஓரங்களிலே அமர்ந்து இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சிலர் உயிரற்ற சடலங்களைப் போல் கிடந்தார்கள். எவருமே அவர்களை யார்? எவரென? அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இரு மேல் உறுப்பினர்கள் தமக்கிடையே ''இரண்டு மாதங்கள் போனால் சனங்கள் இதையெல்லாம் மறந்து விடுவார்கள்'' என தமாஸாக உரையாடிய விதம் கவனத்தில் கொள்ளத் தக்கது.

### நிவாரண விநியோகம்:

பலவருட காலமாக யாழ்ப்பாணத்தில் வாழும் பொதுமக்களின் இந்த நிலைமைக்கு அரசாங்கம், விடுதலைப்புலிகள் ஆகிய இரு சாராருமே தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். ஆனால் நிவாரணம் வழங்குவது தொடர்பான பொறுப்பு அரசாங்கத்தின் மீதே சுமத்தப்பட்டிருக்கின்ற வேளை விடுதலைப்புலிகள் ஆனையிறவுப் பாதையை திறக்க விடாது தடுத்ததன் மூலம் நிலைமையை மேலும் சிக்கலடையச் செய்துள்ளனர். ஆக மோசமான காலநிலை காரணமாக கடல்மார்க்கமாக கொண்டு செல்லும் பொருட்களை ஏற்றி இறக்கும் வசதி குறைவு காரணமாகவும் நிவாரணம் வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான சிக்கல்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்படுகின்ற போதெல்லாம் தனியாக அரசாங்கத்தினை குற்றம் சாட்டுகின்ற போக்கினால், மக்கள் நலனுக்காக பொறுப்பினை தாம் ஏற்காது மக்கள் அவலத்தை பாவித்து தமது இராணுவ இலாபத்தைத் தேடும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.

தற்போது திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மூன்று கப்பல்களில் ஏற்றிச் செல்லப்படுகின்ற பொருட்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்டு அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. சிலவேளைகளில் தொழிலாளர்

தாக இருந்தது. இது ஒக்டோபர் மாத இறுதியில் வட கிழக்கு பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிப்பதற்கு முன்னமே அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 58,000 தொன் மாத்திரமே அங்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. மிகுதி இப்பருவ பெயர்ச்சி காலத்திலேயே கொண்டு செல்லப்பட்டிருந்தது. மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள யாழ்ப்பாண மக்களுக்கு முடிந்த அளவில் நிவாரண உதவியைச் செய்ய வேண்டிய அரசாங்கம், அதன் செயல்முறை காரணமாக நடைமுறையில் போக்கிரித் தனமாக நடந்து கொள்கிறதென குற்றம் சாட்ட இடமளித்துள்ளது. அண்மையில் பெற்றோலியக் களஞ்சியத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட எண்ணைத் தட்டுப்பாட்டை காரணம் காட்டி யாழ் அரசாங்க அதிபர் கொண்டு செல்லவிருந்த மண்ணெண்ணையின் ஒரு பகுதியை கொழும்பிலே விட்டுவிடும்படி அரசாங்கம் அவரைக் கேட்டுக் கொண்டது. அரசாங்க அதிபர் பலரைச் சந்தித்தும், தாம் கடுமையாக விவாதித்த பின்னருமே அப்பிரச்சினை தீர்க்கப்பட்டது.

கடந்த ஓரிரு வருடங்களாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற பொருட்கள் அங்குள்ள தேவையின் 20%, 30%தை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடிதாக இருந்துள்ளது. இதன் விளைவாக ஏழைமக்கள் தமது ஓரிரு வேளை உணவை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. ஆனால் அண்மைய அகதிகள் அதிகரிப்பு, நிலைமையை படுமோசமாக்கியுள்ளது.

வான மூலோபாயத்தை பின்பற்றுவதாகவோ தெரியவில்லை.

4. பல்வேறுபட்ட நிலைமைகளின் தன்மையை கணக்கில் கொண்டு மக்களுக்கு தேவையான உணவு, இருப்பிடம் போன்றவற்றை வழங்குவதற்கும் நிவாரணங்களை ஒன்றிணைத்துச் செயற்படுவதற்கான எவ்வித திட்டமும் காணப்படவில்லை.

5. செய்தித்தணிக்கையும், செய்தியாளர்களை யுத்த களத்திற்கு போகவிடாது தடுப்பதுமான அரசாங்கத்தின் செயலானது, அது தனது குறுகியகால இராணுவ நலன்களுக்காக பொது மக்கள் நலன்கள் அனைத்தையும் உதாசீனம் செய்யத்தயாராக இருப்பதையே காட்டுகிறது.

| திகதி | உயிரிழந்தோர் | காயமடைந்தோர் |
|---|---|---|
| ஒக்டோபர் 04 | 22 | 90 |
| ஒக்டோபர் 17 | 06 | 15 |
| ஒக்டோபர் 18 | 20 | 23 |
| ஒக்டோபர் 26 | 10 | 10 |
| ஒக்டோபர் 30 | 46 | 56 |
| மொத்தம் | 104 | 194 |

### பாரியதொரு மனிதாபிமானப் பிரச்சினை:

இப்போது விடுதலப்புலிகளினதும், இராணுவத்தினரினதும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைக் கூட்டிக் குறைத்து செய்திகளை வெளியிடுவதிலேயே இரு சாராராலும் முக்கிய கவனம் செலுத்தப்படுவதினால் ஒரு பாரிய மனிதாபிமானப் பிரச்சினை இரண்டாம் பட்சமாக்கப்பட்டுள்ளது. இங்கு பாதிக்கப்பட்ட மக்கள் இரு லட்சமா? நாலுலட்சமா? என்பதல்ல பிரச்சினை, பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்து கொட்டும் மழையில் பட்டினியால் வாடுகின்றனர் என்பதே உண்மை. இந்த கொடுமையான சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க முடியாது வாழ வேண்டிய சிறுவர்கள் இறந்து போயிருக்கிறார்கள் என்பதும் உண்மை. B.B.C. தமிழ் சேவையில் பேட்டியளித்த ஓர் உயரதிகாரியிடம் கிளாலியைக்கடந்து வந்த களைத்துப் போன ஒரு பெண்மணி தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் தேனீரில் நஞ்சைக்கலந்து தரும்படி கேட்டதாக விபரித்தார். மேற்கூறிய சம்பவத்தை அரசாங்கத்திற்கு எதிராக மட்டும் பிரச்சாரம் செய்வதற்கும் பயன்படுத்தலாம். ஆனால் யாழ்ப்பாண சூழ்நிலையுடன் பரீட்சயமான எவரும், உதவியற்று அநாதைகளாக விடப்பட்டு, நம்பிக்கை இழந்த நிலைக்கு மக்களை தள்ளிய இரு சாராருக்கும் எதிரான, மக்களின் மறைமுகமான வெறுப்பின் வெளிப்பாடே மேற்கூறிய சம்பவம் என்பது தெளிவாகும். இதுவே இன்று அங்குள்ள மக்களுடைய உண்மையான நிலையாகும். ஆரம்பத்திலேயே அரசாங்கம் தணிக்கை தொடர்பாக எடுத்த முட்டாள் தனமான முடிவு படிப்படியாக அவர்களை ஒரு பாரிய மனிதாபிமானப் பிரச்சினையை அறிவு ரீதியாக கையாள முடியாத நிலைக்கு தள்ளியுள்ளது. அரசாங்கம் நவம்பர் 7ம்திகதி யாழ்ப்பாண அரச அதிபரை வேலையிலிருந்து இடை நிறுத்திய செயற்பாடு இதன் வெளிப்பாடே ஆகும். அரசாங்கத்தின் பிரதான கடமை இப்பாரிய பிரச்சினையை கையாள்வதாதே அல்லாது யாழ் அரசாங்க அதிபர் வெளியிட்ட அகதிகள் எண்ணிக்கை தொடர்பான சிறு விடயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதல்ல. இவ்வாறான விடயங்களை பெரிதுபடுத்தி செயற்படுவதன் காரணமாக பல பெறமதியானவற்றை அரசாங்கம் அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக அரசாங்கம் முன்மொழிந்து செயற்படுத்த முற்பட்டதும் எல்லோராலும் பாராட்டப்பட்டதுமான அரசியல் தீர்வு முயற்சி கூட இன்று ஓர் பயனற்ற நிலைக்கு சென்றுவிட்டது போல் தோன்றுகின்றது.




ற்றாக்குறை போன்ற நடைமுறைப்பிரச்சினைகள் காரணமாகவும், அல்லது ஐரிஸ் மோனா கடத்தல் போன்ற சம்பவத்தாலும், கொலன்னாவ எண்ணைக்குத தாக்குதல் போன்ற சம்பவங்களாலும் பொருட்கள் அனுப்ப தாமதம் ஏற்படுகின்றன. புனர்வாழ்வு அமைச்சுக்கும் யாழ் அரசாங்க அதிபருக்குமிடையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில், 96,000ம் தொன் உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவ
தாக இருந்தது. இது ஒக்டோபர் மாத இறுதியில் வட கிழக்கு பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிப்பதற்கு முன்னமே அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 58,000 தொன் மாத்திரமே அங்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. மிகுதி இப்பருவ பெயர்ச்சி காலத்திலேயே கொண்டு செல்லப்பட்
ணைக்குத தாக்குதல் போன்ற சம்பவங்களாலும் பொருட்கள் அனுப்ப தாமதம் ஏற்படுகின்றன. புனர்வாழ்வு அமைச்சுக்கும் யாழ் அரசாங்க அதிபருக்குமிடையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில், 96,000ம் தொன் உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவ


### இராணுவத்தாக்குதல் தொடர்பான குறிப்பான அம்சங்கள்:

1. வான் தாக்குதல், ஷெல்தாக்குதல்கள் போன்ற செயல்பாடுகளில் எதுவித குறிப்பிடத்தக்க மாற்றமும் இல்லை. மிகவும் முட்டாள்தானமான கொடூரமான இச்செயற்பாடுகள் குறித்த முன்னைய அனுபவங்களோ, பலாபலன்களோ எவ்வித மீளாய்வுக்கும் உட்படுத்தப்படவில்லை.

2. பொதுமக்களின் மரணம், ஏனைய பாதிப்புக்கள் என்பவை பற்றி மிகவும் நம்பத் தகுந்த தகவல்களைக் கூட அரசாங்கம் மறுப்பதன் மூலம் அவர்களின் வேதனைகளுக்கு சிறிதும் மதிப்பளிக்காத தன்மையே காணப்படுகிறது.

3. அரசாங்கமானது மக்களுக்கு நம்பிக்கையை கொடுக்கக் கூடியதாகவோ, தங்களை பாதுகாக்கக் கூடிய வழி வகைகளை உருப்படியான அறிவுறுத்தல்களின் மூலம் மக்களுக்கு வழங்குவதாகவோ, இராணுவ நடவடிக்கைகளின் போது ஒரு வித தெளி





கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணகரனாகிய நான் தெஹிவளையில் கடந்த ஐந்து ஆண்டு கால மாக வசித்து வருகிறேன். புறக்கோட்டையில் கடையொன்றில் தொழில் செய்து வருகிறேன். கடந்த மாதம் (30.11.1995) திகதி வியாழக்கிழமை அதிகாலை 6.15 மணியளவில் தெஹிவளை சந்தியில் பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருந்தேன். என்னுடைய கெட்டநேரம் போலும் நான் நெற்றியில் திருநீறு அணிந்திருந்தேன். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் எனதருகில் வந்து நேரம் கேட்டார். அதற்கு நான் 6:15 என்று சொன்னேன். சொற்ப நேரத்தில் இன்னும் ஒருவர் நேரம் கேட்டார். அந்த பஸ்தரிப்பில் சுமார் இருபத்தைந்து பேரளவில் நின்றிருப்பார்கள் அவர்கள் யாரையும் நேரம் கேட்காமல் என்னுடைய நேரம் கேட்டது நான் அணிந்திருந்த திருநீறும், நான் தமிழன் என்பதை அவர்கள் புரிந்துக் கொண்டதும்தான். இவ்வளவிற்கும் சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரமும் உண்டு. (அது இவர்கள் கண்ணுக்கு தெரியாதது பெரிய ஆச்சரியம்தான்)

பின்பு ஒருவர் வந்து என்னிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கேட்டார். அதற்கு நீர் யார் என்று அவரிடம் கேட்க

## உனது முடிவு:
## யாழ்ப்பாணத்தில் அல்லது களனிப்பாலத்தில்!

அவர் தன்னிடம் இருந்த இராணுவ அடையாள அட்டையை காண்பித்தார். பின் அனைவர் முன்னிலையிலும் என்னை சோதனை செய்தனர். என் சட்டைப்பையில் 15,000/= ஒருவரின் திருமணத்திற்காக கடனாக வாங்கி வைத்திருந்த பணம் இருந்தது. அதைக்கண்டதும் உன்னை அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டும் என்று கூறினர். சுமார் ஆறு அல்லது ஏழு பேர் வரை என்னைச் சூழ்ந்து கொண்டனர். நான் அதற்கு ''அண்மையில் தானே பொலிஸ் நிலையம் உள்ளது. அங்கு போவோம்'' என்று கூற அவர் எனக்கு (சிங்களத்தில் தூசணவார்த்தைகளால் பேசி அடித்து) நீ எங்களுக்கு எங்கு கொண்டு போகவேண்டும் என்று சொல்லித்தர வேண்டியதில்லை. நாங்கள் சொல்லும் இடத்துக்கு நீ வா என்று சந்தியில் நின்று புறப்படும் 167 இல. இ.போ.ச.வில் என்னை ஏற்றினார்கள். பஸ்சின் உள்ளே நான் தமிழன் என்பதைக் காட்டுவதற்கு (பஸ்சில் உள்ளோருக்கு) பலமாக விசாரித்தனர். அவர்கள் என்னுடைய ஆவணங்களை காசு உட்பட எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டனர். பின்பு பொலிஸ் பதிவில் உள்ள வீட்டு உரிமையாளரை தங்களிடம் ஒப்படைத்தால் மட்டும் என்னை விடுதலை செய்வதாகக் கூறினர். (வீட்டு உரிமையாளர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்) ''அவர் வீட்டில்தான் இருக்கிறார். வாருங்கள் ஒப்படைக்கிறேன் என்றேன்.'' அதற்கு அவர்கள் என்னை முகாமில் போட்டுவிட்டு ஜீப்பை எடுத்துக்கொண்டு வரவேண்டுமாம். (முதல் வரும் போது வாகனம் கொண்டுவராதது ஒருவேளை வாகனத்தை கண்டவுடன் ஓடி விடுவேன் என்று தானோ தெரியவில்லை.) நான் அவர்கள் சீருடை இல்லாமல் இருந்ததால் ஒன்றும் சொல்லவில்லை. பம்பலப்பிட்டி சந்தியில் பஸ் திரும்பியதும் என்னை இறக்கினார்கள். பின்பு 154 பஸ்வண்டியில் மீண்டும் ஏற்றினார்கள். 167 பஸ்ஸை விட்டு இறங்கி நடத்துனரிடம் மச்சான் போய்வருகிறோம் என்று கூறிவந்தனர். (எல்லோருமாக சேர்ந்து ஒரு தமிழனைப்பிடித்த திருப்தியில்) 154 பஸ் வண்டியில் பலமான விசாரணை. என்னைச் சுற்றி ஆறு பேரும் பலமான காவலாக நின்றிருந்தனர். (காரணம் பஸ்ஸை விட்டு பாய்ந்தாலும் என்றோ தெரியவில்லை.) பஸ் வெகுதூரம் சென்றதும் என்னை இறங்கும்படி கூறினார்கள். நான் அதற்கு நீங்கள் என்னை முகாமுக்கு அழைத்துப் போவதாகச் சொன்னீர்கள் இந்த இடம் ஆள், அரவம் இல்லாத இடமாக இருக்கிறதே என்னால் இறங்க முடியாது என்று சொன்னேன்.

அதற்கு வந்தவர்களில் ஒருவர் எனது சட்டையைப் பிடித்து இழுத்து (சட்டை கிழிந்தது) இறக்க முற்பட்டார். நான் பலமான சத்தத்தில் அந்த பஸ்வண்டியில் உள்ளோர் கேட்கும் படியாக இவர்கள் உண்மையில் இராணுவம் இல்லை கள்வர்கள் என்னை தெஹிவளையில் இருந்து இங்கு அழைத்து வந்தனர். எனது காசையும் மற்றும் ஆவணங்களையும் பறித்து வைத்துள்ளனர். இப்போது என்னையும் இறக்கி அழைத்துப் போய் பலமாகக் கவனிக்கப் போகிறார்கள் என்று பலமாகக் கத்தி கூறினேன். அதற்கு அந்த அறுவரில் ஒருவர் நீ தமிழன் இவன் புலி அதுதான் இவனை அழைத்துச் செல்கிறோம் என்று கூறினார்.

நான் அதற்கு புலிஎன்றால் பொலிசிடம் ஒப்படையுங்கள் என்றேன். அதற்கு பஸ்ஸில் இருந்த ஒருசாதாரண குடிமகன் அடே நீ தமிழன் தானே என்று பஸ்ஸை விட்டு கீழே தள்ளினார். நான் வெளியே விழுந்தேன்.

பின்பு அவர்கள் 193 பஸ்ஸில் பலவந்தமாக ஏற்றி எனது ஆவணங்களையும் தந்து போகச் சொன்னார்கள். சொல்லிவிட்டு அவர்கள் உல்லாசமாக என்னை ஏற்றியபின் பஸ் போகும்வரை நின்றிருந்தனர். நான் ஏறிய பஸ்ஸில் சொன்னேன். அவர்கள் எனது பணத்தையும் பறித்து எனக்கு அடித்தும் விட்டார்கள் இவர்கள் இராணுவம் என்று பொய் சொல்லி என்னை தெஹிவளையில் இருந்து அழைத்து வந்தார்கள் இவர்கள் திருடர்கள் பிடித்து பொலிசிடம் ஒப்படையுங்கள் என்றேன். அதற்கு அந்த பஸ் நடத்துனர் நீர் தமிழா என்றுகேட்டார். அதற்கு நான் ஆம் என்றேன். அப்படியாயின் எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்றார். (இது தான் விதி போலும்) எனக்கு உயிர்தப்பி வந்தால் போதும் என்றிருந்தது. ஏனெனில் பஸ்ஸில் போகும் போது நீ யாழ்ப்பாணத்தில் சாகவேண்டும் இல்லையேல் களனிப்பாலத்தில் மிதக்க வேண்டும் என்று சொன்னார்கள். ''தமிழனாய்ப் பிறந்தால் இதுதான் கதியா?'' இதைக் கேட்பார் யாருமில்லை? பஸ்ஸில் இருந்து பார்த்த போது ஒரு பெரிய பாலம் ஒன்று வந்தது. அது களனிப்பாலம் இல்லை. ஆனால் ஏதோ ஒரு பாலம். எப்படியோ பாலத்தில் தள்ளுப்படாமல் வந்தது ஆண்டவன் கருணை போலும். பின்பு தெஹிவளையில் வந்து பொலிஸ் நிலையத்தில் புகார்செய்து விட்டு சென்றேன். தமிழ் மக்களே விழிப்புடன் இருங்கள். இன்று எனக்கு நாளை உங்களுக்கு. இவை தொடர்ந்து கொண்டே போகும். இதற்கு முடிவே இல்லையா? தமிழர்களுக்காக குரல் கொடுப்போர் இவற்றைக் கண்டு கொள்வதோ கண்டிக்கவோ மாட்டார்களா! (மாடட்டார்கள்)

''நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத்தண்ணி'' தானே!

கி. கிருஸ்ணகரன். தெஹிவளை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டு. படுவான்கரையிலும்

# பொருளாதாரத்தடை!

வடக்கில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைக்காக கிழக்கின் பல பகுதிகளில் இருந்து பல படையணிகள் அரசினால் வாபஸ் பெறப்பட்டு வடக்கிற்கு அனுப்பப்பட்டு அங்கு தற்போது மக்களை துச்சமென மதிக்கும் கோர யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மறுபக்கத்தில் கிழக்கில் நடைபெறும் நடவடிக்கைகளும் மக்களை எந்த அளவிற்கு நசுக்க முடியுமோ அந்த அளவிற்கு நசுக்கிய வண்ணமே இருக்கின்றன.


குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்து நோக்கும் பொழுது, அரசின் படைகள் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு,வாகரை, வாழைச்சேனையின் மேற்குப்புறம் ஆகிய பகுதிகளில் இருந்து முற்றாக வாபஸ் பெறப்பட்டுவிட்டன. இப்பகுதிகளில் தற்பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருக்கின்றார்கள். அரச படைகள் இப்குதியில் இருக்கும் போது கூட இப்பகுதி பொருளாதாரத் தடைக்கு உட்பட்ட பகுதியாகவே இருந்து வந்தது. தற்போது படையினர் எவரும் இல்லாத நிலையில் இப்பகுதிகள் அனைத்தும் முற்று முழுதாக அரசின் பொருளாதாரத் தடை,உணவுத் தடை, மருத்துவத்தடை என்பவற்றிற்கு உட்பட்ட பிரதேசங்களாக மாற்றப்பட்டு விட்டன.

அரசைப் பொறுத்தவரை இப்பகுதி மக்களைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இப்பகுதி மக்கள் மட்டக்களப்பு நகருடன் தொடர்பு கொள்ளும் அனைத்து மார்க்கங்களும் தடுக்கப்பட்டுள்ளன. அவசர மருந்துத் தேவைக்குக்கூட மட்டக்களப்பிற்கு வருகை தர முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி வாகரைப்பிரதேச செயலகப்பகுதி என்றே கூற வேண்டும். ஒருபக்கத்தில் திருமலை மாவட்ட எல்லைப் படையினராலும் மறுபக்கத்தில் வாழைச்சேனை எல்லைப் படையினராலும் நசுக்கப்பட்டுள்ள இம் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களோ சொல்லும் தரமன்று. மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் கணிக்கப்படும் வாகரைப்பிரதேசம் தற்பொழுது முழுவதும் காட்டுமண்டிய பிரதேசமாக மாறிவிட்டது. இடைக்கிடையே காணப்படும் கட்டிடங்கள் அனைத்தும் முன்பு அரச படையினரால் முகாம்களாகப் பாவிக்கப்பட்டு பின்னர் அழிக்கப்பட்டவையாகும். இப்பிரதேச மக்களோ உண்மையில் காட்டுவாசிகளை விட கேவலமாக வாழ்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்பிரதேசத்தில் காணப்படும் அரசோடு தொடர்புடைய நிறுவனங்கள் இரண்டே இரண்டுதான். பிரதேச செயலகம், தபால் நிலையம் என்பவையே அவை.

இதில் பிரதேச செயலகம் அப்பகுதியில் ஒரு அரச அலுவலகம் இருக்க வேண்டும் என்பதற்காக இருப்பதாகவே தெரிகிறது. நிரந்தர பிரதேச செயலாளரும் அற்று மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கமும் அற்று காணப்படுகின்றது. இப்பிரதேச செயலகத்தில் வேலைசெய்பவர்கள் அனைவருமே வாகரைக்கு வெளியே உள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமையும், வெள்ளிக்கிழமையும் இவர்களின் போக்குவரத்திலேயே கழிந்து விடுகின்றது. மீதியான மூன்று நாட்களில் புதன் கிழமையில் மாத்திரம் பதில் பிரதம செயலாளர் 12 மணிக்கு வந்து இரண்டு மணிக்குச் சென்று விடுவார். ஏனைய இரண்டு நாட்களில் உரிய அதிகாரிகள் எவரும் அலுவலகத்தில் இருப்பதில்லை. வெளிக்கள வேலை என்று புறப்பட்டு விடுவார்கள். இதுதான் இப்பிரதேச செயலகம் மக்களுக்குச் செய்யும் சேவை. உண்மையில் இப்பிரதேசத்தில் உள்ள தபால் நிலையம் தான் இப்பகுதி மக்களுக்கு சிறிதாவது பிரயோசனப்படும் ஒன்றாகத் தெரிகிறது. இப்பகுதி மக்களுக்கும் வெளிப்பிரதேசத்திற்கும் உள்ள ஒரே ஒரு தொடர்பு கடிதப் போக்குவரத்துத் தான். அடுத்து இப்பிரதேசத்தில் உள்ள பெண்களுக்கு ''பிச்சை சம்பளம்'' எனப்படும் மாதாந்த ஊக்குவிப்புத் தொகையையும் இத் தபால் நிலையமே வழங்கி வருகின்றது. அதற்குக் கூடமாதம் ஒன்றிற்கு ரூபா 65ஆயிரம் தேவைப்படுவதாகவும், இதைப் பெற்றுக் கொடுப்பதே மிகவும் சிரமமாக இருப்பதாக அவ்வலுவலகத்தினர் கூறுகின்றனர்.

இன்னொரு அரச நிறுவனமான பாடசாலையைப்பற்றி குறிப்பிட வேண்டுமானால், அவற்றைப் பாடசாலைகள் என்று குறிப்பிடுவதை விட ஆடு, மாடுகள் தங்கும் கொட்டில்கள் என்று சொல்வதே சாலப் பொருந்தும். கற்பிக்கும் ஆசிரியர்களும் வெளியிடத்தைச் சேர்ந்தவர்கள். ஏதோ முற்பிறப்பில் செய்த பாவம் இங்கு வரவேண்டியதாகி விட்டதே என்று நாளும் புலம்புவதிலேயே ஆசிரிர்களின் பொழுது கழிந்து விடுகிறது. உண்மையில் மறுபக்கத்தில் பார்க்கும் போது வாகரைப்பிரதேசத்தில் கடமையாற்றுபவர்கள்







கடவுளைப் போன்று தோன்றுகிறார்கள்.இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் அவர்கள் வாகரை பிரதேசத்திற்கு வந்து போவதே பெரிய விடயம் என்றுதான் கூறவேண்டும். ஆனால் மொத்தத்தில் வாகரைப் பிரதேச மக்கள் சபிக்கப்பட்டவர்களைப்போல் மிகவும் துன்பத்தில் வாழ்கின்றார்கள் என்பதுதான் உண்மை. ஒருவேளை உணவைக்கூட சரியாக உண்ண முடியாமல் அதற்கு கூட முதல் நாள் வாழைச்சேனைக்குப் புறப்பட்டுச் சென்று, அன்று இரவு வாழைச்சேனையில் தங்கிநின்று ஒரு கொத்து அரிசி, ஒரு சவர்க்காரம், ஒரு தீப்பெட்டி, ஒரு போத்தல் மண்ணெய் என்ற இராணுவத்தினரின் பொருளாதாரத் தடைகளுக்கு உட்பட்டு வாகரை வந்து சேர்ந்து அன்று இரவு அவற்றைச் சமைத்து உண்டபின் மீண்டும் மறுநாள் உணவைத் தேடி வாழைச்சேனைக்குப் பிரயாணம். அதுவும் கையில் பணம் இருந்தால்தான். இல்லாவிட்டால் பட்டினி. பணம் இருந்தாலும் பஸ் வராவிட்டால் பணம் இருந்தும் பட்டினி. இப்படித்தான் வாகரை மக்களின் வாழ்க்கை நகருகின்றது.

இந்நிலையில் ஆரம்பமாகிவிட்ட மழைக்காலம் மேன்மேலும் இம்மக்களை கஷ்டத்துக்குள்ளாக்கியுள்ளது. உரிய பொருட்கள் இல்லாமல் பயிர்செய்கை மேற்கொள்ளப்படாமை; அண்மைக்காலம் வரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தபடியால் வழமையாக மேற்கொள்ளப்படுவரும் சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமை, தற்போது மீன்பிடியிலும் ஈடுபடமுடியாத நிலை என்று பல வழிகளிலும் வாகரைமக்கள் அல்லலுறுகின்றனர். தங்களுடைய விடிவு எப்போது என்று இம் மக்கள் ஏங்காத நாட்களே இல்லை என்றே கூறலாம்.

இத்தகைய சூழ்நிலைகளுக்கு எவ்விதத்திலும் குறைவு படாத நிலை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களான, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணத்தீவு ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளிலும், வாழைச்சேனை வாவியின் மேற்குப்புறத்திலும் காணப்படுகின்றது. இப்பகுதிகளும் தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் நிலவும் பகுதிகளாகவே உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 2/3பங்கு நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசம் ''படுவான் கரை'' என்று அழைக்கப்படுகின்றது. இப்பகுதிவாழ் மக்கள் முற்று முழுதாக விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். அத்தோடு அம்பாறை, பொலன்நறுவை, பதுளை மாவட்டங்களின் எல்லைகளோடு அண்டி வாழ்கின்றவர்களாகவும் இருக்கின்ற காரணத்தினால், இப்பிரதேசத்தின எல்லைக் கிராம மக்கள் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவிக்கவேண்டி ஏற்படுகின்றது.

இப்பிரதேசத்தின் மக்கள் அனைவரும் தமது அனைத்துத் தேவைகளுக்கும் மட்டுநகரின் எழுவான் கரையையே நம்பி இருக்க வேண்டியதோடு இவர்களை இப்பகுதியோடு தொடர்புபடுத்துவது ஆற்றுவழிப்பாதைகளே. இப்பாதைகள் அனைத்துமே ஒரு பக்கத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும், மறுபுறத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருக்கின்றன. இதன் காரணத்; சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இடையில் எங்கு சண்டை நடந்தாலும் மூடப்படுவது இப்பாதைகள்தாம். இதனால் படுவான்கரைப்பகுதிகள் எழுவான்கரையோடு எவ்வித் தொடர்பும் இன்றி பல நாட்கள் இருப்பது வழமை. இதன் காரணத்தினால் சுகாதார வசதிகளற்ற படுவான் கரைப்பிரதேச மக்கள் படும் துயரங்கள் கணக்கிலடங்கா. இப்பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக இப்பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் தடைப்படுத்தப்பட்டுள்ளன. தமது சொந்தத் தேவைக்கு கூட ஒரு பக்கற் சீமெந்தைக் கொண்டு போக முடியாத நிலை விவசாயத்துக்குத் தேவையான உரவகைகளைக்கொண்டு போக முடியாத நிலை. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் செய்யபண்ணப்படாமல் தரிசாகக் கிடக்கின்றன. இத்தனைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தேவையான நெல்லை உற்பத்தி செய்யும் பிரதேசம் இதுவேயாகும். ஆனாலும் கூட தம்மால் ஆதிக்கம் செலுத்த முடியாத பகுதி என்பதற்காக இப்பிரதேசம் அரசினால் சகல விதமான செயற்பாடுகளில் இருந்தும் தடைசெய்யப்பட்டுள்ளது. அதேசமயம் மாவட்டத்தின் மிகவும் கஷ்டப்பிரதேசமான இப்பகுதியில் கடமை புரியும் எந்த ஒரு அரச ஊழியருக்கும், அரசினால் அண்மையில் வழங்கப்பட்ட கஷ்டப்பிரதேச கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேச அரச ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணத்தினால் இப்பிரதேச அரச ஊழியர்கள் மிகவும் விரக்தி அடைந்து காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் இக்கொடுப்பனவை பெறுவதற்காக இராணுவக்கட்டுப்பாடுள்ள பிரதேசங்களுக்கு இடம் மாற்றம் பெற்றுச் செல்லவே விரும்புகின்றனர். இதை அவதானிக்கும் போது இவ்வரசு இப்பிரதேசத்தின் அபிவிருத்திபற்றி சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்களை எவ்வித்திலும் புறக்கணிக்கவில்லை என ஐ.நாவிலும் கூறுவதோடு, சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு அரசு ஒரு போதும் தீங்கிழைக்காது என்று வாய்கிழிய கத்துவதை மட்டுமே ஒழுங்காகச் செய்கின்றது என்று கூறினால் யாராவது மறுப்பார்களா?


நக்கீரன்

---

## மட்டு. சிமெந்து வியாபாரம்

# கொடிகட்டிப் பறக்கிறது!

பாலன்



கடந்த ஐந்து வருடங்களாக இம்மாவட்டத்தில் சீமெந்து வியாபாரத்தில் பல பணம் படைத்த வர்த்தகர்கள் ஈடுபட்டு இலட்சக்கணக்காக கொள்ளை லாபம் அடித்து வருகின்றார்கள். இதனை முறைப்படி ஒழுங்குபடுத்துவதற்கு மட்டக்களப்பின் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தாலோ அரச அதிபராலோ முடியவில்லை. இன்னும் பொதுமக்கள் உச்சவிலையிலும் பார்க்க நூறு ரூபா கூட்டியே சீமெந்தினைப் பெற்று வருகின்றார்கள்.

மாத்தளை மாவட்டத்திலும் வேறு சில மாவட்டங்களிலும் சீமெந்தின் விலையைப் பன்மடங்காக விலை உயர்த்திச் சீமெந்து ஏஜன்சியினர் விற்பனை செய்தபோது விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் தீவிரமாகச் செயலில் இறங்கியது. அம்மாவட்டங்களுக்குக் கொண்டுவரப்படும் சீமெந்து விற்பனை செய்யப்படும் முன்பே அதன் கையிருப்பு அரச அதிபருக்கு அறிவிக்கப்படுகின்றது. அதன்பின்பு பொதுமக்கள் தமக்குத் தேவையான சீமெந்தின் அளவுக்கு விண்ணப்பம் கொடுக்கின்றார்கள். அரச தேவைகட்காகக் கொடுக்கப்பட வேண்டிய சீமெந்தின் அளவினை அரச அதிபர் நிர்ணயிக்கின்றார். மிகுதியாக உள்ள சீமெந்து தனியாருக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். இவற்றிற்கு மேலாக அம்மாவட்டத்தில் உள்ள பெரும் வர்த்தகர்கள் அரச அதிபரால் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படுகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச அதிபரோ, விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமோ இவ்வாறு எதுவும் செய்வது இல்லை. இதனால் தனிப்பட்ட வர்த்தகர்கள் கொள்ளையடிப்பதற்கு மட்டக்களப்பு விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் உடந்தையாக இருந்து வருகின்றது.

இத்திணைக்களத்தில் முன்பு 10 பரிசோதகர்கள் வேலை செய்து வந்தனர். இப்போது 3 பேரே உள்ளனர். ஒட்டமாவடி தொடக்கம் பெரிய கல்லாறு வரை உள்ள பாரிய நிலப்பரப்பைக் கொண்ட இவ்விடத்திற்கு 3 பரிசோதகர்கள் காணாது. ஆயினும் புதிய பரிசோதகர்கள் யாராவது இம்மாவட்டத்துக்கு இடம் மாறிவந்தால் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளே 'பெட்டிசன்' அடித்து, (வேறு பேரில்) அவரை வெளிமாவட்டத்துக்கு மாற்றி விடுவார்களாம். இம்முறை ஒரு அலுவலர் பழிவாங்கும் இடமாற்றம் ஒன்றைப் பெற்றதாகவும் இவரின் இடமாற்றத்திற்கு மட்டு எம்.பிக்கள் இருவர் பின்னணியில் இருந்ததாகவும் தெரியவருகிறது.

இது நிற்க, இம்மாவட்டத்தில் சீமெந்து வியாபாரம் கொடிகட்டிப் பறக்கும் போது கொடிக்குப் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்க்கும் வேடிக்கையான விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களே உள்ளனர். கடந்த மே மாதத்தில் சரிநிகர் இதழில் சீமெந்து ஊழல் சம்பந்தமாக சரிநிகா சில தகவல்களை வெளியிட்டிருந்தது. அதன் விளைவாக கடந்த ஜுன் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சில வழக்குகள் பிடிக்கப்பட்டன. இவற்றில் சில வழக்குகள் 2-6-95ம் திகதியன்று தவணை போடப்பட்டிருந்தன. அன்று பிரபலமான வர்த்தகர்கள் நீதிமன்றம் வருமாறு கோரப்பட்டனர். பின்பு வழக்கு ஏதும் இன்றி விடுதலை செய்யப்பட்டனர். இத்திணைக்களம் எவ்வாறு சட்டத்தைப் புறக்கணித்து நடக்கின்றது என்பதற்கு இவைகள் சரியான சாட்சிகளோ?

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் 525 அபிவிருத்தித் திட்டங்கள் 7 கோடியே 84 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முக வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 125 லட்சம் ரூபா செலவில் 131 திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன. அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சித் தேசியப்பட்டியல் எம்.பி. தொடங்கொட ஒதுக்கீடு செய்த 7 லட்சத்து 50 ஆயிரம்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தம், கீழ்த்தர அரசியல் லாபத்துக்கே!

## முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரி குணத்திலக்க

**யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை, பருவ மழைக் காலத்திற்குப்பின்னரே ஆரம்பிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் அந்நடவடிக்கை வெற்றி அளிக்கும் என இதற்கு முன் அளித்த பேட்டியில் கூறியிருந்தீர்கள். ஆனால் இன்று உங்கள் கூற்று பிழையானதாக மாறியுள்ளதே?**

இல்லை ,நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். இவ்இராணுவ நடவடிக்கை மார்ச் மாதத்திற்குப் பின் தான் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மக்கள் இல்லாத வெற்றுப் பிரதேசங்களே இராணுவத்தினர் இப்போது கைப்பற்றியுள்ளனர். இவ்வாறான பிரதேசத்தில் கைப்பற்றுவதனால் ஏற்படும் பிரயோசனம் என்ன?

ஆயிரம் புலிகள் வரை யாழ்நகரில் அடைப்பட்டு உள்ளனர், என இராணுவம் கூறுகிறது. இது பொய் அவர்கள் அவ்வாறு நகருள் ஒளிந்திருப்பதற்கான காரணம், இராணுவத்தை உள்ளே வரவழைத்துக் கொண்டு, அதன் பின் தாக்குவதற்கே ஆகும்.

**எனது கேள்விக்குறிய பதில் கிடைக்கவில்லை. இராணுவப்பேச்சாளர் கூட அண்மையில், ரிவிரெச நடவடிக்கைத் தொடர்பான எதிர்வுகூறல்கள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுவிட்டன எனக்கூறியிருந்தாரே?**

ரிவிரெச நடவடிக்கை தொடங்கி 40நாட்களுக்கும் மேலாகின்றது இதுவரை ஒரு புலி உறுப்பினரை கைதுசெய்ய முடியவில்லை. சரணடைய கூறிய அறிக்கைகளினாலும் எந்த வித பலாப்பலனும் கிடைக்கவில்லை. இராணுவத்தினரிடம் இருந்து புலிகள் கைப்பற்றிய 4 படகுகள், 3யுத்த டாங்கிகள், விமானப்படைக்கு ஏவுகணைத்தாக்குதல் தொடுக்கும் மத்திய நிலையம் ஆகியவற்றை கண்டுபிடிக்க இந் நடவடிக்கையினால் முடியவில்லை.

இருபதின ாயிரம் இராணுவத்தினர் இரண்டுபிரிவாக நடவடிக்கையை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில், புலிகள் பின்வாங்குவது சாதாரண ஒரு செயலாகும். இருபதின ாயிரம் வீரர்களுக்கு முகம் கொடுக்க பிரபாகரன் தீர்மானித்தால், அவர் சித்தசுவாதீனம் அற்றவர் என்றே கூறவேண்டும். இராணுவத்தினர் உட்பிரவேசிக்க புலிகள் அனுமதியளித்தனர். அதேபோலவே புலிகளால் மக்கள் அனைவரும் அப்பிரதேசத்தில் இருந்து அகற்றப்பட்டனர் இது அரசாங்கத்தால் எதிர்ப்பார்க்கப்படாத நிகழ்ச்சி அல்ல.

ரிவிரெச நடவடிக்கை பலாலியிலிருந்து இருபிரிவு வீரர்களினால் தொடங்கப்பட்டது. இவ்இருபிரிவினரும் பலாலி- யாழ்வரை, இரண்டுகிலோ மீட்டர் பரப்புக்கொண்ட பிரதேசத்தையே கைப்பற்றினர். குடாநாட்டின் மற்றபிரதேசங்கள் இன்னும் புலிகள் வசம் உள்ளது. அதால்தான் விமானப்படையினரின் விமானங்கள் ஏவுகணைத் தாக்குல்களுக்கு அடிக்கடி உள்ளாகின்றது. இவ்வாறு பிரதேசங்களை கைப்பற்றுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லையென்பது எனது அபிப்பிராயமாகும். இராணுவம் கைப்பற்ற வேண்டியது முழு குடாநாட்டையும் அன்றி இரண்டு கரைகளை அல்ல.

**ரிவிரெச நடவடிக்கையின் இறுதிக்கட்டமாக, யாழ்நகரம் இராணுவ வசமாகியுள்ளது. இவ்வாறான மக்களற்ற வெற்றிடப் பிரதேசத்தை, கைப்பற்றுவதில் இராணுவத்தின் உண்மையான வெற்றிதங்கியுள்ளதா?**

இதுமுக்கியமான கேள்வி? அதுதான் இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை இதுவாகும். இவ்விருதரப்பினருக்கும், நெருக்கடிகாலகட்டமாக இக்காலகட்டம் அமையப்போகின்றது. எனது அபிப்பிராயத்தின் படி மக்கள் சூனியப் பிரதேசத்தை கைப்பற்றுவதில் எந்த வித பயனும் இல்லை.

இன்று யாழ் மக்கள், அகதிகள் நிலையில் உள்ளனர். புனருத்தாரன அமைச்சருக்கு உண்மையான அகதிகளின் எண்ணிக்கை தெரியா விட்டாலும் முழு உலகத்தாருக்கும் அகதிகள் எண்ணிக்கை 3 அல்லது 4 லட்சம் என்பது தெரியும். யாழ் மக்களால் எந்த நாளும் அகதிகளாக வாழ முடியாது. அவர்களுக்கும் தம்மைப் பற்றிய உயர்ந்த எண்ணம் காணப்படவே செய்யும்.

அவர்கள் அகதிமுகாமில் அகதிகளாக வாழ விரும்பமாட்டார்கள். தமிழ்க்கட்சிகள் கூறுவதுபோல் அவர்களுக்கு சொந்த இடங்களில் வாழ வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் யாழை கைப்பற்றி விட்டதால் அங்கிருந்து இராணுவத்தினரை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மக்கள் அங்கு மீளக் குடியேற முடியும்.

**நீங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தினரை அகற்றிட வேண்டும் என்றீர்கள். இந்தச் செயலுக்கு அழுத்தம் கொடுக்கும் காரணிகளை கூற முடியுமா?**

ஆம். நான் முன்னர் கூறியதுபோல யாழ் மக்களை அகதிகளாக வைத்துக்கொண்டு தீர்வுகான முடியாது. யுத்தமாயையினுள் சிக்கியிருக்கும் சிங்கள மக்கள் நான் கூறுவதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இருப்பினும் உண்மையை தெளிவுறுத்த வேண்டியது எனது கடமை.

இரண்டாவது, மக்களை அகதிகளாக வைத்திருப்பது, இலங்கை அரசாங்கத்திற்கு கெடுதலாக அமையும். ஏனெனில் யுத்தத்திற்கு ஆதரவு அளிக்கும் சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் நம்மை எதிர்க்க முற்படும்.

மூன்றாவது, போரில் மரணமடைந்த வீரர்கள் எண்ணிக்கை, மற்றது எதிர்காலத்தில் தாக்குதலுக்கும் உள்ளாகும் வீரர்களது நிலை என்பன தொடர்பானது. சென்ற பன்னிரண்டு வருட ஐ. தே. க. ஆட்சியின் போது கொல்லப்பட்ட வீரர்களது எண்ணிக்கை 4200. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆறு மாத ஆட்சியில் கொல்லப்பட்ட வீரர்களது எண்ணிக்கை 1100. ரிவிரெச நடவடிக்கையில் இராணுவத்தரப்பினரில் 500 போர்வரை கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் சூனியப்பிரதேசத்தை இராணும் கைப்பற்றிக் கொண்டு இருக்க நினைத்தால் கிழமைக்கு ஒருதரமாவது புலிகளின் கெரில்லா தாக்குதலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படலாம். இவ்வாறான இடைவெளி கெரில்லாத் தாக்கு தல்களினால் இராணுவத்தினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்படலாம். இதுதான் நான் காணும் யதார்த்தம்.

யாழ்ப்பாணத்தில் தேசியக்கொடியை ஏற்றுவதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்து விடுவதில்லை. கொடி ஏற்றுவது, இன்றைக்கோ நாளைக்கோ விழுந்து விடும்நிலையில் என்றால் அது தேசியக்கொடிக்குச் செய்யும் அவமானமாகும். யாழ் மக்களின் மனதை வென்றவர்களே உண்மையில் யுத்தத்தில் வென்றவர்களாவர்.

**உங்கள் கருத்தின் படி ரிவிரெச நடவடிக்கை ஊடாக யாழ்நகரைக்கைப்பற்றி அதிகாரத்தை நிலைநாட்டுதல் சிறப்பாக நடைபெறவில்லை என்பது தெளிவாகின்றது. அப்படி யெனில் இவ்வாறான உயிரிழப்புக்களோடு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் அர்த்தம் என்ன?**

நான் இதற்கு முன்பு கூறியது போல் இந்நாட்டில் யுத்தமேற்கொள்ளப்படுவது கீழ்த்தர அரசியல் லாபத்தை பெற்றுக்கொள்ளவாகும். தேசியக்கொடியை ஏற்றி சாதாரண வெற்றியைப்பெறவே ரிவிரெசநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அரசியல் தலைவர்களுக்கு எம்முறையிலாவது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு அல்லவென நினைக்கின்றேன் ஏனெனில் அவர்தான் தமிழ் மக்களின் ஆதரவை பெற்றுக்கொண்டு பேச்சுவார்த்தையை வடக்குக்கு கொண்டு சென்றவர். ஆனால் அவர் இன்று யுத்தவாதிகளின் பொறிக்குள் சிக்கிவிட்டார்.

அதுபோலவே சிங்கள இனவாதிகளின் பண்டிதர்களான, நளின் டி சில்வா, காமினி ஜயசூரிய, எஸ். எல். குணசேகர, மாதுளுவாவ சோபித்த தேரர் ஆகியோர் யுத்தம் வேண்டும் என குரல்கொடுக்கின்றனர். இவர்களின் பொறிக்குள் ஜனாதிபதி அகப்பட்டு விட்டார். அதனால் தான் அரசுக்கு ஆதரவளிக்கும் தமிழ்க்கட்சிகளை கூட அவர் சந்திக்காதுள்ளார். அவரின் நிலையைக்கண்டு நான் கவலைப்படுகிறேன் ஆனால் இதுதான் உண்மை.

**அரசாங்கத்தின் யுத்தப்பிரவேசம் காரணமாக, சமாதானத்துக்கான அவகாசம் கலைந்து விடுகின்றதா?**

ஆம். அரசாங்கம் உருவாக்கிய யுத்தப்பிரசாரங்களில் இறுதிநிலை இதுதான். இனவாதிகளின் குரல்கள் காரணமாக சாதாரண பொதுமக்கள் கூட இந்நிலையை அடைந்து விடுவர். அதேபோல் யாழ் மக்களை தமது வசிப்பிடங்களுக்கு வரவிட அரசு தயாராகாவிடின், சமாதானம் வெதூரம் சென்று விடும்.

**மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பித்தது தொடக்கம் இன்றுவரை விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் ஏழு விபத்துக்குள்ளாகியுள்ளது. இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம்?**

விமானிகளின் தவறினால் விமானம் விபத்துக்குள்ளாகியதென்றால் விமானிகளுக்கு பயிற்சியளிக்கப் படவேண்டும். தொழில்நுட்பக் கோளாறினால் இரண்டு விமானங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தால் விமானங்கள் இனி நன்கு பரீட்சிக்கப் படவேண்டும். இவை ஒன்றைக் கூடச் செய்யாமல் குறைந்தது விமானம் எங்குவிழுந்தது என்று கூடத் தெரியாமல், தொழில்நுட்பப் பிழையும், விமானியின் கவனயீனமும் தான் விபத்துக்கு காரணம் என்கின்றனர். இதுவிமான மோட்டிகளுக்கு செய்யும் அவமானமாகும். அத்தோடு இவ்வாறு கூறுவது உலக மகா பொய். முதலாவது அவ்ரோ விமானம் விபத்துக்குள்ளாகியது புலிகளின் தாக்குதலினால் ஆகும். இதுதான் உண்மை.



தமிழில் : ரட்ணா

நன்றி: யுக்திய

# வடக்கில்...

கிதாராம் மாற்றமடையும். 1956இல் தமிழரசுக்கட்சி மாநாட்டின் முக்கியமான தீர்மானமாக இது மேற்கொள்ளப்பட்டது.

''பாரம்பரியமாக தமிழ் மொழி பேசி வருகின்ற பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதை நிறுத்துங்கள்'' என அம்மாநாட்டில் கோரப்பட்டது. அதிலிருந்து குடியேற்ற நடவடிக்கைகள் என்பது இனப்பிரச்சினையில் முக்கிய அங்கமாக பேசப்பட்டது.

1957 ஜுலை மாதம் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் போது கீழ்வரும் காரணங்கள் முக்கியம் பெற்றன.

''மாவட்ட சபைகளின் அதிகாரங்களுக்குட்பட்ட பிரதேசத்தினுள் அமையும் குடியேற்றத்திட்டங்களின் காணிகளை ஒதுக்கவேண்டிய தகுதியானவர்களை தெரிவு செய்யும் அதிகாரம், மேற்படி குடியேற்றத் திட்டங்களில் பணியாற்றுவதற்குரிய அலுவலர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் என்பன குடியேற்றத்திட்டங்கள் தொடர்பாக மாவட்ட சபைகளுக்கு இருக்கவேண்டிய அதிகாரங்கள் ஆகும். இது தொடர்பாக தற்போது கல்லோயா அபிவிருத்தி சபையால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்''

பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை செல்லுபடியற்ற நிலைமை உருவானதன் பின் விவசாயக் குடியேற்றங்களை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் தொடரப்பட்டு பிரச்சினை மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் இருதரப்பின் அரசியல் தலைமையினாலும் விளங்கிக் கொள்ளப்பட்டது என 1965 மார்ச்சில் டட்லி - செல்வநாயகம் உடன்படிக்கையின் போது உணர முடிந்தது. அதில்,

''வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளைப் பகிர்ந்து கொடுக்கும் போது பின்வரும் முன்னுரிமைத்திட்டத்தை அமுல்படுத்தவும் சேனநாயக்க உடன்பட்டார்.

அ. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளில் அம்மாவட்டங்களில் வாழும் நிலமற்றவருக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஆ. இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

இ. மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழ் குடி மக்களுக்கு முதலிடம் கொடுத்து, ஏனைய குடிமக்களுக்கும் காணிகள் வழங்கப்படும்''.

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் மக்கள் குழுமத்தின் பண்பாட்டில் மாற்றம் ஏற்படுவதை தடுப்பதையே மேற்படி குறிப்புகளின் நோக்கமாகும். சிங்கள விவசாய குடியேற்றங்கள் தொடர்ச்சியாக இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன், சிங்கள அரசியல் தலைவர்கள் தெரிந்தும், வேண்டுமென்று அரசியல் அதிகாரத்துவ ரீதியில் இவற்றைப் பின்பற்றினர்.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் சிங்கள விவசாயிகள் 2,50,000 பேரைக் குடியேற்றும் தற்போதைய யோசனையை இதனாலேயே கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. இது ஏற்கெனவே இருக்கும் கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றி நிலைமையை மோசமடையச் செய்வதும் அல்லாமல் இப்பிரதேசங்களில் மக்கட் குழுமத்தை கலந்து விடுவதன் மூலம் தமிழ் மக்களின் தேர்தல் மையத்தொகுதியை பலவீனப்படுத்துவுதன் மூலமும், அதற்கூடாக தமிழ் மக்களின் அரசியல் பலத்தை பலவீனப்படுத்தியும் அவர்களின் சுயதனித்துவத்திற்கான பிரதேச மையத்துக்கும் எதிரான திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

இந்தக் குடியேற்றவாசிகளுக்கு ஆயுதப்பயிற்சியும் அவர்களை ஆயுத பாணிகளாக்கும் திட்டமும் தனிநாடு கோரிப் போராடி ஆயுதப்போராளிகளுக்கெதிராக யுத்தம் புரிவதற்காக பாதுகாப்புப்படையினருக்கு, உதவிப்படையாக குடியேற்றவாசிகளை பயன்படுத்தும் நோக்கமும் உள்ளதாகத் தெரிகிறது. ''எல்லை'' பற்றி அண்மையில் வெளியிட்டவற்றை நோக்கும் போது இவ்யோசனை இனப்பிரச்சினையை மேலும் அதிகப்படுத்தும் சாத்தியங்களும் தெரிகிறது. தமிழ் மக்கள் இந்த யோசனையை இவ்வாறே நோக்குகின்றனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக அரசு இப்போது மேற்கொண்டுவரும் தீர்வுகளில் அதாவது, ஆயுதபலத்தினால் தமிழ் மக்கள் மற்றும் தனிநாட்டுக்காகப் போராடி வருபவர்களை அடக்குவது மற்றும் படிப்படியாக இனக்கலப்புக்களுக்கூடாக பிரதேசங்களில் பிரதேச அதிகார அலகு ஒன்றை ஏற்படுத்துதல் அவற்றில் ஒரு பிரதான அம்சமாக சிங்களக் குடியிருப்பாளர்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியிருத்தும் யோசனையாகக் கொள்ளலாம். வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பௌத்த வணக்கஸ்தலங்களான அரசின் பொறுப்புக்குள்ளும் மற்றும் பாதுகாப்பின் கீழ் கொண்டுவருவதற்காகவும் அண்மையில் கூறப்பட்ட யோசனைகள் இந்த தந்திரோபாயங்களின் அங்கமாகக் கொள்ளலாம். இவை அனைத்தும் இனங்களின் இருப்பிற்கு எதிரான செயற்பாடுகள் ஆகும்.

தமிழ் மக்களிடம் அதிகாரம் சரியான அளவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் அரசியல் தீர்வுக்கா, குரல் கொடுக்கப்பட வேண்டும் யுத்த ரீதியிலான தீர்வுக்கான எங்கள் எதிர்ப்பே எங்களால் வெளியிடப்பட்ட இப்பிரசுரம் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அரசின் அங்கீகாரம் மற்றும் ஆதரவுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குதல் பற்றிய யோசனைகளுக்கு எங்கள் பூரண எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். இது இரு மக்கள் தரப்பினருக்குமிடையே இருக்கின்ற பிரச்சினைகளை மோசமடையவும், ஆழமடையவுமே செய்யும் என்பது எங்கள் நம்பிக்கை. இதில் இருமக்கள் தரப்பும் ஐக்கியமாக வாழும் காலத்தை பின்தள்ளிக்கொண்டே இருக்கும்.

இந்த யோசனைகளை விட்டுவிட்டு தமிழ் மக்களின் பிரதேச, மொழி, கலாசார தனித்துவத்தை அங்கீகரித்து அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதற்காக அவர்களின் பிரதிநிதிகளுடன் செயற்படுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

***இத்துண்டுப் பிரசுரம் 1985இல் மேர்ஜ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. 10 வருடங்களின் பின்னும் காலப் பொருத்தம் கருதி இதனை வெளியிடுகிறோம்.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைகுந்தன் அதிகாலையிலேயே எழுந்து விட்டான். இலத்திரனியவியல் கடிகாரமும் கலண்டரும் 10.12.3398 புதன் 5.2 8:17 என்றன. வைகுந்தனுக்கு இன்று மகிழ்ச்சியான நாள். காரணம் ஸ்டெல்லா. ஸ்டெல்லாவுக்கு இன்று பிறந்த தினம். அவள் பிறந்தது 10.12.3387இல். இன்று அவளுக்கு பதினெட்டு வயது. வைகுந்தன் அவளுக்கு ஒரு பரிசு கொடுக்கவுள்ளான் விநோதமாக!

''குக்..கூவ்க்'' என்று தொலைக் காட்டி வப்பிட்டது. ஆளியைத் திருகினான். திரையில் பேராசிரியர் ஸ்ரீஜத் தோன்றி ''குட் மோர்னிங்'' என்றார். பதில் சொன்னான்.

ஆராய்ச்சிக் கூடம் 31இல் இன்று உனக்கு முக்கிய வேலை. திரும்பி வர தாமதமாகக் கூடும். தேவையான உணவு மாத்திரைகளுடன் வா' என்று கூறி உடன் மறைந்தார்.

வைகுந்தன் சபித்தபடி ஒரு அவசரக் குளியல். உணவு மாத்திரை இரண்டும் தாக மாத்திரை ஒன்றும் விழுங்கினான். புறப்பட்டான். மறுபடி ''குக்...கூவ்க்...' இம்முறை திரையில் ஸ்டெல்லா. உடன் பரவசமானான்.

''எழுந்து விட்டாயா சோம்பேறி நண்பனே...?'' என்றாள். சிரித்தாள்.

''இனிதாய் வாழ்த்துக்கள்! இன்று நீ பிறந்து 18 வருடங்கள்''

''நன்றி! இன்று ஓய்வா உனக்கு?''

''இல்லை. ஆராய்ச்சிக் கூடம் 31ல் வேலை. உனக்கு?''

''ஆச்சரியம்! எனக்கும் 31ல் தான்''

''உடன் வா! உனக்கு ஒரு பரிசு தர உள்ளேன்''.

''ஐயோ, நீ 1998ல் பிறந்திருக்க வேண்டியவன். கற்கால மனிதன்''

''பரவாயில்லை. நேரில் வருகிறேன்''

✱

பேராசிரியர் சிறிஜத் யோசனையிலிருந்தார். மேஜை மீது நீல நிற பைல். அரசாங்க ரகசியக் கோவை. பிரித்தார். சங்கேதக் குறியீடுகள். உதவிக்கு மொழிகாட்டியில் ஆளிகளைத் திருப்பினார். வாசித்தார்.

'சுற்றறிக்கை 127 M.E.3 இற்கிணங்க அரச உயர்குழுவின் முடிவு.

இன்று அமுல் படுத்த வேண்டியது. பூமியின் 217வது பிரிவில் குடியேற்றப்பட்ட 50 வயதுக்கு மேற்பட்ட மனிதர்கள் இரண்டு கோடியே பத்துலட்சம் பேரையும் உடன் அழித்துவிட்டு இடத்தை துப்புரவு செய்யவும். 4000மாம் ஆண்டின் மனித சந்ததிக்காக அந்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளது''. கீழே அரச உயர்குழு முத்திரையும் ஒப்பமும் இடப்பட்டிருந்தன. பேராசிரியர் கொஞ்சம் வியர்த்தார்.

'இது மிகவும் பெரியதொகை' என்றார். ஓசை எழுப்பிவிட்டு உள்ளே வைகுந்தன் வந்தான்.

'மானுட வள அமைச்சுடன் பேச்சுவார்த்தை என்றுதானே இன்றைய திட்டம். மாற்ற வேண்டி வந்தது ஏன்? என்றான்.

பேராசிரியர் ஒன்றும் பேசாமல் நீலநிற கோப்பைத் தூக்கி அவனிடம் போட்டார். வைகுந்தன் படித்தான். நெற்றியில் பொடிதாக வியர்த்தான்.

'இது மிகவும் அதிகம்' என்றான்.

'இருந்தாலும் வேற வழியில்லை'

'மானுட வள அமைச்சு மிகவும் மோசம். ஒரு பக்கம் உயிர்வாழ் வயதெல்லையை குறைக்கிறார்கள். மறுபக்கம் அழிவுத் தொகையை அதிகரிக்கிறார்கள்'

'மானுடப் பெருக்கம், என் இளைய நண்பனே, மானுடப் பெருக்கம்'

'இருந்தாலும் இப்படியா?'

XEM 30ஐ எடுத்துச் செல். இன்று நீதான் இதனைச் செய்யக் கட்டளை'

'..........'

'இப்போது காலை 8.30மணி. 10.40க்குள் முடித்து விடு. பின் மாலை வரை உனக்கு ஓய்வு. மறுபடி நாளை முதல் உனக்கு சந்திரக் கிரகத்துக்கு இடமாற்றம். ஒரு ஆறு மாதம் போய் வா'

'..........'

'என்ன பேசாமலிருக்கிறாய்?'

'இதற்கு ஒரு முடிவே கிடையாதா?'

'எதற்கு? மானுடப் பெருக்கத்திற்கா? அழிவுக்கா? அல்லது இரண்டுக்குமா?

'நான் இன்று ஸ்டெல்லாவுடன் பொழுதைக் கழிக்க நினைத்திருந்தேன். இன்று அவளுக்கு 18 வயது'

'மாலை வரை உனக்கு ஓய்வு'

'போதாது'

'இதுவே அதிகம். என்னுடைய தனிப்பட்ட சிபாரிசில் கிடைத்தது' '

'புதிதாகச் சேர்ந்த ஜுலுஸுவை அனுப்பலாமே...'

'அனாவசியமான அபிப்பிராயம். புறப்பாடு. XEM 30ஐ எடுத்துக் கொள். பூமியிலிருந்து 60ஆயிரம் அடி உயரத்தில் பற. கதிர் 7ஐப் பிரயோகி. இரண்டு கோடி 10 லட்சம் பேருக்கு அதுதான் வேண்டும்'

'கடந்த 200 வருடங்களை விட இம்முறை தொகை அதிகம். எனக்கு தயக்கமும் கவலையும் ஒருங்கே....'

'எனக்கு 50 வயதாகிறது அப்பா. நான்தான் நீ சொன்ன நிலையிலிருக்க வேண்டியவன்' முகத்தைத் துடைத்துக் கொண்டார் பேராசிரியர். பாவமாக இருந்தது. பெருகிவரும் மானுடத் தொகையை கணிசமானளவு குறைத்தே ஆக வேண்டிய நிலையில் அரசாங்கம்.

✱

உலகில் 3000வது ஆண்டில் ஏற்பட்ட அகிலக்கிராமப் புரட்சியின் பின் நிலைமை இப்படித்தான் இருந்து வருகிறது. அகிலக் கிராமப் புரட்சியானது ஒரு காலத்தில் நாடுகளாகப் பிரிந்து கிடந்த பூமியை ஒன்றிணைத்து ஒரே நிர்வாக அலகினுள் கொண்டு திருந்தது. '' பூமி ஒன்றே! மானுடர் ஒன்றே!! என்பது இப்புரட்சியின் அடிநாதமாகும். அரச நிர்வாக உயர்குழு ஒன்று பூமியின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்தவென கண்டத்துக்கு ஒரு உறுப்பினர் வீதம் சர்வஜன எண்ண அலைக் கணிப்பீடு மூலம் தெரிவானது. இப்பூமி, பின்னர் சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப மொத்தம் 300 பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. இதில் 217வது பிரிவில் 50 வய' பூர்த்தியடைந்தவர்கள் குடியேற்றப் படுகிறார்கள். இதற்கு வயோதிபர் பிரிவு என்றும் பெயர். பெருகிவரும் சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப இப்பிரிவில் குடியேறியோர் 5 வருடத்துக்கொரு தடவை அழிக்கப்படுவர். இந்நடைமுறை கடந்த 700 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இது ஒன்றும் புதிதில்லை.

✱

ஆராய்ச்சிக் கூடத்தில் நுழைந்தான் வைகுந்தன். கண்கள் ஸ்டெல்லாவைத் தேடின. பத்தாயிரம் பேர் இங்கே வேலை செய்கிறார்கள். தவிர, ஏழாயிரம் ரோபோட் மனிதரும் உள்ளனர். ஸ்டெல்லாவின் பிரிவில் போய் பொத்தானை அழுத்தினான். கதவு திறந்தது. ஸ்டெல்லா இல்லை. ஏமாறினான்! தேடினான்! தொலைக்காட்சி தொடர்ந்து கூவ பொத்தானை அழுத்தினான். திரையில் மறுபடி பேராசிரியர்

'வைகுந்தன் இங்கே இருக்கிறானா?'

'ஆம். இப்போதுதான் வந்தேன்'

'நீ அங்கே என்ன செய்கிறாய்?'

'ஸ்டெல்லாவை தேடி வந்தேன்'

'அப்பாவிக் காதலனே! கற்காலத்தில் உன்னைப் போல் பலரை வாசித்திருக்கிறேன்.

'காதலனா? புதிய பெயரா?'

'இப்போது மணி என்ன தெரியுமா?'

'எட்டு இருபது'

'இன்னும் 10 நிமிடத்தில் XEM 30இல் புறப்படு. கதிர் 7ஐப் பிரயோகி. தாமதிக்கிறாய் என் இளைய நண்பனே!'

'ஸ்டெல்லாவை......'

'உன்னுடன் சக ஓட்டியாக வரப்போவது யார் தெரியுமா?'

'யாராவது இரக்கமற்ற அரக்கன்'

'அரக்கி ஸ்டெல்லா!'

'என்ன...?' அதிர்ந்தான். மகிழ்ச்சி வயிற்றில் தயங்கியது.

'இப்போது உனக்கு ஓய்வு தேவைப்படாது அல்லவா? கதிர் 7ஐப் பிரயோகித்து விட்டு கப்பலுக்குள் காதலி கற்கால மனிதனே...'

✱

'ஏறக்குறைய 3900 வருஷங்களுக்கு முன்பு பிறந்திருக்க வேண்டியவன் நீ. அக்கால இதிகாசங்களில்தான் காதல்' என்ற ஸ்டெல்லா சற்று முகமூடியை நீக்கினாள். வைகுந்தனை நேரடியாகப் பார்த்தாள். அவளது பழுப்புக் கூந்தல் குட்டையாக ஆடியது. சுருண்டிருந்தது. கண்கள் நீலம். பூமியின் 117வது 128வது பிரிவிலுள்ளோரின் கலப்பு. ஆரோக்கிய சந்ததியில் ஒருத்தி.

'நீ சொன்ன இதிகாசங்கள் நான் படித்ததில்லை ஸ்டெல்லா' என்ற வைகுந்தன் நகர் பாதையில் ஏறினான். ஸ்டெல்லா ஏற கை கொடுத்தான். அவள் ஏறியதும் அணைத்தான்.

'இன்று உனக்கு வயது 18' என்றான் முணுமுணுப்பாக. ஸ்டெல்லா சில வினாடிகள் தயங்கி அவனுடன் இணைந்தாள்.

நகர் பாதை ஓடி XEM 30 அருகே நின்றது. இறங்கினார்கள். மறுபடி விமானத்துள் ஏறினார்கள். இருக்கையில் அமர்ந்து பட்டிகளை இணைத்து வேண்டிய சமிக்ஞை கிடைக்க காத்திருந்தனர். எதிரே திரையில் கீறல்கள் தென்பட்டு மறைந்தன. குறியீடுகள் வந்தன. பேராசிரியர் தோன்றினார்.

'வாழ்த்துக்கள் நண்பா! ஸ்டெல்லா!'

நாசமாய் போகட்டும் பேராசிரியரே! நீங்களும் அரசும்!'

நீ மகிழ்ச்சியாய் இருப்பாய் என்றல்லவா நினைத்தேன்.'

'வைகுந்தனுக்கு மானுடர் மீது காதல்' என்ற ஸ்டெல்லா முறுவலித்தாள்.

'உன் மீதும் கூட'

'நாங்கள் புறப்படுகிறோம்' வைகுந்தன் பறக்கும் உயர் விசையை அழுத்த முதல் சமிக்ஞை கிடைத்து ஒரு வினாடியில் 1500 அடி உயர்ந்தது. வட்டமிட்டு பறந்தது அழிவை நோக்கி.

✱

மேகமூட்டம் விண்வெளி XEM 30 விரைந்தது. விண்வெளியில் செயற்கை கோள்களை



நிறுத்தி அவற்றின் உதவியில் பாதை சிக்னல்கள். பல விமானங்கள் பயணித்தன. விதம் விதமான உருவங்கள், நிறங்கள், தெருவழிப்பாதையாதலால் சில தாமதித்து நின்றன XEM அரச விமானம். தடை சமிக்ஞைகள் கட்டுப்படுத்தாது.

ஸ்டெல்லா கையிலிருந்த அறிக்கையை பார்வையிட்டாள்.

'இரண்டு கோடி பத்து லட்சம் பேருக்கு கதிர் 5 போதுமா? சந்தேகித்தாள்.

'போதாது. கதிர் 7 கொண்டு வருகிறோம்' கதிர் 7 பிரயோகித்து நான் பார்த்ததில்லை.

'இது அதிநவீனம். கட்டிடங்கள், மரங்துள், ஊர்வன, பறப்பன என்பவற்றுக்கு ஒரு ஆபத்தும் வராது. மனிதர் மட்டும் 25 விநாடியில் பஸ்பம்'

'அட! புதிய குடியேற்றம் எப்போது?'

'நாளைக்கே! 3000 விமானங்கள் தயாராக உள்ளன. அரச உயர் குழுவும் வருகிறது.'

அப்படியானால் நாளைக்கும் ஓய்வு இல்லை'

'ஆம்! எனக்கு தாகமாக இருக்கிறது!' ஸ்டெல்லா ஒரு தாகமாத்திரை எடுத்து அவனது வாயில் வைத்தாள். விரலைக் கடித்தான். வலித்தது. ஆனால் இனித்தது.

'ஸ்டெல்லா, இது அநியாயம். நான் விரும்பவில்லை'

'மறுபடி மனிதாபிமானமா? சரியான கற்கால...'

'நிறுத்து அதனைச் சொல்லவில்லை. பணக்கார வயோதிபர்கள் வேறு கிரகங்களுக்குத் தப்பியோடி விடுகிறார்கள் இங்கு மட்டும் அழிப்பது நீதியா?

'வேற்றுக்கிரக சட்டமூலம் அமுலுக்கு வருகிறது'

'.........'

திடீரென வைகுந்தனின் மனதில் மின்தாக்கியது போலிருந்தது.

பரிசு? ஆம். மறந்தே விட்டேன். ஒரு வினாடி நேரத்தில் அவன் கொடுக்க எண்ணியிருந்த பரிசு மாறி விட்டது. வைகுந்தனின் முகம் இறுகியது. இதுதான் சரியான பரிசு. இவளுக்கும் இந்த பூமிக்கும் பொருத்தமானது தன் முட்டாள்தனமான (?) பரிசை தீர்மானித்துக்கொண்டான்.

'என்ன.... பேசாமலிருக்கிறாய்? பிரிவு 217 நெருங்கிவிட்டது?'

'ஸ்டெல்லா' என்றவனின் குரல் கரகரத்தது.

'கதிர் 7ஐ முதற்தடவையாக இப்போதுதான் பாவிக்கப்போகிறோம். இதன் பொருளாதாரப் பெறுமதி 900 பிளாட்டினம். இது மாதிரி இன்னொன்று செய்ய பத்து வருடம் எடுக்கும்'

'900 பிளாட்டினமா? பிரமாண்டமான செலவு 40 பிளாட்டினத்துக்கு மேல் செலவழிக்க அனுமதியில்லை....'

அழிவுத் தொகை அதிகம். அதனால் செலவும் அதிகம்'

'பிரிவு 217 மேல் இருக்கிறோம்'

சற்று கீழே போ. உயரம் 6000 அடி வைத்துக் கொள்'

'நிலையாக நிறுத்தவா வைகுந்தன்?'

'ம்! ஸ்டெல்லா, உன்னை உளமார காதலிக்கிறேன். அருகில் வா!'

'மறுபுடியுமா....? காதலரே.... மணி 9.40'

'ஆகட்டும் கதிர் 7ஐ என் முதுகில் பொருத்தி விடு'

'முதுகிலா? ஆச்சரியமானாள் ஸ்டெல்லா. கதிர் 7 ஒரு சிறிய ரொக்கட் வடிவில் ஒரு கிரிக்கெட் மட்டை அளவில் இருந்தது. சாதுவாக இருந்தது. ஆகாயத்தில் 6000 அடி உயரத்தில் வைத்து மெதேன் வாயுத் துப்பாக்கியால் சுட்டதும் நான்கு நிமிடம் 36 வினாடிகளில் பூமியை அடைந்து விடும். அடுத்த வினாடி வெடிக்கும். வெளியாகும் கண்களுக்குப் புலப்படாத கதிர் வீச்சில் 2 கோடி 10லட்சம் பேரும் 3 நிமிடங்களில் பஸ்பமாகி விடுவர். துல்லியமாக கணக்கிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட வாய்ப்பாடு அது.

'நேரம் சரி!' ஸ்டெல்லா அதனை முதுகில் பொருத்தினாள். சமிக்ஞை வப்பிட்டது. ப்தில் சொன்னாள். அழிவு ஒன்றிணைப்பு அதிகாரி திரையில் தோன்றினார்.

'எல்லாம் சரியாக உள்ளனவா நண்பர்களே?'

'ஆம் அதிகாரியே!'

'சரி பிரயோகித்து விடு!'

கட்டளை பிறந்து விட்டது. ஸ்டெல்லா வைகுந்தனை நோக்கினாள். அவளது முகம் வெளிறியிருந்தது. ஆனால் தீர்மானமாக இருந்தது.

ஸ்டெல்லா, 2000அடி முன்னே செல்'

XEM 30 உடன் முன்னேறியது.

நிறுத்து கீழே பார்.

கீழே கடல்பரப்பு சிறிதாக தெரிந்தது. ஸ்டெல்லா ஆச்சரியமானாள். கேள்விக்குறியோடு வைகுந்தனை நோக்கினாள்.

'கடலிலிருந்தா ஆரம்பிக்கப் போகிறாய்?'

'இல்லை. ஆனால் ஆம்!'

குழப்பமானாள். நேராகப் பார்த்தாள். வைகுந்தன் அருகே வந்தான். முத்தமிட்டான்.

'இன்று உனக்குப் பிறந்த நாள். நல்ல நாள். இந்நன் நாளில் இம்மனிதர்களை அழிக்க எனக்கு இஷ்டமில்லை. இன்னும் 10 வருட காலம் அவர்களை நான் உயிர்வாழச் செய்யப்போகிறேன். ஸ்டெல்லா, உனக்கு என்னுடைய பரிசு இதுதான்'


வைகுந்தன் முதுகில் பொருத்திய கதிர் 7 உடன் விமானக் கதவை சட்டென்று திறந்து கடலை நோக்கி தா...வினான். ஸ்டெல்லாவின் கூக்குரல் ஒரு விநாடியில் தேய உடலின் அனைத்துப் பாகங்களும் விறைக்க, 900 பிளாட்டினம் பெறுமதியுடைய கதிர் உடன் வைகுந்தன் 6000 அடி உயரத்திலிருந்து கடலை நோக்கி பயணிக்க அந்த கற்கால மனிதனின் உடல் ஒரு புள்ளியாக மறைந்தது.

ஸ்டெல்லாவின் நீல விழிகளில் ஒரு துளி நீர்!

'கனவுப்பூமி' என்ற இச்சிறுகதை 'சிறிபாலபுரமாத்தயா' என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. சனத்தொகைப் பிரச்சினை தொடர்பாக தமிழில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் தெரிவான 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் உள்ளன. சுற்றாடல் வெகுஜனப் பேரவை இதனை வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்களும் குடும்ப உறவுகளும் — 3

## பொருளாதாரம் அசமத்துவத்தை நீக்குமா?

**பொருளாதார பாதுகாப்பு பற்றியது:**
வரலாற்று ரீதியில் தந்தை வழி சமுதாயத்தின் தொடக்கமே பெண்களை வீட்டோடு கட்டிப்போட்டது எனவும், அதனால் பெண் முற்றும் முழுதாகவே பொருளாதார பலம் அற்றவளாகவும் ஆணில் தங்கியிருப்பவளாகவும் உருவாக்கப்பட்டது. இன்று விஞ்ஞான வளர்ச்சியோடும், மாற்றங்களோடும் பெண்கள் கல்வி வாய்ப்பைப் பெற்று ஓரளவு பொருளாதாரப் பலத்தினை பெற்றுக்கொண்டாலும் கூட பல பெண்கள் ஒப்பீட்டளவில் பொருளாதார பலம் அற்றவர்களாகவே உள்ளனர். அதாவது பல குடும்பங்களில் பெண்கள் ஆண்களை சார்ந்திப்பதும் ஆண் வருமானம் தேடுபவராகவும், பெண் வீட்டுவேலைகளை செய்பவராகவும் காணப்படுகின்றனர். இங்கு குடும்பத்தில் வீட்டு வேலைகள் என்பது பற்றி முன்பே ஆராய்ந்துள்ளோம். எனினும் சுருக்கமாக நோக்கின் சமையல், வீட்டு பராமரிப்பு, குழந்தை வளர்த்தல் போன்றவற்றில் பெண்கள் தமது நேரத்தில் பெரும்பகுதி செலவிடுவதினால்,ஒரே வேலையை திரும்பத் திரும்ப சலிப்புடன் செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறான சார்ந்த (Depend) வாழ்தலே பெண்ணின் கீழ்ப்படிவிற்கு, அதாவது ஆண்-பெண் அசமத்துவ நிலைக்குக் காரணம் என கருதப்படுகிறது. இதனையே மார்க்ஸ் சமதர்ம அரசின் தோற்றத்தில் பெண்கள் பொருளாதார பலத்தை பெற்று உற்பத்தியில் ஈடுபடும் போது சமத்துவமாகவே நடத்தப்படுவார்கள் எனக் கூறினார். ஆனால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே கிட்டத்தட்ட 18ம், 18ம் நூற்றாண்டிலே பெண்கள் சார்ந்து வாழ்தல் என்பதைக் கேள்விக்குட்படுத்தி கல்வி வாய்ப்பு, வேலைவாய்ப்பு என்பவற்றைப் பெற்றுக்கொண்ட போதும் பெண்ணின் கீழ்படிவு என்பது தொடரவே செய்தது.

இன்று (இலங்கையின்) தமிழ் சமூகத்தில் குறிப்பிடத்தக்களவு பெண்கள் பொருளாதார பலத்தைப் பெற்றுக் கொண்ட போதும், ஏன் பொருளாதார பலம் எதுவுமற்ற ஒருவரை ஒரு பெண் தனது துணைவராக தேர்வு செய்து குடும்ப வருமானத்தை பெண் தேடுபவராக இருக்கும் பட்சத்திலும் கூட குடும்பத்தில் பெண்ணின் கீழ்படிவு தொடரவே செய்கிறது. எனவே குடும்ப வருமானத்தை பெற்றுக் கொடுப்பவராக பெண் இருந்தாலும், சில சமயங்களில் ஆணைவிட பெண் கல்வி, பொருளாதார பலம் அதிகளவில் தேடுபவராக இருந்தாலும் கூட கீழ்படிவு தொடர்ந்து செல்வதையே காணக்கூடியதாக உள்ளது. ஆனால் பொதுவாக பெண் தொழிற்சாலைகளிலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெற்றுக் குறைந்த ஊதியத்தையும், அவள் தொழில் சில சமயங்களில் நிச்சயமற்ற தன்மையுடையதாகவும் இருப்பதனால் தமது திருமண வாழ்வில் குறைந்த பட்சம் பகுதியளவிலாவது பொருளாதார ரீதியாக ஆண்கள் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்தில் அல்லது ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்களை எடுத்துக்கொண்டால் இவர்கள் வருமானம் 2000/=க்கு மேல் தாண்டுவதில்லை. 40வயது வருமானால் அல்லது கருத்தரித்திருந்தால் அவர்களுடைய வேலை நிச்சயமற்றதாக உள்ளது.

எனவே பொதுவாக பல்வேறு ஆய்வுகளின் படி குடும்ப வாழ்வில் பெண்கள் பெருமளவு பொருளாதார பங்களிப்பினை செய்தாலும் கூட குறைவாக மதிக்கப்படுவதுடன் ஆண்களே வருமானம் தேடுபவராகக் கருதப்படுகின்றது. பெண்கள் எவ்வளவுதான் முக்கியளவு பங்களிப்பு செய்தாலும் கூட அந்த பற்றாக்குறையை ஈடுசெய்யும் மேலதிக வருமான மாகவே கருதப்படுகிறது. பெண்ணினுடைய பொருளாதார பாத்திரம் குறைவாக மதிப்பிடப்படுவதுடன் பெண்களை வீட்டுக் குரியவர்களாகவும் உறுதிப்படுத்துவதில் சமூக கருத்தியல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்று பெண்களின் பொருளாதார பாத்திரம் குறைவாக மதிப்பிடப்படுவதற்கு சிறந்த உதாரணம் திருமணத்தின் போது ஆண் செய்யும் தொழிலையே பெண்ணும் செய்து ஒரே வருமானதை பெறுபவர்களாக இருந்தாலும் சீதனம் எனப் பல லட்சங்களுடன் வீடு, நகைகளை ஆண்களுக்கு கொடுக்கும் முறையைக் குறிப்பிடலாம். எனவே குடும்ப நிறுவனத்தில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒரு பொதுவான விலாசத்தைக் கொண்டிருந்தாலும் கூட அவர்கள் அனைவரும் ஒரே விதமான வாழ்க்கைத் தரத்தைக் கொணடிருக்கவில்லை. பொதுவாக கணவன்மாரை விட அதிகளவு ஊதியம் பெறும் நிலையிலும் கூட குடும்ப வருமானம் என்பதை எவ்வாறு செலவிடப்படுகின்றது எனபதை நிர்ணயிப்பதில் ஆண்களுக்குத்தான் அதிக வாய்ப்பு உள்ளது. ஆனால் இன்னும் சில குடும்பங்களில் ஆண்கள் தமது வருமானத்தில் பெரும் பகுதியை அல்லது குறிப்பிடத்தக்களவு வருமானத்தை குடி, புகை, வேறு டாம்பீக முறையில் செலவு செய்து குறிப்பிட்ட தொகையையே குடும்ப செலவிற்காக செலவிடுவார்கள். இங்கு பெண்கள் உழைப்பில் ஈடுபடுவராயின் தமது வருமானத்தை முற்றும் முழுதாகவே குடும்ப அங்கத்தவருடைய தேவைகளை ஈடு செய்வதிலேயே செலவிடுகிறார்கள். ஆண்களில் தங்கியிருப்பவராக இருந்தால் கடன் பட்டோ, வேறு வீடுகளுக்கு கூலி வேலைகளுக்கு சென்றோ பற்றாக்குறையை ஈடுசெய்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலைமை அவரவர் வர்க்க நிலைமைக்கேற்ப வேறுபட்டாலும் மொத்தத்தில் பெண்கள் பொருளாதார பலத்தை பெற்று உழைப்பில் ஈடுபட்டாலும் கூட அவர்களின் கீழ்ப்படிவு ஆண்-பெண் அசமத்துவ நிலை தொடரவே செய்கிறது.



எனவே பொருளாதார சுதந்திர பலம் மட்டுமே பெண்களுடைய கீழ்படிவுநிலையை போக்கிவிட முடியாது. சிலசமயம் துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதற்கு இந்த பலம் உதவினாலும் கூட குடும்ப நிறுவனத்தினுள் அசமத்துவ நிலையை போக்கிவிட முடியாது. ஆகவே சில பெண்ணிலைவாதிகள் மார்க்ஸ் கூறிய பொருளாதார பலம் பெண்களின் விடுதலைக்கு வழிவகுக்கும் என்பது பொய்த்துவிட்டது எனக் கூறுவதும் உண்டு. ஆனால் குடும்ப நிறுவனம் என்பது ஆணாதிக்க கருத்தியலினால் (சித்தாந்தநிலை) திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணாதிக்க சித்தாந்தம் குடும்பத்தில் மட்டுமல்ல சமூகத்தில் பல அரசு நிறுவனங்களினால் (கல்விகூடம், கலை, இலக்கியம், மதம், சட்டம்) பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பலப்படுத்தல்கள் பல ஒன்று சேர்ந்து செயற்படுவதினால் பொருளாதார சுதந்திரம் மட்டுமே பெண்ணின் கீழ்ப்படிவிற்கு முற்றுப்புள்ளிவைப்பதாக இல்லை. எனவே மார்க்ஸ் கூறுகின்றார் சமதர்ம பொருளாதார அரசு தோற்றுவிக்கப்படும் போது தனியுடமை நீக்கப்பட்டு பொதுவுடமை தோற்றத்துடன் பெண்கள் யாவரும் உற்பத்தி உழைப்பில் ஈடுபட வீட்டுவேலைகள், குழந்தை வளர்ப்பு என்பனவற்றை அரசே பொறுப்பு எடுக்கும் ஒரு காலகட்டத்தில் இந்தப் பெண்களின் அசமத்துவ நிலை படிப்படியாக மறைந்து விடும் இவைகள் கூட எந்தவொரு நாட்டிலும் நடைமுறையில் அமுல்படுத்தப்படாத ஊகங்களே. எனவே இந்தக் கருத்துக்கள் கூட எந்தளவு பெண்களின் கீழ்ப்படிவை அசமத்துவ நிலையை போக்கி விடக் கூடியது என உறுதி கூறமுடியாததாகவே உள்ளது. ஆனால் முதலாளித்துவ அரசு இருக்கும் நாட்டில் நிச்சயமாய் இந்த ஆண்-பெண் அசமத்துவ நிலை என்றுமே தீர்த்துவைக்க முடியாத ஒன்றேயாகும்.

**சமூகப் பாதுகாப்பு பற்றியது**

இன்று தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு பெண் குடும்ப நிறுவனத்தினுள் செல்வதற்கு சமூகப் பாதுகாப்பும் முக்கிய விடயமாகின்றது. பாலியல் தொல்லைகள், முதல் பாலியல் பலாத்காரம் வரை பெண்களுக்கெதிரான அனைத்து விடயங்களும் சமூகத்தில் மலிந்து காணப்படுகின்றன. பருவப் பெண்கள் மட்டுமல்ல பெண்குழந்தைகள் (வயதிற்கு வராதவர்கள்) கூட சமூகத்தில் பிரபல்யமான நடிகர்கள், சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் போன்றோரால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான செய்திகளை வெகுஜன தொடர்பு சாதனமாகிய பத்திரிகைகள் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. இதனால் ஒரு பெண், குழந்தைப் பருவம் முதல் திருமணமாகும் வரை பெற்றோரின் அதீத கண்காணிப்பில் இருக்க வேண்டியவளாக உள்ளாள். பருவப் பெண்கள் பாடசாலை செல்லும்போது, அல்லது அரசசார்பற்ற கல்விக் கூடங்களுக்குச் செல்லும் போது, அல்லது பல தொழிற்சாலைகளில் கடமை புரியும் போது பெண் என்பதற்காக அவள் பாலியல் தொல்லைகள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உட்பட வேண்டியுள்ளது.

அண்மைக்காலங்களில் தமிழ்ச் சினிமாக்களில் வரும் பாடல்கள் இரட்டை அர்த்தம் பெறுவனவாகவே உள்ளன. உதாரணமாக ''மதினி மதினி நான் மத்தோடு வாரேன். பருப்பு கடைந்து உண்ணலாமா'', ''சோலிக்குள் என்ன இருக்கு மாராப்பில் என்ன இருக்கு'', ''ஸ்ரைலு ஸ்ரைலுதான் ...ஏழு மணிக்கு பிறகு நீயும் இன்பலச்சுமி'' போன்ற பல பாடல்கள் பெண்களின் பாலியல் வன்முறைக்கு காரணங்களாக அமைவதுடன் பெண்கள் வெறும் நுகர் பண்டங்கள் தான் என்பதை அழுத்ததுவனவாகவே உள்ளன. இத்தகைய பாடல்களை ஒரு ஆண், தெருவில் செல்லும் பெண்கள் மத்தியில் பாடினால் அது அத்தனை பெண்களையும் பாலியல் சேட்டைக்கு உட்படுத்துவதாகவே அர்த்தப்படும்.

இதேபோன்று தொழிற்சாலையிலோ அல்லது வேறு அரச நிறுவனங்களிலோ வேலை பார்க்கும் பருவமங்கையை (திருமணமானவர் அல்லது திருமணமாகாதவர்) மேலதிகாரிகள் பல சலுகைகள் வழங்கி அவர்களது பதவி உயர்விற்கு உதவுவதுபோல் நடந்து தமது பாலியல் இச்சைகளுக்கு தீனி போடுமாறு அழைப்பது நம் கண்முன்னே நடப்பவைதான். இந்தக் கட்டுரையை எழுதும் நானும் கூட ஆசிரியர் தொழிலில் இருந்தவள்தான். ஒரு ஆசிரியை சம்பள உயர்வு Incre ment) தொடர்பாக கல்வித்திணைக்களம் சென்று முறையிடும், போது ''என்னோடு தொழில் பார்க்கும் சக ஆசிரியர்களுக்கு எல்லாம் செய்து கொடுத்துவிட்டீர்கள் எனக்கு மட்டும் செய்யவில்லையே?'' எனக் கேட்டால் சோ.. என சிரிப்பொலியுடன் ''நாங்கள் செய்வதற்குதானே உள்ளோம் நீங்கள் சம்மதித்தால் சரி'' என கூறுவதை பல தடவை என்காதுகளாலேயே கேட்டிருக்கிறேன். அத்துடன் அந்த ஆசிரியயை பலமணி நேரம் உட்கார வைத்து நேரத்தைக் கடத்துவர். இந்த மாதிரியான வன்முறைகளின் போது பெண் அசடுவழிய சிரித்தாலும் உண்மையில் அவள் அவமானப்படுத்தப்படுகிறாள், அசிங்கமாக அர்த்தப்படுத்துகிறார்கள் என அவள் கோபப்படுவதில்லை. மனதிற்குள் திட்டுவதுடன் சரி.

இவ்வாறு பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கும் பெண்கள், குடும்பம் என்ற நிறுவனத்தினுள் சென்று விட்டால் ஓரளவு பாதுகாப்புக் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். ஆனால் குடும்பம் நிறுவனத்தின் முரணான செயற்பாடுகளினால் ஏமாற்றமேயடைகிறார்கள்.

1. ஜனநாயக மறுப்பு,
2. கட்டாய பாலியல் உறவு
3. தான் விரும்பாத போது கருவை சுமப்பது
4. வன்முறை (அடி, உதை) என மிக மோசமாகவே சுரண்டப்படுவதுடன் அடக்குமுறைக்கும் உள்ளாகிறாள். சில சமயங்களில் பால் உறுப்புக்கள் அல்லது நடத்தை கெட்ட ஒருவரை, குறிப்பிடும் பதம் போன்றவற்றைக் கூட நாகூசாமல் ஆண் கூறுவது கூட குடும்பத்தில் சர்வசாதாரணமான விடயமாகவே உள்ளது. இவற்றையெல்லாம் நோக்கும் போது ''சட்டிக்குள் இருந்து அடுப்பிற்குள் குதித்தது'' போன்ற தோற்றப்பாட்டையே பெண்கள் உணர்கிறார்கள்.

எனவே பெண் சமூகப் பாதுகாப்பு எனக் கருதி குடும்ப நிறுவனத்தினுள் வருவது என்பது ஒருவிதத்தில் கானல் நீர் போன்றதே. இங்கு தனிமையில் இருப்பது பாதுகாப்பற்றது. குடும்பத்தினுள் செல்ல வேண்டும் எனத் திணிப்பது எல்லாம் சமூக கருத்தியலே ஆகும். இதனைப் பெண்கள் உணர்ந்து கொள்ளாதபோது மீண்டும் ஏமாற்றப்படுகிறார்கள்.

**இராசம்மா அனாமிகா**

சந்ததி மறு உற்பத்தி, பாலியல் தேவை பற்றி அடுத்த இதழில்..

குப்புறப் படுத்துக் கொண்டு.
பூத்துச் சிதறிக் கிடக்கும் நட்சத்திரங்களையும்
வந்து என் மேல் விழுந்து
ஊரையே போர்த்தியிருக்கும் நிலாவும்
அங்கு மிங்கும் பட்டு
மோதித் திரியும்
குருட்டு வௌவால்களும்
வானில் பொங்கி வழியும்
பஞ்சுக் கூட்டங்களாய் முகில்கள்.
*முட்டு முட்டு என நானும் அவளும்
சிறு பிள்ளையில் தலைகளை
உடைத்துக்கொண்டதை அந்த முகில்கள்
உணர்வு படுத்தின.

கூட்டங்கூட்டமாய் முகில்கள்
வந்து மோதி
என்னை இருளச் செய்த போது
தட்டத் தனியே
மொட்டை மாடியில் உணர்ச்சியில்
சாறன் உரிந்து கிடக்க
இடைக்கிடையே இருளும் வெளிச்சமுமாய்
சிறு பிள்ளையாய்க் கிடக்கிறேன்.
ஊரையே கலகலக்கப் பண்ணியிருந்த
மின்சாரம் அணைந்து போக
ஊர் எல்லையில் துவக்குகள்
வெடிக்க ஆரம்பிக்கின்றன.

முட்டு முட்டு பருவத்திலிருந்த சுதந்திரமும்
அற்றுப் போனதை நினைத்துக்
கண்ணீர் சிந்துகிறேன்.
விடிந்த போது யாரோ தெருவில்
சொல்லிப் போனான்.
ஊர்த் தொங்கலில் ஒருவனை
சுட்டுக் கிடக்குதாமென்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் — 16

1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பினூடாக உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அறிமுகத்தின் பின், 1982ம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதி இலங்கையின் முதலாவது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது. எந்த பெண்ணும் இத்தேர்தலில் போட்டியிடவில்லை.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதினால் அவரால் அதனை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்ய முடியாத அளவிற்கு அரசியலமைப்பு காணப்பட்டது மல்லாமல் 1982ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் அவரால் போட்டி போடக்கூடிய நிலை இருக்கவில்லை.

ஆனால் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி நடந்த இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்கவால் போட்டியிட முடிந்தது. அவருக்கெதிரான ''குடியியல் உரிமை பறிப்பு'' காலாவதியாகியிருந்ததனாலேயே அவரால் அத்தேர்தலில் போட்டியிட முடிந்தது.

இத்தேர்தலில் பின்வரும் ரீதியில் முடிவுகள் காணப்பட்டன.

ஐக்கிய சோஷலிச முன்னணி - குசும் திசாநாயக்க
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - ரோகினி ஜோசப்
சுயேட்சைக் குழு - 2 (திருகோணமலை) அஞ்சலிதேவி

ஆர்.பிரேமதாச ஐ.தே.க.வின சார்பில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கவின் வாக்குகளை உடைப்பதற்காகவே திரு. பிரேமதாச அவர்கள் ஒஸி அபேகுணசேகரவை திட்டமிட்டு போட்டியிட வைத்தார் என தேர்தலின் போது பரவலாக பேசப்பட்டது. பிற்காலத்தில் ஒஸி திரு.பிரேமதாசவின் நெருங்கிய நண்பராக ஆனதைச் சுட்டிக்காட்டி மேற்படி கருத்து உண்மைதான் என்றும் பேசப்பட்டது.


ரூபா பந்துசேன

ஜனாதிபதி தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தோல்வியடைந்த போதும் அதற்கடுத்த மூன்று மாதத்தில் நடக்கவிருந்த 9வது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை அவர் செய்தார்.

**1989 பொதுத்தேர்தல்**

1989 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் 1988 டிசம்பர் 30ம் திகதியிலிருந்து 1989 ஜனவரி 6ம் திகதிவரை நடந்தது. இதன் போது 1396 பேர் தங்களை வேட்பாளர்களாக பதிவு செய்து கொண்டனர். இவர்களில் 57 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது மொத்த வேட்பாளர்களில் 4% வீதத்தினர் பெண்கள். அதேபோல் இத்தேர்தலின் மூலம் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தில், மொத்தம் 12 பெண்கள் அங்கம் வகித்தனர். இவர்கள் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 5.3 வீதமாகும்.

இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் 4 பேரும், ஐ.தே.க. சார்பில் 7 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். ஐ.தே.க சார்பில் இன்னும் ஒரு பெண் தேசியப்பட்டியலின் மூலம் நியமனம் செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சுமித்திரா பிரியங்கனி அபேவீர, குணவதி திசநாயக்க திருமதி ஹேமா மற்றும் ரத்னாயக்காவும் தெரிவு செய்யப்பட்டதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரேணுகா ஹேரத், அமராபியசீலி ரத்னாயக்க, சுனேத்திரா ரணசிங்க, சமந்தா கருணாரத்ன, சுஜாதா தர்மவர்தன, ராசமனோகரி புலேந்திரன் மற்றும் சந்திரா கருணாரத்னவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் திருமதி. சுமித்திரா பிரியங்கனி அபேவர்தனவின் தந்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உப செயலாளருமாக இருந்தவருமான இந்திரபால அபேவீர வேட்பு மனுத்தாக்கல் செய்ததன் பின்னர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர் சார்பில் அவரது மகள் சுமித்ரா போட்டியிட்டு களுத்துறை மாவட்டத்தில் வெற்றி பெற்றார். அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பதுளை மாவட்டத்தில் போட்டியிடவிருந்த ரத்னாயக்க கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி ஹேமா ரத்னாயக்கவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடச் செய்தது. அதன் மூலமாகவே அவர் தெரிவு செய்யப்பட்டார்.

மொனராகலை மாவட்ட தேர்தலை கட்சியின் சார்பாக வழிநடத்திய திரு.சுமேத ஜயசேன நோய்வாய்ப்பட்டு இறந்தத்தைத் தொடர்ந்து அவர் சார்பாக அவரது மனைவி குணவதி திசாநாயக்க போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**தேசியப்பட்டியலில்**

விகிதாசார தேர்தல் முறையின் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தேசியப்பட்டியல் முறையைத் தொடர்ந்து, போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் 29 பேரைக் கொண்ட பட்டியல் ஒன்றை தேர்தல் ஆணையாளரிடம் வழக்கம். 1989ம் ஆண்டு தேர்தலின் போது 13 அரசியற் கட்சிகளும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டிருந்த போதும் 9 அரசியற் கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுவும் மட்டுமே தேசியப்பட்டியலை சமர்ப்பித்திருந்தது.

அதிலும் இரு அரசியற் கட்சிகளும் ஒரு சுயேட்சைக் குழுவும் மட்டுமே பெண்களுக்கு தமது தேசியப்பட்டியலில் இடம் வழங்கியிருந்தது.


அமரா பியசீலி ரத்னாயக்க

அந்த மூவரில் இருவர் தமிழ்ப் பெண்கள். இறுதியில் இந்த மூவருமே தேசியப்பட்டியலின் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியின் மூலம் நியமிக்கப்பட்டிருந்த திருமதி. சென் பெல்பொல விலகிக் கொண்டதைத் தொடர்ந்து அதனை நிரப்புவதற்காக திருமதி.ரூபா சிறியானி டேனியலை ஐ.தே.க. நியமித்தது. இதன் கீழ் புதிய தேசியப் பட்டியல் முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதற் பெண் சிறியானியாகும்.

இத்தேர்தலின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ரங்கநாயகி பத்மநாதன் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டிருந்த போதும் 2526 வாக்குகள் மட்டுமே பெற்றிருந்தார். இவர் தெரிவு செய்யப்படவில்லை.

**1989 பொதுத் தேர்தல்: தேசியப் பட்டியலில் கூட பெண்களுக்கு இடமளிக்கத் தவறிய 'தேசியக் கட்சிகள்'!**

***சமந்தாதேவி கருணாரத்ன***

ஐ.தே.க. சார்பில் தெரிவு செய்யப்பட்ட இவர், 1952 ஜனவரி 18ம் திகதி பிறந்தவர். இவர் 1978 - 1981 க்கும் இடையில் அன்றைய சமூக தேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்னவின் அந்தரங்க செயலாளராக கடமையாற்றியிருந்தார். இவர் 1981 - 1988 வரை மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராக (கேகாலை மாவட்டம்) இருந்ததுடன், இவரது தந்தை (ரம்புக்கண தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்) திரு அசோகா கருணாரத்னவின் மரணத்தைத் தொடர்ந்து 8வது பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். 9வது பாராளுமன்றத்துக்கும் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலின் பின் சமூக சேவைகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை பெண்கள் சம்மேளனம், கொரிய, சீன நட்புறவுச் சங்கம் என்பனவற்றின் மத்தியகுழு உறுப்பினராகவும் இருந்தவர்.


ரேணுகா ஹேரத்


சந்திரா கருணாரத்ன


ஹேமா ரத்னாயக்க


ராஜமனோகரி புலேந்திரன்

***ரேணுகா ஹேரத்***

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இவர் சுகாதார, மகளிர் விவகார அமைச்சராக இருந்தவர். நுவரெலியா மாவட்ட அமைச்சராகவும் இருந்த இவர், ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியை. பொல்கொல்ல, மற்றும் மியூசியல் ஆசிரியர் கலாசாலையில் பயின்றவர்.

***ராஜமனோகரி புலேந்திரன்***

1949 பெப்ரவரி 7 இல் பிறந்த இவர், வவுனியா மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.டி.புலேந்திரனின் மனைவியாவார். அவரது அந்தரங்க செயலாளராகவும் முன்னைய ஆறு வருடங்கள் கடமையாற்றிய இவர், ஐ.தே.க.வின் மற்றும் ஐ.தே.கவின் பெண்கள் சம்மேளனத்திலும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராவர் தனது கணவரின் படுகொலையோடு பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த இவர் பிரதிக்கல்வி அமைச்சராகவும் கடமையாற்றியவர்.

***அமரா பியசீலி ரத்னாயக்க***

1938 மார்ச்சில் பிறந்த அமரா பியசீலி இராஜாங்க அமைச்சராக கடமையாற்றியவர். தனது கணவர் கொல்லப்பட்டதோடு அரசியலுக்கு வந்தார். அப்போது இவரது வயது 38. 1977ம் ஆண்டு தேர்தலுக்கு அரசியலுக்கு வந்த இவர், 1988இல் குருநாகல் மாவட்ட அமைச்சராகவும் செயற்பட்டு வந்தார். இவர் அரசியலுக்கு வருமுன் பாடசாலை ஆசிரியையாக இருந்தவர். 1987 நவம்பர் 30ம் திகதியிலிருந்து பிரதிப்போக்குவரத்து அமைச்சராகவும் கடமையாற்றியிருந்தார்.

***ரூபா சிறியானி பந்துசேன***

திரு.மஹாசேன பெல்பொலவின் விலகலைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட சிறியானி, ஹேவாஹெட்ட தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டேனியல் அப்புஹாமியின் மகள். தலாதுஓய மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர் 20 வயதிலேயே அரசியலுக்கு வந்தவர். பிற்காலத்தில் ஐ.தே.கவின் பெண்கள் சம்மேளனத்தின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

***குணவதி திசாநாயக்க***

1952 யூலை 29ம் திகதி பிறந்த இவர், இவரது கணவரின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலுக்கு பிரவேசித்தார். மொனராகலை மஹாநாம மத்திய வித்தியாலயத்தில் கல்வி பயின்ற குணவதி இத்தேர்தலில் 26,193 வாக்குகளைப்பெற்றார். மொனராகலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களில் அதிக வாக்குகளை இவரே பெற்றிருந்தார்.

***சந்திரா கருணாரத்ன***

1942ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30ம் திகதி பிறந்த இவர், பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பாக தெரிவு செய்யப்பட்டவர். மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக இந்தப் பாராளுமன்றத்தில் பதவி வகித்தார். இவரது கணவர் எம்.கருணாரத்ன ஊவாபரணகம தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும், கூட்டுறவு பிரதி அமைச்சராகவும் இருந்தவர். திருமதி. சந்திரா சமூக சேவைகள், மகளிர் விவகாரம், போக்குவரத்து அமைச்சராக ஊவா மாகாணசபையில் பதவிவகித்திருந்ததுடன், மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினராகவும் இருந்தவர்.

***ஹேமா ரத்நாயக்க***

இவர் 1946 நவம்பர் 25ம் திகதி பிறந்தவர். இவரது கணவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த இவர், பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். இவரது கணவர் திரு.புஞ்சி பண்டா ரத்நாயக்க 1989 பொதுத்தேர்தலின் போது ஸ்ரீ.ல.சு.க. வேட்பாளர் ஆவார். ஹேமா ஒரு பயிற்றுவிக்கப்பட்ட கணித ஆசிரியை.

***சுஜாதா காந்திமதி தர்மவர்தன***

1951 செப்டெம்பர் 25ம் திகதி பிறந்த இவர், இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகாமையாளராக கடமையாற்றியவர். ஐ.தே.கவின் பெண்கள் சம்மேளனத்தின் செயலாளராக கடமையாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு. வட மத்திய மாகாணசபையின் உறுப்பினராகவும் இவர் இருந்துள்ளார்.

***சுமிதா பிரியங்கனி அபேவீர***

இவரது தகப்பனார் இந்திரபால அபேவீரவின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலுக்கு பிரவேசித்தார், செல்வி. சுமிதா பிரியங்கனி. இவர் 1963 ஆம் ஆண்டு பெப்ரவரி 24ம் திகதி பிறந்தவர். களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இவர் தெரிவு செய்யப்பட்ட போது இவரது வயது 26 மட்டுமே.

**— என்.சரவணன்**

**9வது பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள்**

| | | |
|---|---|---|
| ***ஐ.தே.க*** | | |
| 1. சுனேத்திரா ரணசிங்க | கொழும்பு | 37.165 |
| 2. சமந்தாதேவி கருணாரத்ன | கேகாலை | 50.779 |
| 3. ரேணுகா ஹேரத் | நுவரெலியா | 31.271 |
| 4. அமரா பியசீலி ரத்னாயக்க | குருநாகல் | 58.426 |
| 5. சுஜாதா காந்திமதி தர்மவர்தன | புத்தளம் | 26.830 |
| 6. ராஜமனோகரி புலேந்திரன் | வன்னி | 3.260 |
| 7. சந்திரா கருணாரத்ன | பதுளை | 20.026 |
| ***ஸ்ரீ.ல.சு.க.*** | | |
| 1. சிறிமாவோ பண்டாரநாயக்கா | கம்பஹா | 214.390 |
| 2. சுமித்திரா பிரியங்கனி அபேவீர | களுத்துறை | 51.494 |
| 3. ஹேமா ரத்நாயக்க | பதுளை | 28.635 |
| 4. குணவதி திசாநாயக்க | மொனராகலை | 26.193 |

**1988 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்**

| | | |
|---|---|---|
| ஆர்.பிரேமதாச (UNP) | 2,569,199 | 50.43% |
| சிறிமாபண்டாரநாயக்க (SLFP) | 2,289,860 | 44.95% |
| ஒஸி அபேகுணசேகர (SLMP) | 235,719 | 4.63% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 5.186.223 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 91.445 | |
| பெற்ற பெரும்பான்மை வாக்குகள் | 279.331 | |
| மொத்த வாக்காளர் தொகை | 9.375.742 | |

— வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விடுதலைக்கான அரங்கு: எழுகின்ற கேள்விகளும் எங்களது அபிப்பிராயங்களும்

விடுதலைக்கான அரங்குபற்றி அரிதேவா எழுதிய கட்டுரைக்கு இது பதில் அல்ல. இங்கே அரங்கு தொடர்பான சில மாற்றுக் கருத்துக்களை நாங்கள் முன்வைக்க முனைந்துள்ளோம். இக்கருத்துக்கள் மாற்றுப் பெறுமானம் உள்ளவைகளா? அல்லது எதிர் முரண்பட்டவைகளா என்பதும் கேள்விக்குள்ளால் தீர்மானிக்கப்பட வேண்டியவையே.

முதற்கண் நடைமுறையில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசியல் சக்திகளுக்கும் மக்களுக்கும் இடையில் புலனாகக் கூடிய அல்லது புலனாகாத இடைவெளி ஒன்று இருப்பதாகவே நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த அபிப்பிராயத்தில் இருந்தே விடுதலை அரங்கு தொடர்பான எங்களது அபிப்பிராயங்களையும் கீழ்நிரைப்படுத்துகிறோம்.

இன்று விடுதலை அரங்கின் பெயரால் உலகம் பூராவும் சுலோகங்களைப் பயன்படுத்தியோ அல்லது அவர்களது உணர்ச்சிகளைத் தூண்டியோ அல்லது மறைமுகமான அரசியல் அராஜகத்தைப் பயன்படுத்தியோ மக்களை அரசியல் சக்திகளுக்கு அடிபணிய வைக்கும் போக்கும், சரண்டும் போக்கும் நிகழ்ந்து வருகிறது.

எனவே இவ்வகையான அரங்குகள் விடுதலையின் பேரால் மக்களை மந்தைகளாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இது அரசியல் வியாபாரிகளின் களப்பிரதேசமாகவோ/ தளப்பிரதேசமாகவோ அமைந்து விடுகிறது. எனவே இவ்வாறான விடுதலை அரங்குகளை நாம் முற்றாக நிராகரிக்கிறோம்.

மக்களுடைய நலன்களும் அரசியல் சக்திகளுடைய நலன்களும் விடுதலை தொடர்பாக (தேசியம், பொருளாதாரம், பெண்விடுதலை) ஒருபோதும் ஒருமித்து இருப்பதில்லை. மாறாக மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை வைத்து தங்களுடைய அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் ஊடகங்களாக விடுதலை அரங்குகள் மாறிவிடுகின்றன.

சிதம்பரநாதனின் அரங்கைப் பற்றி அரிதேவா பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''சரி இப்பொழுது எல்லாரும் இந்த வெளியில் மிகத் தளர்வாக உடலைக் கிடத்தி கண்மூடிப் படுத்துக்கொள்ளுங்கள் உங்களை அதிகம் வேதனைப்படுத்தும் ஒன்றை யோசியுங்கள் '' என்கிறார் சிதம்பரநாதன்.

நாடகம் என்பது புறச்சூழலை மறக்கவைத்து மெஸ்மரிசம்/ ஹிப்னாடிசம் செய்து நாடக பங்காளர்களை கற்பனை உலகிற்குக் கொண்டு செல்வதல்ல. இப்படிக் கொண்டு போகும் போது ஒடுக்கிறவனும், ஒடுக்கப்படுகிறவனும் என்ற வேறுபாட்டை கனவுலோகத்தில் கண்டாலும், அதற்கெதிரான எதிர்ப்பை வெளிப்படுத்தக் கூடியவர்களாய் அந்நிலையில் நம்பினாலும் நிஜ உலகிற்கு திரும்பும் போது தாம் இனம் காணும், எதிர்ப்புக் காட்டும் சக்தியை இழந்துவிடுகிறார்கள். இதை இன்னொரு வகையில் விளக்குவதானா[illegible]றைய பெரும்பாலான சினிமாக்களில் கதாநாயகன்/நாயகி எட்டும் வெற்றிகள்/சந்தோஷங்களைப் பார்த்து மனத்திருப்தி அடைகிற ரசிகர்களைப்போல விடுதலை அரங்கில் பங்காளிகளும் கற்பனையுலகில் தமது எதிர்ப்புணர்வை காட்டுவதோடு மகிழ்ந்து போகின்றார்கள். யதார்த்தத்தில்

ஒன்றுமே நிகழ்வதில்லை அது மட்டுமல்ல, மீண்டும் புறச்சூழலுக்குள் அமிழ்ந்து விடுகிறார்கள். இதை இன்னொரு வகையில் விளக்குவதானால் இன்றைய பெரும்பாலான சினிமாக்களில் கதாநாயகன்/நாயகி எட்டும் வெற்றிகள்/சந்தோஷங்களைப் பார்த்து மனத்திருப்தி அடைகிற ரசிகர்களைப்போல விடுதலை அரங்கில் பங்காளிகளும் கற்பனையுலகில் தமது எதிர்ப்புணர்வை காட்டுவதோடு மகிழ்ந்து போகின்றார்கள். யதார்த்தத்தில் ஒன்றுமே நிகழ்வதில்லை அதாவது புறம் மாறாத போது அகத்தை மாற்றுவதன் மூலம் மட்டும் தடைகளை நீக்கமுடியாது. மேலும் அக மாற்றத்துடன் புறச்சூழலுக்குள் வரும் போது புறச்சூழலால் நிராகரிக்கப்படவோ ஒடுக்கப்படவோ நேரிடும். இது கஞ்சா போன்றது. இல்லையெனில் மெஸ்மரிசம் செய்வது போன்றதுதான். இதன் மூலம் மனநோயாளர்களை உருவாக்கும் அபத்தமும் உண்டு..

இது மக்களின் உண்மையான விடுதலையை வேண்டி செயற்படுபவர்களை மேலும் அந்தகாரத்தில் தள்ளி விடுகிறது.

மாறாக, மக்கள் அரங்கு என்பது மக்களிடம் இருந்து கற்றபாடங்களை செழுமையாக்குவதன் மூலம் வெளிக்கொணரப்படுகிறது. மேலும் மக்களுடைய பிரச்சினைகளினூடாக பிரச்சினைகளில் நின்று விடுபடாமல் மக்களிடம் இருந்து கற்றபாடங்களை ஆற்றுகையாக்கிக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சேர்க்கை அரங்க பங்காளிகள் ஆகும்போது அரங்க கரு அவர்களை வழிநடத்தும். மனத்தடைகள் உடையும் போது நடைபெறும் என்பது அபத்தமானது. மாறாக மானிடரீதியான கருத்திலே ஒற்றுமைப்பட்டு ஸ்தாபனப்படும்போது சேர்க்கை நடைபெறும். அதாவது அனைத்து தடைகளையும் உடைத்து கனவு லோகத்தில் சேர்க்கையை உண்டாக்குவதிலும் பார்க்க அடிப்படையில் நாம் மானிடர்கள் மானிட நேயமுள்ளவர்கள் என்ற ரீதியில் நோக்கும் போது சேர்க்கை நிரந்தரமாக அமையும். மேலும், அரங்க ஆற்றுகையின் போது அரங்கப்பங்காளிதான் எவ்வாறு இந்தப் பிரச்சினைகளில் மூழ்கினார்? தான் எவ்வாறு இந்நிலைக்கு மாற்றப்பட்டான்? தன்னுடைய நிலை என்ன? என்பவற்றை அறிந்து கொள்கிறான். மேற்படி நிலையை ஏற்படுத்திய கேள்விகள் ஊடாக மாற்றுக்கருத்துக்கள் முன்வைக்கப்படுகிறது. இந்த வினாக்களுக்கு விடைகளைத் தேடும்பொழுது அரங்கப்பங்காளி தேடலில் ஈடுபடுவதன் ஊடாக தன் காலில் நிற்கவும், சில தீர்வுகளை ஆராயவும், முற்படுகிறான். அதனூடாக புறத்தைப் பற்றி ஒரு பொதுவான அபிப்பிராயம் உருவாக்கப்படுகிறது. அல்லது ஏற்கெனவே உள்ள அபிப்பிராயங்கள் கேள்விக்குள்ளாகின்றது. அதனால் முரண்பட்டசக்திகளுக்கு புறம்பாக மக்களுக்கான மூன்றாவது கருத்தொன்று ஏற்பட காரணமாகிறது. அரசியல் சக்திகள் அக்கருத்தினை மறுக்கும் போது, அரங்கு அக்கருத்தை பேச முற்படுகிறது. எனவே மக்கள் அரங்கு விடுதலை அரங்கிலிருந்து முற்றுமுழுதாக வேறுபடுகிறது.

மக்கள் அரங்கில் வெளிப்பாடானது, அரங்க அளிக்கைக்கு குறியீடுகள் மூலம் தரவுகளை வெளிக்கொண்டு வருகிறது. இதனால் பங்காளி தன்னுடைய சமூகப்பிரச்சினைகளை தரவுகள் மூலம் தனக்குள் செய்தியாக்குவதால் இனம் காண்கிறான் இதன் மூலம் பிரச்சினை இன்னது என முன்னறிவிக்கப்படாத பங்காளி அரங்க அளிக்கை அந்நியமாகாமல் தன்னை இணைத்துக்கொள்கிறான் எம்மால் அளிக்கை செய்யப்பட்ட முகவரி தொலைந்த முகங்களில் ''கிணறு'' ஒரு வதைமுகாமாகவோ? சாதிப்பிரச்சினையின் பரிமாணமாகவோ இருக்கலாம். ''கொள்கரி'' யின் குறியீடு வர்க்கப் போராட்டமாகவோ, பழங்குடி மக்களின் பிரச்சினையாகவோ கருதப்படலாம். இதனால் கதாப்பிரசங்கிகளும், ஆசிரியர்களும், கலாநிதிகளும் மக்கள் அரங்கில் தொலைந்து போகிறார்கள். எழுத்து உருவமான பிரதியும் மக்கள் அரங்கில் நிராகரிக்கப்படுகிறது.

அரங்க அளிக்கை என்பது உணர்ச்சிகளின் செயற்பாடு அல்ல மாறாக உணர்வுகளின் செயற்பாடு. இதுநிரந்தரமானது. உணர்ச்சிப் போல் திடீர் மாற்றம் கொள்ளாது. உணர்ச்சி நிலையில் பங்காளியை வைத்திருந்தால் அவன் இலகுவாக விடுதலை அரங்கு என்ற பெயரால் அரசியல் சகதிக்குள் மூழ்கடிக்கப்படுகிறான்.

அரங்கஅளிக்கையில் பங்காளி உணர்ச்சி வசப்படுவானாகில் அவனை பூஜ்ய நிலைக்கு கொண்டுவந்தோ அல்லது போனால் உச்சநிலைக்கு முன்னரோ வைத்து மனோவியல் அரங்கிற்கான நிகழ்வுகளை நிகழ்த்தவேண்டும். இல்லையெனில் பூஜ்ய நிலையில் வைத்து ''வீரையா+சூரனில்'' இடம் பெற்றதுபோல தெரு உரையாடலாகவும் மனோவியல் அரங்கு இருக்கலாம். மனோவியல் அரங்கு பற்றி பிரிதொரு சந்தர்ப்பத்தில் ஆராயலாம்.

இங்கு உணர்ச்சிகள் கூட கேள்விக்கு உள்ளாவதால் அரசியல் சுரண்டல் தடைப்படும்.



விடுதலை அரங்கின் இன்னுமொரு செயற்பாடு பங்காளியில் மூளையை சலவை செய்வது தான் (Bruin Wash) உ+மாக செய்திகள் பங்காளனை சிந்திக்க வைக்காமல் பலாத்காரமாகத் திணிக்கப்படுவதால் அவனுடைய சிந்தனை ஓட்டம் தடைப்படுகிறது. பின்பு விவாதம் நடக்கும் போதும் மாற்றுக் கருத்துக்கு இடம் கொடுக்கப்படாமல் பங்காளியின் விடுதலைக்கு தாம் காட்டும் வழி தான் ஒரே வழி என நம்பவைக்கப்படுகிறது. அல்லது விடுதலை அரங்கை முன் வைப்பவர்கள் தாங்கள் தான் விடுதலை இலக்கியத்தின் ஸ்தாபகர்கள் என்றும் தங்களுடைய நாடகங்கள் தான் நாடக உலகில் பரிமாண ரீதியாகவோ, விடிவ ரீதியாகவோ திருப்பு முனையாக ஏற்பட்டது என்றும் தாங்கள்தான் அரங்கப் பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் என்றும் மற்றவருடைய பங்களிப்பை புறங்கையால் தட்டிக்கழித்து தங்கள் தான் தோன்றித் தனமான அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்கிறார்கள். இதில் வேதனைக்குரிய விடயம் என்னவெனில், மற்றவர்களுடைய பங்களிப்பையும் உரிமை கோரிக் கொள்கிறார்கள். இதனால் அரங்கத்தில் சகல வல்லமையும் பொருந்திய அதிகாரியாக அதாவது நெறியாளர், கதாசிரியர், இணைப்பாளர், தயாரிப்பாளர், முன்னணி நடிகர் என்று தங்களது அதிகாரத்தை வாழ்நாள் பூராவும் தக்கவைக்கிறார்கள். இதற்காக சகல தொடர்புசாதனங்களையும் ஏன்? மாற்றுப் பத்திரிகைகளையும் கூட பாவித்துக் கொள்ள இவர்கள் பின் தங்கியதில்லை. மாறாக இவைகள் எல்லாம் மக்கள் அரங்கில் கேள்விக்குள்ளால் தீர்மானிக்கப்பட வேண்டும். மக்களின் அரங்கில் நெறியாளர் கதாசிரியர் போன்றோரின் தலைமைத் தன்மை தகர்க்கப்பட்டு அரங்கப்பங்காளிகள் எல்லோரினதும் அந்தஸ்து சமனாக்கப்படும்.

மக்கள் அரங்கில் அரங்கக் கோட்பாடுகள் கேள்விக்குள்ளாக்கப்படும் அரங்கக் கோட்பாடுகள் தடைகளாக மாறுமாயின் (Theory of Rebitance) உதாரணமாக நூறு தடைகள் இருக்குமாயின் அது பூஜ்ய நிலைக்கு கொண்டுவரப்படலாம். உறுதியான பின்புலம் இல்லாத தடைகள் உடனடியாக உடைக்கப்படலாம். அரங்க (அனுபவங்களின் ஊடாக புறநிலைகளைப்பொறுத்து ஏனைய தடைகளும் உடைக்கப்படலாம். (உ-மாக மேடைச்சமநிலை, மேடையில் நகர்வு) தரவுகளை அளிப்பது தான் நிகழ்வு என்றால்? கட்டுக்கோப்பு அனாவசியமானது. இவைகள் அனைத்தும் பரிசோதனை முயற்சிகள் தான். பரிசோதனை அரங்குகளைப் புரிந்து கொள்ளக்கூடிய திறனும் கலாசாரமும் இப்போதைக்கு இல்லை என அரிதேவா கூறுவது போல் கருதினால் மக்கள் முட்டாள்கள் என்ற கருத்து முதன்மை பெறுகிறது. இதனால் எந்தப் பரிசோதனை முயற்சிகளும் நிகழ்த்தப்பட முடியாமல் போய்விடும். மாறாக மக்கள் அதிபுத்திசாலிகள் என்ற கருதுகோளில் இருந்து மக்கள் புரிந்துக் கொள்ளக்கூடியவர்கள், தங்கள் நிலையை உணரக் கூடியவர்கள் என்று கருதி பரிசோதனை நிகழ்வுகளை நிகழ்த்துவதால் அரசியல் வாதிகளாலும், மூன்றாம்தர இலக்கிய வாதிகளாலும் தடைப்பட்ட சிந்தனை ஓட்டம், துளிர்விடும். அதனால் மட்டுமே பங்காளிகளை தேட வைக்கலாம். மேலும் அவர்களுடைய பார்வை விரிவுபடும். பங்காளி சிரிப்பதை அந்நியப்பட்டுசிரிக்கிறான் என்று கருதாமல் அரங்க அளிக்கையில் ஒன்றிப்பதற்கான வெளிப்பாடாகக் கருதினால், தக்க உத்திகளை பாவிப்பதன் மூலம் அதனையும் ஒரு பங்களிப்பாக மாற்றலாம். இந்த வகையான நாடகங்களை பார்ப்பதும் ஒரு பயிற்சி தான். அரங்கில் மொழி பாவிக்கப்படாததால் பங்காளிகள் தங்கள் அனுபவங்களின் ஊடாக வெவ்வேறு விதமாக அளிக்கையை புரிந்து கொண்டு குறிப்பிட்ட திசையை நோக்கி திசைப்படுத்தப்படலாமா என்பதை ''களு ஐய்யா'', 'கொள்கரி' போன்ற அளிக்கைகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இது மக்களுக்கு விளங்காது என்பதனையும் கேள்விக்குள்ளாக்கியது.

விடுதலை அரங்கில் முன்கூட்டியே அரங்கு திட்டமிடப்பட வேண்டியது அல்ல என்கின்றனர். மாறாக மக்களிடம் கற்ற பாடங்களை செழுமைப்படுத்த வேண்டிய ஆற்றலும் அதனை வெளிக்கொணர வேண்டிய நேரமும் உருவமும் தொடர்பான ஆராய்ச்சி தேவையில்லை எனில் (Instant theatre) அரங்குகளை நிகழ்த்துகையில் உருவம் தொடர்பாகவோ கருதொடர்பாகவோ Stero Type ஆன அளிக்கைகளை வெளிக்கொணர வேண்டிவரும். எங்கள் அனுபவத்தில் 'வெய்யிலில் நனைந்திடவும்', ''ஒன, ஓவன்னாவும்'' வும் இத்தகைய அனுபவங்களை தந்தன. மாறாக பொதுஜன அபிப்பிராயம் குறுகிய கால இடைவெளிக்குள் கேள்விக்குள்ளாக்கப்படுவதால் (Stero Type)ஆன அளிக்கைகளை தவிர்க்கமுடியாது எனவும், நியாயப்படுத்தினோம். இதுவும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியது. மக்களுக்கான அரங்கு அரிதேவா கூறியது போல் திறந்த வெளி அரங்காக இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை. நாங்கள் படச்சட்ட அரங்கில் பார்வையாளர் என்ற கோட்பாட்டை நிராகரிக்கிறோம். அரங்கம் முழுவதும் பங்காளிகளைக் கொண்டதாகவே கருதுகிறோம். ஆனாலும் கரு தொடர்பான அனுபவம் கொண்ட, அனுபவம் குறைந்த பங்காளிகளாக வகைப்படுத்துகிறோம். அனுபவம் குறைந்த பங்காளிக்குள் அரங்க அளிக்கையை உத்திகளாய் தொடர்ந்தும் நிகழ்த்துவதன் மூலம் படச்சட்ட மேடைக்கான தடைகளை குறைக்கின்றோம். இதன் மூலம் திறந்த வெளி அரங்கிற்கான பரிமாணங்களை படச்சட்ட அரங்கிற்குள்ளும் மக்கள் அரங்கினூடாக பரிசோதிக்கிறோம். அரிதேவா கூறுவது போல மக்கள் இலகுவாக பங்காளி ஆக மாட்டார்கள். ''ஓ..ஓ..' என்ற அளிக்கையில் கரப்பான் பூச்சியை அடிக்க அனுபவம்கூடிய பங்காளிகள், அனுபவம் குறைந்த பங்காளியை அழைத்த முயற்சி எதிர்பார்த்த முடிவுகளை தரவில்லை. தேடலுக்கான முயற்சிக்காக கொடுக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் விடைகளின்றி உறங்கின. பத்திரிகைகளும் வசதியாக மறந்துவிட்டன.

இப்போது எம்முன் தோன்றும் வினாவானது? அரசியல் வியாபாரிகளுக்கும் மக்களுக்குமிடையிலுள்ள இடைவெளியை 'விடுதலை அரங்கு' கோசத்தால் நிரப்புவதா? அல்லது மக்கள் அரங்கின் ஊடாக தங்கள் அரசியல் பொருளாதார மானிட விழுமியங்களை தாங்களே கேள்வி எழுப்புவதினூடாக தேடுவதா?

விவாதற்திற்கான அரங்கல்ல; இது தேடலுக்கான அரங்கு. (theatre of search, discovery and research- தரவுகளை விஞ்ஞான ரீதியான ஆய்வுக்குட்படுத்துதல்)

இது தொடர்பான எதிர்வினைக் கருத்துக்களை அரங்க ஆர்வலர்கள் முன்வைக்குமுபோது மக்கள் அரங்கும் கேள்விக்குள்ளாகும் அவசியத்தையும் விரிவாக ஆராய வேண்டிய அவசியத்தையும் உணர்த்தும். இதுதொடர்பான விவாதங்களை எதிர்பார்க்கிறோம்.

விஜித், ஜீவா, பாரதி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# உறவு

# இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்

-செந்தில்வேல்




ஒரு வரலாற்று நூல் எத்தகைய வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கி வெளிவருகின்ற போதிலும், அந்நூலுக்கான அர்த்தப்பாடு என்பது அது வெளிவருகின்ற காலகட்டத்திலும், அக்காலகட்டத்தில் நிலவுகின்ற அரசியல், சமூக பொருளாதார, நெருக்கடிகளுடன் நூலின் வரலாற்று நிகழ்வுகளும், பதிவுகளும் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளன என்பதையும் பொறுத்தே கவனத்தைப் பெறுகின்றது.

இந்த வகையில் இன்றைய இலங்கையிலே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமானது அரசியல், சமூக, பொருளாதார கட்டுமானங்கள் அனைத்தையும் தீர்மானிக்கின்ற ஒன்றாக அமைகிறது. இது சகலவிதமான சிந்தனைப் போக்குகளையும் பாதிப்பதாகவே உள்ளது. இதற்கு இடதுசாரி அல்லது மார்க்சிய சிந்தனைகளும் விதி விலக்காக இருக்க முடியாது.

எனவே இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகால வரலாற்று நிகழ்வுகள், ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன்பே கருக்கொண்டு படிப்படியாக வளர்ந்து, இன்றைய தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டமாக பரிணமித்துள்ள வரலாற்று நிகழ்வுகளுடன் எவ்வாறு தொடர்புபட்டு வந்துள்ளன என்பதை மார்க்சிய வழிநின்று ஆய்வு செய்வதாக அமைவதே தற்போது ஒரு இடதுசாரி இயக்க வரலாற்று நூலாகக் கொள்ளப்படும். அல்லாதபோது அது ''வாசிப்பின் அரசியல்'' பேசப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில், வாசகர்களின் கவனத்தைப் பெறமுடியாது போவது தவிர்க்க முடியாதது.

இம் முன்னுரையுடன் இந்நூலை நோக்குவோம். பொதுவாக நூலுக்கும் குறிப்பாக வரலாற்று நூலுக்கும் இருக்கவேண்டியது உசாத்துணை நூற் பட்டியலும், சான்றாதாரங்களுமாகும். வெறும் நேரடி அனுபவங்களின் தொகுப்பு ஒரு வரலாற்று நூலாகிவிட முடியாது. அந்த வகையில் நூலாசிரியர் செந்திவேல் தன்னுடைய நேரடி அனுபவங்களினதும், இதுவரை வெளிவந்த இடதுசாரி இயக்க நூல்கள், பத்திரிகைகளினதும், துணையுடன் இந்நூலை எழுதத் துணிந்ததாகக் கூறுவது, வரலாற்று நூலாகக் கருதி ஆர்வமுடன் கற்க முயலும் எவருக்கும் ஏமாற்றத்தைத் தருவதாகும்.

''இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்'' என்ற விரிந்த ஒரு தலைப்புடன் இந்நூலை வாசித்து முடித்ததும் இவை மட்டும் தான் இலங்கை இடதுசாரி இயக்க ஐம்பதாண்டுகால நிகழ்வுகளா? என வினா எழுப்புவதும் ஆச்சரியப்படுவதும் இயல்பானதே. தங்களுக்குத் தெரிந்தவற்றையும், தங்களுக்குச் சார்பானவற்றையும் எழுதி ஏனைய முக்கியமான நிகழ்வுகளை வசதியாக மறைத்து விடுவது இடதுசாரிகள் எழுதும் வரலாறாக இருக்க முடியாது.

ஆயுதந் தரிக்காத, மக்களின் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தாத போலி இடதுசாரிக் கட்சிகளையும் அவற்றின் திரிபுவாத அரசியலையும் இடதுசாரி இயக்க வரலாற்றில் சேர்த்துக் கொள்ளவும், ஏன் ஜே.வி.பி. என்ற ''சோசலிசம்'', ''மக்கள் விடுதலை'' போன்ற போலிக் கோஷங்களுடன் அரசியல் அரங்கிற்கு வந்த இயக்கத்தையும் இடதுசாரி இயக்கமாக கருத முடியுமானால், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த, வர்க்கப் பார்வையும் மார்க்சியக் கொள்கைகளையும் முன்னிறுத்திய ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., என்.எல்.எப்.ரி. பேரவை, புளொட் போன்ற இயக்கங்களையும் அவற்றின் அரசியல் பங்களிப்புகளையும் பற்றி ஏன் குறிப்பிட முடியவில்லை. இவை சரியான மார்க்சிய அரசியலை முன்னெடுத்தனவா இல்லையா? என்பது இங்கு பிரச்சினையல்ல. அவை பற்றிய ஆசிரியரின் விமர்சன ரீதியான குறிப்புக்கள் கூட இவ்வரலாற்று நூலில் ஏன் சேர்க்கப்படவில்லை என்பதே கேள்வி?

தொழிற்சங்கப் போராட்டங்களையும், தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களையும் வர்க்கக் கண்ணோட்டத்தில் எழுதமுடியுமானால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி ஏன் வர்க்க நோக்கில் எதுவுமே எழுதாமல் விடப்பட்டுள்ளது? காரணம் மைய நீரோட்டத்திலிருந்து வந்த மரபு இடது சாரிகள் இப்போராட்டம் பற்றி சிந்திப்பதற்கு வலிந்த மறுத்துவந்தமையாலா?

இறுதியாக நூலாசிரியருக்கு ஒரு குறிப்பு; இந்நூலின் அடுத்த பதிப்பிற்கு (?) ''ஒரு இடதுசாரியின் (?) அனுபவக் குறிப்புகள்'' எனும் தலைப்பிட்டு வெளியிடுவதே பொருத்தமாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்! தவிர எந்தவொரு சிந்தனையும் நூலுருவில் வெளிவருவதானது பலரது சிந்தனைகளையும் ஆழப்படுத்துவதற்கு தூண்டுகோலாக அமைவதால் இவ்வாறான நூல்கின் வரவை வரவேற்க வேண்டியதும் பாராட்ட வேண்டியதும் எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அவசியமானது இவற்றை நோக்கிக் கேள்விகளை எழுப்புவதும்!

**நந்தகோபன்.**




## தேம்ஸ் நதிக்கரையில்

– ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

ஏலவே **ஒரு கோடை விடுமுறை, தில்லையாற்றங்கரையில், உலகமெல்லாம் வியாபாரிகள்** ஆகிய நாவல்களின் தொடர்ச்சியில் வெளிவந்த ஒரு நாவல்தான் **தேம்ஸ் நதிக்கரையில்.** இந்நாவல் எழுபதுகளில் இலங்கையிலிருந்து சென்று உழைத்து உயர் கல்வி கற்க முயலும் தமிழ் இளைஞர்களது லண்டன் மாநகர வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற ஒன்று.

செந்தில் யாழ்ப்பாணக் கிராமத்தில் பிறந்தவன். லண்டனில் வேலைப்பார்த்துப் படிக்கிறான். படித்து வேலைபார்க்கிறான். லோறா வெளிநாடொன்றிலிருந்து வந்து வேலைப் பார்த்து படிக்கிற வெள்ளைக்காரப்பெண்; அழகி. செந்திலுக்கும் லோறாவுக்குமிடையே காதல். லோறா கருத்தரிக்கிறாள். செந்தில் சந்தேகப்படுகிறான். லோறாவைக் கைவிட்டு விட்டு, யாழ்ப்பாணம் வந்து தனக்கென்று நிச்சயிக்கப்பட்ட பெண்ணை திருமணம் செய்கிறான்.

வேறு பல உபபாத்திரங்கள் வருகின்றன. கதை மிகச் சாதாரணமானதுதான். ஆனால் பல முரண்பாடுகளை இந்நாவல் அழகாகத் தொட்டுச் செல்கிறது. எழுபதுகளில் தமிழர் அரசியல் நிலவரம், உலகெங்கும் ஒடுக்கப்படுபவர்கள், ஆணாதிக்கம் போன்ற பல விடயங்கள் கோடிட்டுக்காட்டப்படுகின்றன. பிரச்சார வாடை சற்றும் வீசாத நாவல்.

நடையும் அழகானது. ''லோறா விளையாட்டுக்குச் சொன்னேன்'' என்றான் அவள் முதுகைத்தடவி விட்டபடி. அவள் உடம்பு மென்மையானது. ஏழாலையில் அவன் அடிப்பதற்குள் தங்கைகளைத் தொட்டது தவிர வேறு பெண்கள் யாரையும் தொட்டதில்லை.) பல இடங்களில் அழகு கொஞ்சி விளையாடுகிற நடை. ஆனால் சில இடங்களில் நடை இடர்ப்படச் செய்கிறது. ஆங்கில இலக்கணப்படியான நடை.

''லோறாவுக்கு விளங்கியது அவள் என்ன சொல்கிறாள் என்று''


''விம்பிள்டன் வீதியெல்லாம் வெறிச்சென்று கிடந்தது இலையுதிர்ந்த மரங்களால்''

''செந்திலுக்கு இப்போது விளங்கியது மயில் வாகனத்தார் என்ன கதைக்கிறார் என்று''

பயனிலை, எழுவாய் என மாறி அமர்ந்திருக்கிறநடை அடிக்கடி வந்து இடர்ப்படுத்துகிறது.

செந்திலின் பாத்திரப்படைப்பும் ஊனமுற்றதுபோல தெரிகிறது. செந்தில் இந்நாவலில் சரியாக வார்க்கப்படவில்லை. எப்படியாயினும், நல்ல நாவல் தேம்ஸ் நதிக்ரையில்.

***மாதவன்***




திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம்

அனாமிகா - வெளியீட்டகம், திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம் என்ற நூலை, தனது இரண்டாவது வெளியீடாக வெளியிட்டுள்ளது.

திருகோணமலை மரபு வழி தமிழ் நாடக அரங்கு, என்ற கட்டுரையை பாலசுகுமார் எழுதியுள்ளார். கல்வெட்டாதாரங்கள் திருகோணமலையின் வரலாற்றுப் பழமையை ஆதாரங்களுடன் தருகின்றன. திரியாய், கந்தளாய்பிரதேசத்திலும், சேனையூர் பிரதேசத்திலும் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் கிறிஸ்து சகாப்தத்துடன் திருகோணமலை கொண்ட தொடர்பை வெளிப்படுத்துகிறது. இன்னமும் ஆராயப்படாத வாசிக்கப்படாத பல கல்வெட்டுக்கள் ஈச்சலப்பற்றை, சேனையூர் பிரதேசங்களில் காணப்படுகின்றன என்றும் தெரியப்படுத்துகிறார்.

மேற்குறிப்பிட்ட கட்டுரையில் நாடகத்தோற்றம், புராதன மனிதனும் நாடகமும், அரங்கம், அரங்கும் சமயச் சடங்கும், அரங்கப்பிரிவுகள், மரபுவழி அரங்க வகைகள், கிராமிய அரங்கு ஆகியவைபற்றி சிறு ஆய்வுக் குறிப்புக்கள் உள்ளன.


திருமலை நவம், திருகோணமலையின் நாடக முன்னோடிகள் என்ற கட்டுரையை எழுதியுள்ளார். இதில் திருகோணமலையில் நாடக வளர்ச்சியினை ஆராய்வதற்கு அதனை மூன்று கால கட்டங்களாகப் பிரித்து நோக்குவது சுலபமாகவிருக்கும் என்பதால் 1900ம் ஆண்டு தொடக்கம் 1955ம் ஆண்டு வரை ஒரு கால கட்டமாகவும், 1956ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டுவரை இரண்டாங்கால கட்டமாகவும், 1971ம் ஆண்டுக்குப் பின்னயதை மூன்றாம் காலகட்டமாகவும் பிரிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் முதலாங்கால கட்டத்தில் பங்களிப்பு செய்தவர்கள் பற்றி ஆராய்ந்துள்ளார் திருமலை நவம்.

மூன்றாவது கட்டுரையை காசிநாதர் சிவபாலன் திருகோணமலைப் பிரதேச அரங்கப் பாரம்பரியம் தொடர்பாக எழுதியுள்ளார். அத்துடன் 1920 - 1991 வரையிலான நாடக ஆசிரியர், நாடக மன்றம், நாடகத்தின் பெயர்/ நடிகர் ஆகியோரின் விபரங்களையும் அவர் தருகிறார்.

திருகோணமலை நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமும் என்ற கட்டுரையை பா. சுகுமார் எழுதியுள்ளார். இதில் சடங்குகள், சிறு தெய்வ வழிபாடுகள், நாட்டார் பாடல்கள், கூத்து ஆகிய தொடர்பாக சிறு குறிப்புக்கள் உள்ளடக்கப்படுள்ளன.

-பாரதி




தமிழில் நாடகம்

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை விரிவுரையாளர் பாலசுகுமார் எழுதிய தமிழில் நாடகம் என்ற நான்கு கட்டுரைகளின் தொகுப்பு சிறு நூலாக வெளிவந்திருக்கிறது. இது அனாமிகாவின் மூன்றாவது வெளியீடு. தமிழில் நாடகம் - ஒரு ஆய்வுப் பார்வை, வடமோடி-தென்மோடி கூத்து வடிவங்கள் - ஒரு விபரண நோக்கு, பறைமேளக்கூத்து - மட்டக்களப்பு கூத்து வகை ஒன்று பற்றிய அறிமுகம், சிங்கள நாடக அரங்கு - ஒரு அறிமுகம் ஆகியனவே அந்நான்கு கட்டுரைகளுமாகும்.

சிங்கள நாடக அரங்கு குறித்த கட்டுரை தவிர்ந்த மூன்று கட்டுரைகளிலும் உள்ள விடயங்களை ஏற்கெனவே வெளிவந்த கலாநிதி மௌனகுருவின் ஈழத்து தமிழ் நாடக அரங்க வளர்ச்சி என்ற நூலில் வாசகர்கள் வாசித்திருப்பார்கள். சிங்கள நாடக அரங்கு குறித்த கட்டுரை கூட கடந்த இரு தசாப்தங்களில் சிங்கள நாடகங்கள் குறித்த போக்கைத் தருவதில் தவறவிட்டுள்ளது. இதுதவிர கட்டுரைத் தொகுப்பின் தலைப்பும் குறித்த கட்டுரையும் **தமிழில் நாடகம்** என்றிருக்க, அக்கட்டுரையிலோ **தமிழ் நாடகம்** என்றே ஆசிரியர் விளித்துச் செல்கிறார். தமிழ் நாடகமும், தமிழில் நாடகமும் ஒன்றுதானா என்பதை நாடகவியலாளர்கள் ஐயந்திரிபு அகற்ற வேண்டும்.

**– அபேதன்**

# மூணாம் நம்பர்

எஸ்.எல்.எம்.ஹனீபா

1897 - ஜூலை -24 அன்று கிண்ணியாவில், முன்னாள் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம். எம். மஃரூப் அவர்களின் தாய்வீட்டின் மொட்டை மாடியில் தலைவர் எம். எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் நடுநாயகமாக வீற்றிருக்கிறார். அவரைச் சுற்றிலும் நான் ஹிஸ்புல்லாஹ், மில்க் போர்ட் ஹனிபா, சீனி வாப்பா காஸிம் மௌலவி, இறமுளார், மன்சூர் பி.எ. ரூபி முகிதீன், கவிஞர் காத்தான்குடி நஜீர்,முகைதீன் அப்துல் காதர் என்று அரசியல் சதஸ் கூடிற்று...

அஷ்ரஃப் அவர்கள் அரசியல் பாடம் நடாத்திக்கொண்டிருந்தார். திருகோணமலைக்குச்சென்ற முதல் முஸ்லிம் காங்கிரஸ் குழு இதுவே. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அஷ்ரஃப் அவர்களின் இரத்த பந்தங்களோ அல்லது இதயக்கனிகளில் ஒருவரோ அன்று அஷ்ரஃப் அவர்களுடன் சும்மாவாவது வரவில்லை.

தலைவர் அஷ்ரஃப் அவர்கள் இந்திய அரசியல் வானில் இரும்பு மனிதர் என வர்ணிக்கப்பட்ட வாஜ்பாய் பட்டேல் பற்றிய சுவாரஸ்யமான கதையொன்றைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

பட்டேல் ர்கள் எப்போதும் அமெரிக்காவைத்திட்டித்தீர்ப்பதில் அலாதிப்பிரியம் கொண்டவர். அமெரிக்கா இந்திய நட்புறவுக்குப் பெரும் இடைஞ்சலாக நிற்பவர் என்பதைப் புரிந்துகொண்ட அமெரிக்கா - பட்டேல் அவர்களை அமெரிக்காவின் அரசு விருந்தினராக அழைத்திற்று.

பட்டேல் அவர்களுக்கும் தட்டிக்கழிக்க முடியாதநிலை. அமெரிக்காவின் பெரும் பெரும் ஆடம்பர ஹொட்டல்களில் உபசரிப்பு. அற்புத அழகிகள் பட்டேலுக்கு கைடுகளாக... பட்டேல் பாடு பெரும் குஷி தான்!.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய கொஞ்ச நாட்களுக்கெல்லாம், மீண்டும் அமெரிக்காவைத் திட்டத் தொடங்கினார் பட்டேல். ஒரு நாள் பட்டேலின் பெயருக்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சிலிருந்து அந்தரங்க முத்திரையோடு ஒரு போட்டோ அல்பம் கடித உருவில் வந்திற்று.

அமெரிக்காவின் அத்தனை உபசரிப்புகளும் அங்கு வண்ணப்படங்களாக - கைடுகளும் கண்சிமிட்டினார்களோ? அன்றிலிருந்து பட்டேல் அமெரிக்காவைப்பற்றிக் 'கப்சிப்'!

கதைமுடிந்ததும் அஷ்ரஃப் அவர்கள் மாற்றுக் கட்சிக்காரர்களை வளைத்துப்பிடிக்க வேண்டுமானால் ஆட்சியாளர்கள் மூன்று காரியங்களை மேற்கொள்வார்கள்.

ஒன்று; அதிகளவு பணம் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்குவது

இரண்டு; பணத்திற்கு மசியாதவர்களுக்கு பணத்துடன் கூடிய மந்திரிப் பதவியையும் வழங்கித் தக்கவைத்துக்கொள்வது.

இவை இரண்டிற்கும் அடிபணியாதவர்களுக்கு அரசியலில் இருக்கவே இருக்கிறது மூணாம் நம்பர்!

தலைவர் அவர்கள் மீண்டும் கதையை அந்த இடத்தில் 'பிரேக் போட்டு விட்டு எங்களனைவரையும் ஒரு நோட்டம் விட்டார்.

பிறகு அஷ்ரஃப் அவர்கள் ''அன்று இரும்பு மனிதன் என வர்ணிக்கப் பட்டவரை அழகி ஒருத்திதான் அரசியலில் வீழ்த்தினாள். உங்களில் யாராவது முஸ்லிம் காங்கிரஸை விட்டு மாற்றுக் கட்சிக்குப் போகவிரும்பினால் நீங்கள் எதற்காகப் போவீர்கள்? என்றார்.

அரசியல் சதஸ் ஆட்டம் கண்டது ஒவ்வொருத்தரும் அடுத்தவர் முகங்களையே பார்க்கத்தொடங்கினர்.

''நாங்கள் அனைவரும் சமூகத்திற்காக உயிர் கொடுக்க முன் வந்தவர்கள்?! எங்களைப்பார்த்து தலைவர் இப்படிக் கேட்கிறாரே? என்பது போல் ஒவ்வொருத்தரினதும் புருவங்கள் மேலெழுந்தது.

மௌனம் நீண்டது. உடனே நான் துரும்பைத் தூக்கிப் போட்டேன். ''பணம், பதவியைவிடவும் அற்புதமான மூணாம் நம்பர் ஒன்று கிட்டுமானால் உங்களை விட்டும் நான் போய்விடுவேன்'' என்றேன். சதஸ் 'கலகல'த்திற்று.

பின்னாளில் அரசியல் செய்வதற்கு இந்த மூன்று இலக்கங்களுமே பொருந்தி வரவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள நான் நீண்ட நாட்கள் காத்திருக்கவில்லை.


வாழ்க! மூணாம் நம்பர்!!

***முஸ்லிம் அரசியலில் எனது அனுபவங்கள். என எஸ். எல்.எம். ஹனீபா எழுதும் நூலிருந்து ஒரு பகுதி.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## அஷ்ரஃப்புக்கு ஒரு கடிதம்!

அஷ்ரஃப் அவர்களே கல்குடாத் தொகுதி முஸ்லிம்களின் நிலையை தாங்கள் நன்கு புரிந்துள்ளீர்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை ஏறாவூர், காத்தான்குடி முஸ்லிம்கள் தங்கள் பகுதிக்கு ஓர் பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுவந்துள்ளனர். இன்றும் கூட இவ்விரு பகுதிகளுக்கும் இரு உறுப்பினர்கள் உள்ளனர். எமது பகுதியின் பிரச்சினை, அபிவிருத்தி என்பனவற்றிற்கு தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தபோதிலும் அது செயற்படாமலேயே உள்ளது.கட்சிப் பிரதிநிதிகள் எமது பகுதியை சரிவரக் கவனிப்பதில்லை, தொகுதி அமைப்பாளரோ எதுவும் செய்ய முடியாத நிலையிலுள்ளார்.

இதுவரை பாராளுமன்ற முஸ்லிம் பிரதிநிதியைப் பெறாத எமது தொகுதியை நன்கு கவனத்திற் கொண்டும், எண்ணிலடங்காப் பிரச்சினைகளையும், அத்தியாவசியதேவைகளையும், அபிவிருத்திகளையும் வேண்டி நிற்கும் எமது தொகுதிக்கு முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் உறுப்பினர் அஸித பெரேரா (எம்.பி) அவர்களை 1996ம் ஆண்டிற்கு மாத்திரம் அவரது ஒதுக்கீட்டை இப்பகுதியில் செலவு செய்யவும், எமது பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லவும் நியமித்து கட்சியினதும், இத்தொகுதி முஸ்லிம்களினதும் கௌரவத்தைக் கட்டிக்காக்க உரிய நடவடிக்கை எடுப்பது தங்களது கடமையாகும் என்பதனை இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும் என நாம் கருதுகின்றோம்.

**மௌலவி ஹலீம்**
**வாழைச்சேனை.**

## மனிதாபிமானத்திலும் பாரபட்சமா?

முஸ்லிம் அனுதாபவாதிகளுக்கு ஒன்று கூறவிரும்புகிறேன். (வ.ஐ.ச.ஜெயபாலன், பஞ்சமன் உட்பட) நீங்கள் அனுதாபப்பட்டு எழுதுவதுபோல் இதய சுத்தியுடன் எந்த முஸ்லிமும் தமிழர்களுக்குச்சார்பாக (நியாயங்களை) இந்த யுத்தகால சூழ்நிலையில் எழுதுகின்றார்களா? மாறாக யாழ்ப்பாணத்திற்கு உணவு அனுப்பி விட்டோம் என்று பொய் கூடச்சொல்லுகிறார்கள். (உணவு அனுப்ப முதல் அனுப்பியதாகக் கூறினர்) இப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் அனுதாபப்படுவதை, உங்கள் மனிதாபிமானத்தை பாராட்டுகிறேன். ஆனால் நீங்கள் முஸ்லிம்களின் விடயத்தைச் சுட்டிக்காட்டியது போல் ஏன்? பின் வருவனவற்றை உங்களால் எழுதமுடியாமல் போனது. கவிதை பாடமுடியாமல் போன்து! அவையாவன:-

1. முஸ்லிம்களினால் அழிக்கப்பட்ட மட்டு/ காரைதீவு கண்ணகியம்மன் கோவிலைப்பற்றியும் அங்கு வாழ்ந்த மக்கள் (டொக்டர், எஞ்ஜினியர்,பட்டதாரிகள் உள்வாங்கலாக) சுற்றிவளைப்பில் 'அட்ரஸ்' இல்லாமல் போனதை.

2.மட்டு/ புதுக்குடியிருப்பு கிராமத்தில் அப்பாவித் தமிழ்மக்களை வெட்டியும் சுட்டும் முஸ்லிகள் நடாத்திய அக்கிரமத்தை.

3. 1987ம் ஆண்டு காத்தான் குடியில் வைத்து இ.போ.ச. பஸ் இ.போ.ச. ஊழியர்களுடன் சுட்டும், வெட்டியும் நடத்தப்பட்ட கோரச்சம்பவத்தை.

4. காத்தான்குடிக்கு அண்மையிலுள்ள மஞ்சந்தொடுவாய்க் கிராமம், முஸ்லிம்களினால் (இராணுவத்தின் உதவியுடன்) வீடுகள், சொத்துக்கள், உயிர்கள் அழிக்கப்பட்டதை. ( இன்றும் கூட இதன் எச்சசொச்சங்களைப் பார்க்கலாம்.)

5. 1990ம் ஆண்டு பாண்டிருப்பு, கல்முனை, நற்பிட்டிமுனை, வீரமுனை போன்ற இடங்களில் நடந்த சம்பவங்களுக்கு யார் சூத்திரதாரி? அங்கு எத்தனை ஆயிரம் இளைஞர்கள் மரணித்தனர்?

6. ஏறாவூர் தமிழ்ப் பிரிவு, [illegible]லம்பாவெளி போன்ற இடங்களில் தமிழ[illegible] வீடுகளின் நிலையென்ன? அவர்களின் கிணறுகளில் மிதந்த சடலங்கள் யாருடையது? இதற்கு யார் காரணம்?

அவர்களே, காரைதீவில் முஸ்லிம் மாணவர்களுக்கு ரியூசன் கொடுத்த அந்த ஆசிரியரின் வீட்டை எரித்தவர்கள் யார் என்று தெரியுமா? அவரிடம் ரியூசன் பயின்ற முஸ்லிம் மாணவர்களே. மறந்து விடாதீர்கள். யாருக்காகவும் யாரும் வக்காலத்து வாங்காதீர்கள். இங்கு யாரும் சுவாமித்தம்பியுமில்லை. இங்கு யாரும் நல்லவர்களுமில்லை.

***ஏ.ரீ.தமிழ்வாணன்***
***மட்டக்களப்பு.***

## என்று தணியும் இந்த கொந்தராத்து தாகம்?

கல்முனை பிரதேச சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆட்சியில் உள்ளது. இங்கு ஏராளமான ஊழல்கள் நடைபெற்றுவருகின்றன. முக்கியமாக கொந்தராத்து வேலைகளில் கண்மூடித்தனமான ஊழல்கள் நடைபெறுகின்றன. எடுத்துக்காட்டாக இதோ சில:-

அ) 1. 1994ம் ஆண்டு இச்சபையால் செய்யப்பட்ட 44 அபிவிருத்தி வேலைகளின் போது இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் 799 விதிகளின்படி அல்லாமல் அதற்கு மேற்பட்ட தொகையுடைய வேலைகளும் கிராமோதைய சபைகளின் பெயரில் எடுக்கப்பட்டு உறுப்பினர்களால் செய்யப்பட்டுள்ளன.

2. இவ்வேலைத்திட்டங்களுக்கான மதிப்பீடுகள் யாவும் இலங்கை உள்ளூராட்சி ஆணையாளரின் 1984/ 16ம் இலக்கச் சுற்று நிருபதிற்கு முரணாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மோசடிகள் மூலம் இலட்சக்கணக்கான பணம் களவாடப்பட்டுள்ளது. இது பற்றி19.02.95இல் வட- கிழக்கு மாகாண ஆளுநருக்கு இப்பிரதேச சபையின் 8 ஐ.தே.க. உறுப்பினர்களும் முறையிட்டுள்ளனர். இப்பாரதூரமான பிழைகள் பற்றி எம்.எம். சுலைமான்வெவ்வை என்னும் தொழிநுட்ப உத்தியோகத்தரே எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். வட- கிழக்கு மாகாண சபையின் வேண்டுகோளுக்கு இணங்க இதனை விசாரணை செய்த ஆய்வு உத்தியோகத்தர் எம். எஸ். முகம்மது தம்பி ''ஊழல்கள் நடைபெற்றது உண்மையே'' என 30.01 95 இல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அனைத்து அறிக்கைகளும் வட- கிழக்கு மாகாண சபையில் தூங்கிக் கிடக்கின்றன.

ஆ. 1995ல் இன்னும் ஒரு பாரிய மோசடி தொடங்கியுள்ளது. கல்முனைக்குடி என்னும் இடத்தில் அமைக்கப்படும் மக்கள் மண்டபத்திற்கு ரூபா 23லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கொந்தராத்தை எவ்வித பகிரங்க கேள்வி கோரலுமின்றி உபதவிசாளர் செய்து வருகின்றார். இப்பணம் அனைத்தும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்டதாகும். இன்னுமொரு விடயம், இச்சபை இப்பிரதேச தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமலும் செயல்பட்டு வருகின்றது. உதாரணமாக கடந்த 01.11.95ம் திகதியன்று கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் எஸ். அமலநாதன் அவர்களை அலுவலகத்திற்குள் அடைத்துவைத்து பூட்டுப்போட்டார் உபதவிசாளர். ஒழுக்கம் கட்டுப்பாடு என்ற நாமத்தில் உதித்த கட்சிப்பிரதிநிதிகளின் காடைத்தனங்களைப் பார்க்க யாருமே இல்லை?

இவற்றை மறுத்துரைக்க பிரதேசசபையால் முடியுமா?

***ஏ.ஏ.கபூர்***
***கல்முனை.***

## இது சரிநிகர் அல்ல!

கிழக்குப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை உடையோன் எனும் அடிப்படையில் முதலில் சரிநிகர் பத்திரிகைக்கு எமது நன்றிகள். ஏனெனில் கி.ப.இன் சமகாலப் பிரச்சினைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தியதில் சரிநிகருக்குப் பெரும்பங்குண்டு. எனினும் கடந்த நவ.16-நவ.29 1995 இதழில் 16ம்பக்கத்தில் வீரகேகரி பத்திரிகையையும் சரிநிகர் பத்திரிகையையும் சமானப்படுத்தி யுத்தமும் மக்களின் கண்ணீரும் என்னும் தலைப்பின் கீழ் வ.ஐ.ச. ஜெயபாலனால் எழுதப்பட்டிருந்தது.

அடிமைத்தமிழருக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளுக்கு எதிராக வீரகேசரியும் சரிநிகரும் குரல் கொடுக்கின்றன என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தவறானது. சரிநிகரை வீரகேசரியுடன் சமப்படுத்திவிட முடியாது.

உதாரணமாக கிழக்குப்பல்கலைக்கழகத்தில் இருக்கும் விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோரின் ஒட்டு மொத்தமான ஆதரவுடன் 95 ஒக். 09 தொடக்கம் நடந்து வரும் பிரச்சினைகளை இந்த வீரகேசரி பத்திரிகை வெளிக்கொணர தவறிவிட்டது. அவ்வப்போது சிறிய செய்திகளை வெளியிட்டதோடு சரி. அதேவேளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பகிஷ்கரிப்புகளுக்குக் கிழக்குப் பல்கலைக்கழகத்தை விடக் கூடிய முக்கியத்துவம் கொடுத்திருந்தது. இது வீரகேசரியின் ஒரவஞ்சனையே.

அண்மையில் இடம் பெற்றுவந்த மாணவர் அமைதியீனங்கள், பேரவையை கலைக்க வேண்டும்; பேரவை அண்மையில் உபவேந்தர் நியமனம் தொடர்பாக எடுத்த தீர்மானத்தை மாற்ற வேண்டும் என்னும் கோரிக்கைகளுடனே எழுந்தன.

இலங்கையில் உள்ள தேசியப்பல்கலைக்கழகம் ஒவ்வொன்றிலும் ஒரு பேரவை இருக்கும். இதில் பல்கலைக்கழகப் பிரதேசத்தில் உள்ள புத்திஜீவிகள், குறித்த பல்கலைக்கழகத்தில் அக்கறையுடையோர் போன்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பொதுவாக இவர்கள் அனைவரும் உள்வாரிப் பட்டதாரிகளாகவே இருப்பர். இவர்கள் பேரவையில் வெளிவாரி உறுப்பினர்களாக செயற்படுகின்றனர். உபவேந்தர் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் போன்றோர் உள்வாரி உறுப்பினர்களாக செயற்படுகின்றனர்.

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பேரவையிலுள்ள வெளிவாரி உறுப்பினர்களில் அனேகர் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை அற்றவர்களாகவும், ஊழல் பேர்வழிகளாகவும் காணப்படுகின்றனர். இப்படியானவர்கள் அங்கம் வகிக்கும் பேரவையினது தீர்மானங்கள் எப்படியிருக்கும் என்பதை நாங்கள் சொல்லத் தேவையில்லை.

பேரவை அண்மையில் தான் செய்த பிழையை ஒப்புக்கொண்டுவிட்டது. அதனால்தான் தனது உபவேந்தர் தொடர்பான தீர்மானத்தை திருத்தி மூவரின் பெயரைச் சிபாரிசு செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியது. அதன்படி வண. அருட்திரு. இராஜேந்திரம் அவர்கள் புதிய உபவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றிலேயே கத்தோலிக்கத் துறவியொருவர் பல துறைகளில் விற்பன்னரான தமிழர் ஒருவர் பதவிக்கு அமர்த்தப்பட்டிருப்பது இலங்கைத் தமிழர்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் பெருமையே

**கே.சசிகுமார்**
**செங்கலடி.**

## மர்மம் துலங்கியது!

சரிநிகர் இதழ் 84லும், 86லும் எமது ஓட்டமாவடி ப.நோ.கூ. சங்கம் பற்றிய செய்தியினை நடுநிலையில் நின்று வெளியிட்டமைக்காக எங்களின் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். இச்சங்கத்தின் இயக்குநர் சபையின் கடந்த இருபது வருடங்களாக ஒரே குழுவாக நின்று செயற்பட்டதின் மர்மம் அண்மையில் மேற்கொண்ட 46/1 விசாரணையிலிருந்து வெளிவந்துள்ளது.

சங்கத்தின் உண்மை நிலையை ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்திய பிரதேசச் செயலாளர் அவர்களுக்கும் நாங்கள் நன்றி கூறுகின்றோம்.

***கிராம அபிவிருத்திச் சங்கம்,***
***மீராவோடை.***

## மட்டு சீமெந்து...

ரூபா செலவில் 146 அபிவிருத்தித்திட்டங்களும், யாழ்ப்பாண மாவட்ட ஈ.பி.டி.பி. எம்.பி.அ. இராசமாணிக்கம் ஒதுக்கீடு செயத 12 லட்சம் ரூபா செலவில் 12 திட்டங்களும் அமுல் நடாத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் நொறாட் நிறுவனம் ஒதுக்கீடு செய்த 5 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் 146 அபிவிருத்தித் திட்டங்களும் வடக்குக் கிழக்கு மாகாணசபை ஒதுக்கிய 1 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் 223 மூலதன அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் தற்போது சீமெந்துப் பக்கெட்டின் விலை 360 ரூபாவாக அதிகரித்து இருப்பதால் நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே நடக்கின்றன. கறுப்புச் சந்தை விலையில் சீமெந்தைப் பெற்று நிர்மாணப் பணிகளை மேற்கொண்டால் நஷ்டம் அடைய வேண்டி வரும் என்று கட்டிட ஒப்பந்தகாரர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். இன்னும் ஓரிரு மாதங்களில் பருவ மழை ஆரம்பிக்க உள்ளது. இதற்குள் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யாவிடில் நொறாட் நிதி தவிர்ந்த மற்றைய நிதிகள் யாவும் திருப்பி அனுப்பப்படும் அபாயம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலை ஏற்பட்டமைக்குக் காரணம் என்ன? மட்டக்களப்பு மாவட்டத்தின் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவராக ஒரு திறமையான அதிகாரி நியமனம் பெற்று வராமையும், விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களின் சுயநலமுமே! இம்மாவட்டத்தில் சீமெந்து விநியோகத்தில் நேர்மையான முறையில் ஈடுபடும் பணக்காரர்களை இத்துறையில் ஈடுபடுத்த அரச நிர்வாகம் முன்வராமையும் இதற்கான காரணம்.

கடந்த வாரம் எமது செய்தியின் பின்பு கள்ள மார்க்கட் வியபாரிகளில் ஒருவரான ஆஞ்சநேயர் கடைக்கு மட்டக்களப்பு நீதிபதி 25 ரூபா சீமெந்து கூட்டி விற்பனை செய்தமைக்கு ரூபா 3 ஆயிரம் அபராதம் விதித்தார். இக்கடையின் உரிமையாளரான இராசதுரை சண்முகராசா சிறந்த சீமெந்து வியாபாரியெனச் சமீபகாலத்துக்கு முன்பு ஜப்பான் போய் வந்தார். இவரே இவ்வழக்கின் முதலாவது எதிரி. ஆனால் இவர் நீதிமன்றம் வரவில்லை. வேறு விற்பனையாளர் ஒருவர் கூப்பிடப்பட்டு விசாரணை செய்யப்பட்டுக்குற்றம் அளிக்கப்பட்டது. இவர் மீதும் வழக்குப் போடுவதாக அறிக்கை சமர்ப்பித்த விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் சௌந்திரராசன் சண்முகராசா நீதிமன்றத்திற்கு வராமலே வழக்கை முடித்து விட்டார். உண்மையில் இ.சண்முகராசா என்பவர் மீதுதான் குற்றம் அறவிடப்பட்டிருக்க வேண்டும். இ.சண்முகராசா மீது குற்றம் அறவிடப்பட்டிருந்தால் கள்ள மார்க்கட் மன்னராகத் திகழும் இவர்களின் சீமெந்து லைசன்ஸ் ரத்துச் செய்யப்பட்டிருக்கும். ஆனால் இத்திணைக்களத்தின் பரிசோதகர்கள் வழக்குப் போடுவதாக அரச அதிபருக்கு ஒரு அறிக்கையும், நீதிமன்றில் பிறிதொன்றுமாக இயங்கி வருகின்றனர்!

வளர்க மட்டக்களப்பு கள்ள மார்க்கட்!
வாழ்க விலைக்கட்டுப்பாட்டுத் திணக்களம்.

## மூலிகைப்பண்ணை அபகரிப்பு!

கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கம் அதன் சேவைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 'சித்த வைத்தியன்' எனும் சஞ்சிகையை எதிர்வரும் ஜனவரி முதல் வெளியிட இருக்கிறது. இதற்கென க.கு. சிவசுப்பிரமணிய குழு தலைமையிலான குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் க. நடராசா (ஜே.பி.) தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்கத்தால் மூலிகைப்பண்ணை ஒன்று அமைக்கும் திட்டமும் நிறைவேறி அதற்கென 5 ஏக்கர் அரசாங்கக் காணியும் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் தனிநபரொருவர் ஆட்சியின் மூலம் உடமையாக்கிக் கொண்டதாக அறிவித்ததை தொடர்ந்து அக்காணி தொடர்பாக நீதிமன்றத்தில் தீர்வு பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மூலிகைகளைப் பயிரிடவும், ஆய்வுகூடமொன்றை அமைக்கவும் சகல ஆதிகாரிகளினதும் வழிகாட்டல்களுடன் தரப்பட்ட இக்காணி, நீதிமன்றத் தீர்ப்புக்கு உள்ளாக வேண்டியுள்ளமை வைத்திய சங்கத்தை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

'வளைவு'

பூச்சியம் கலை வட்டத்தின் (ZERO ART CIRCLE) தயாரிப்பில் உருவான வளைவு' என்னும் தொலைக்காட்சித் திரைப்படம் எதிர்வரும் சனிக்கிழமை இரவு பத்துமணிக்கு ரூபவாகினி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காண்பிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர் 'SARINIHAR

சரிநிகர்

## யாழ்ப்பாணத்தின் பின்பு?

இலங்கை இராணுவம் யாழ்ப்பாண நகருக்குள் பிரவேசித்து தமது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து ரிவிரெச இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரிவிரெச இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கமும், அதன் தொடர்பு ஊடகங்களும் மேற்கொண்ட ஒரு பக்கச் சார்பான பிரச்சார நடவடிக்கைகளின் விளைவாக, இந்த நாட்டில் மிகவும் கீழ்த்தரமான முறையிலே தமிழர் விரோத உணர்வுகள் தூண்டி விடப்பட்டுள்ளதோடு, பலமிழந்திருந்த பேரினவாத சக்திகள் மீண்டும் எழுச்சிப் பெற்றுள்ளமையையும் காணக் கூடியதாக இருக்கின்றது. சமாதானத்திற்கான எதிர்ப்பார்ப்புகள் யுத்த முனைப்புகளின் காரணமாக அருகிக்கொண்டு செல்கிறது.

யாழ்ப்பாண நகருக்குள் இராணுவம் பிரவேசித்த நிகழ்வை யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விட்டோம் என்ற பிரச்சார நடவடிக்கைகளானது இராணுவ ரீதியில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடலாம் என்ற இனவாத யுத்தவாத சக்திகளுடைய எதிர்ப்பார்ப்பைப் பலப்படுத்தக் கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கக் கூடிய வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இத்தகைய நிகழ்வுகளுக்கு மத்தியில் இந்த இராணுவ நடவடிக்கைகள் தமிழர்களுக்கு சமாதானத்தைக் பெற்றுக் கொடுப்பதற்கு என்னும் ஒரு விசித்திரமான விளக்கத்தையும் அரசு அவ்வப்போது முன்வைத்து வருகின்றமையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலைகளுக்கு மத்தியில் ரிவிரெச இராணுவ நடவடிக்கைகளின் வெற்றி விழாவைக் கொண்டாடுமுகமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரரணதுங்க ஆற்றிய உரையானது அரசியல் தீர்வை அடைவதில் அவருக்குள்ள கடமைப்பாட்டை வலியுறுத்துவதாக இருந்தாலும் இது எந்தளவிற்கு நடைமுறைக்கு சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. சமீப காலமாக தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையின் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்ற கெடுபிடிகள், அரச நிறுவனங்களில் புதிதாக மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழர் களையெடுப்பு, அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்கள் தொடர்பாக அரசின் நிலைப்பாடுகள் போன்றவைகள் இந்தக் கேள்விக்குறியை உறுதி செய்யக் கூடியவாறு அமைந்துள்ளன. யுத்தமும் சமாதானமும் இணைந்து செல்லக்கூடியவை அல்ல. யுத்தமே சமாதானத்தின் எதிரி என்பதோடு யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடையக்கூடிய நிலைமை இலங்கையில் இல்லை என்பதையும் தெளிவாக வலியுறுத்த வேண்டும்.

தமிழர்களுடைய அபிலாஷைகளை முழுமையாக நிராகரித்ததோடு தமிழர்களுக்கு எதிரான பேரினவாத சக்திகளின் அபிலாஷைகளை மட்டும் அங்கீகரிக்கும் 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பை ஏற்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கமானது தமிழர்களின் மீதான தனது நியாயாதிக்கத்தை (Legitimacy) இழந்து விட்டது . 1977ஆம் ஆண்டின் வடக்குக் கிழக்குத் தேர்தல் முடிவுகள் இதைத் தெளிவாக வலியுறுத்தின. 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் நடைமுறைகளும் இவ்வகையிலேயே அமைந்தன இவ்விதமாக அரசியல் ரீதியாக இழந்த தமது நியாயாதிக்கத்தை இராணுவ ரீதியான பலாத்கார வழிகளில் நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 1979ஆம் ஆண்டு ஜே.ஆரின் அரசாங்கம் தமிழர்க்கெதிரான யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியது. இந்த விதத்தில் ஜனநாயக விரோத ரீதியில் முன்னெடுக்கப்பட்ட யுத்த நடவடிக்கைகளை முறியடிப்பது. தமிழ் மக்களின் தன்மானப் பிரச்சினையாக உருவெடுத்தது. தமிழ் மக்கள் தொடர்பாக அரசாங்கம் செயற்பட வேண்டுமேயானால் அது தனது நியாயாதிக்கத்தை ஜனநாயக அரசியல் ரீதியாக நிலைநாட்டிக் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

தமிழ் மக்களுடைய அரசியல் சுதந்திரமும் சுயாட்சிக்கான உரிமையும் பூரண சமத்துவத்தையும் அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் அங்கீகரிக்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டுமே இந்நிலைமையை அடைய முடியும். இத்தகைய அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய சவால்களை முறியடிப்பதற்கு தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து செயற்படக் கூடிய அரசியல் நிலைமையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதை விடுத்து தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசியல் ரீதியாக வென்றெடுக்காத ஒரு அரசாங்கம் சிங்கள மயப்படுத்தப்பட்ட இராணுவத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகள் மூலமாக தமிழ் மக்களை வென்றெடுப்பதோ அல்லது ஐக்கியப் படுத்துவதோ, முடியாத காரியமாகும். விடுதலைப் புலிகளின் அமைப்பானது, தனது விடுதலைக்கோட்பாடுகளை மீறி மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதன் மூலமாக தமிழ் மக்களின் போராட்டம் பல்வேறு வகைகளில் மாசுபடுத்தப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயமே எனினும் மறுக்கப்பட்ட தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகள் தொடர்பான நிலைமைகளானது தமிழ் மக்கள் மத்தியிலே இவர்களுடைய எல்லா செயற்பாடுகளையும் நியாயப்படுத்துகின்ற நிலைமையை தோற்றுவித்துள்ளது. இந்த யுத்தமும் விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்களின் உருவாக்கமும் இனவாத முரண்பாட்டின் விளைவுகளேயன்றி முரண்பாட்டிற்கான காரணியல்ல. எனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜனநாயக அரசியல் நடைமுறைகளின் மூலமாக உத்தரவாதப்படுத்தாமல் அதன் விளைவுகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் வெற்றிகாண முடியாது. ரிவிரெச இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகளை முறையாக ஆராய்ந்து பார்த்தால் இது மிகத் தெளிவாகப் புலனாகிறது. சிங்கக் கொடியை ஏற்றியதன் மூலமாக யாழ்ப்பாணத்தை யாப்பாபட்டுன ஆக்கிக் கொள்ள முயல்வது ஒரு போதும் வெற்றியளிக்கப் போவதில்லை. ஜனாதிபதியின் உரை நேர்மையானது என நிரூபிக்கப்பட வேண்டுமானால் இலங்கைக்கு தேவையான பல்லினப் பாங்கான பல்கலாசாரத் தன்மை கொண்ட அரசியல் கட்டமைப்புக்களை உறுதிப்படுத்தும் அரசியல் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும். இந்நடைமுறைகள் மேலும் தாமதப்படுத்தப்படுமேயானால் தனது தந்தையான பண்டாரநாயக்காவுக்கு நேர்ந்த கதி ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தை நோக்கிய இராணுவ நடைமுறையில் அரசு கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இதுதான்.


## ஏன் இந்த வேலை ஐயா?

மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகத்திற்கும், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், தபால் தொலைத்தொடர்புகள் பிரதியமைச்சர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிற்கும் இடையில் தற்போது பனிப்போர் ஒன்று நடைபெற்று வருகின்றது.

இதற்குக் காரணம் மட்டக்களப்பு மாநகரசபைப் பகுதியில் இருந்து தனது அனுமதி இல்லாமலும், தனது அதிகாரத்தையும் மீறி கிறவல், மண் என்பன கொண்டு செல்லப்படுவதேயாகும். மட்டக்களப்பு மாநகரத்திற்கு உட்பட்ட பிரதேசமான திருப்பெருந்துறை கிராமம் இயல்பாகவே கிறவல் வளம் உள்ள பிரதேசம். இந்த ஒரே ஒரு காரணத்தை வைத்து இக் கிராமத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட கிறவல் அகழ்தெடுக்கப்பட்டு அப்பிரதேசங்கள் மிகவும் அழமான பள்ளங்களைக் கொண்ட இடங்களாக மாறிவிட்டன. இப்பள்ளங்களை சபை நகரக்கழிவுகளை புதைக்கும் இடமாகப்பாவித்து வருகின்றது. மட்டக்களப்பு நகரத்தில் உள்ள கழிவுகள் அனைத்தும் இவ்விடத்திலேயே போடப்படுவதால் இப்பிரதேசம் முழுவதும் துர்நாற்றம் வீசும் பிரதேசமாகவும், நோய்க்கிருமிகள் உற்பத்தியாகும் இடமாகவும் மாறிவிட்டது. இதனால் இப்பிரதேச மக்களுக்கும், மாநகர சபைக்கும் இடையே எப்போதும் லடாய்.

இந்த நிலையில் இப்பகுதியில் இருந்து கிறவல் எடுக்க வேண்டாம் என அறிவித்திருந்தும், மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து வீதிவேலைகளுக்கும் தேவையான கிறவல் இங்கிருந்தே எடுக்கப்படுகின்றது.

அத்தோடு வீதிஅபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருதித்தித் திணைக்களம், பிரதேச சபை, போன்ற ஏனைய நிறுவனங்களும், இங்கிருந்தே கிறவல் எடுக்கின்றன. அதைவிட பொலிஸ் இராணுவம், தனிப்பட்ட வியாபாரிகள் இன்னொருபக்கத்தில் கிறவல் எடுக்கின்றனர். எத்தனை நிறுவனங்கள் எடுத்தாலும் அதனால் ஏற்படும் தீமைகளை மாநகரசபையே பொறுப்பேற்க வேண்டி ஏற்படுகின்றது. அத்தோடு மட்டக்களப்பு மாநகர சபைக்குள்ளேயே பல வீதிகள் திருத்த வேண்டி இருக்கும் பொழுது, மாநகர சபை எல்லைக்குள் வளம் இங்கு பயன்படுத்தாமல் வெளியில் கொண்டு செல்லப்படுகின்றது என்ற குரலும் பலமாக ஒலிக்கத்தொடங்கிவிட்டது. இதன் காரணத்தினால் கிறவல் எடுப்பது தடுக்கப்பட்டபோதும், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் அதிகாரத்தின் பேரில் பலவந்தமாக கிறவல் கொண்டு செல்ல முற்பட்டதையடுத்தே பிரச்சினை தோன்றியுள்ளது.



எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவோ தனது பிரதேசங்களுக்குத் தேவையான கிறவலை திருப்பெருந்துறையிலேயே எடுக்கவேண்டும் என்றும் அதை மேயர் தடுக்கும் பட்சத்தில் பாதுகாப்புப் படையினரின் காவலுடன் ஏற்றப்படும் என்றும், கூறியுள்ளார். இது மட்டக்களப்பு மேயருக்கு ஒருவித தன்மானப்பிரச்சினையையும், அவரது அதிகாரம் தொடாபாக சிக்கலையும், ஏற்படுத்திவிட்டது. அது மட்டுமல்லாமல் தொடர்ந்தும் மேயர் தடை செய்தால் மாநகர சபையே கலைக்கப்படும் என்று கூறியதாகவும் தற்போது கூறப்படுகின்றது.

பிரதியமைச்சர் மேயருடன் இவ்வாறு நடந்து கொண்டதையடுத்து மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள் அனைவருமே தற்போது மிகக் கொதிப்புடன் இருக்கின்றார்கள்.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா இதே போன்று இன்னொரு செயற்பாட்டையும் ஆரையம்பதி பிரதேசத்தில் செய்ய முற்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

காத்தான்குடி பிரதேசத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக குழாய் நீர்த் திட்டமொன்றைத் தீட்டி, நீர் விநியோகத்திற்கான பாரிய கிணறுகளை எவருடனும் கலந்தாலோசிக்காமால் ஆரையம்பதியில் நிறுவமுற்பட்டார். அரசியல் அதிகாரத்தோடு அனைத்தையும் நிறைவேற்றி வந்த சமயத்தில் ஆரையம்பதி பிரதேச மக்களின் ஏகோபித்த எதிர்ப்பையடுத்து தற்போது இச்செயற்பாடு தொடர்பாக அமைதியாக இருக்கின்றார்.

இதே போன்று தொகுதிக்கு நூறுவீடு என்ற திட்டத்தின் கீழ் ஆரையம்பதி பகுதியில் பிரதியமைச்சரால் நிர்மாணிக்கப்படவிருக்கும் வீடுகளில் முஸ்லிம்களைக் குடியேற்றும் முயற்சியும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள விரிசலை இன்னும் அதிகமாக்குகின்ற நடவடிக்கையாக அமைந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

*ம. நக்கீரன்.*

## அன்பான வாசகர்களுக்கு ஒரு கடிதம்!

அன்பான வாசகர்களுக்கு,

சரிநிகர் பத்திரிகை தொடர்பான கருத்துக் கணிப்பொன்றை நடாத்தும் நோக்குடன் ஏற்கனவே ஒரு கேள்விக்கொத்தொன்றின் மூலம் உங்களுடன் நாம் தொடர்பு கொண்டோம். அதற்கு மதிப்பளித்து பெருமளவில் அக்கேள்விக் கொத்தை நிரப்பி அனுப்புவதன் மூலம் சரிநிகர் தொடர்பான தங்களது அபிப்பிராயங்களை அறிவித்திருந்தீர்கள்.

அவற்றில் நீங்கள் எழுதிய விடயங்கள் தொடர்பான தொகுப்புடன் ஜனவரியில் புது இதழுடன் உங்களைச் சந்திப்போம்.

உங்களது ஒத்துழைப்புக்கு நன்றி.

இப்பொழுது மீண்டும் ஒரு முறை உங்களிடம் இன்னும் சில கேள்விகளை முன்வைக்கிறோம். சரிநிகர் தொடர்பாக எழுந்துள்ள சில தீவிர விமர்சனங்களை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளோம். வாசகர்களாகிய உங்களது அபிப்பிராயங்களுடன் சேர்த்து இவற்றை எதிர்கொள்ளும் நோக்குடன் இவ் விமர்சனங்களை உங்கள் முன் வைக்கிறோம்.

பத்திரிகையை வெளியிடும் மேர்ஜ் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ குறிக்கோள்கள் வருமாறு:-

**1. நாட்டிலுள்ள பல்வேறு இனங்களுக்கும், வெவ்வேறு மொழிபேசும் பிரிவினருக்கும் எல்லா உரிமைகளிலும் சமத்துவத்தை ஏற்படுத்தல்.**

**2. வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் காட்டப்படும் இனத்துவேசம் இனரீதியான அநீதிகள், பாகுபாடுகள் ஆகியவற்றை எதிர்த்தல்.**

**3. அரசாங்கத்தின் ஜனநாயக விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும், சகல அடக்கு முறைச்சட்டங்களையும், பாதுப்புப்படையினரின் அடக்கு முறை நடவடிக்கைகளையும் இனங்களுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக எதிர்த்தல்.**

**4. ஜனநாயக, மனித உரிமைகளையும், மனித சுதந்திரங்களையும், இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக ஆதரித்தல்.**

**5. தோட்டங்களிலும், ஏனைய பகுதிகளிலும் வாழும் மக்கள் உட்பட இந்நாட்டின் எல்லா மக்களினதும் முழுமையான,சுதந்திர பிரஜைகளுக்கான உரிமைகளை ஆதரித்தல்.**

**6. தொழில், கல்வி, குடியிருப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் தோட்டத்தொழிலாளர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இனரீதியாக காட்டப்படும் பாகுபாட்டை எதிர்த்தல்.**

**7. இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும், நிலைநாட்டும் போராட்டத்தில் எல்லா இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் ஐக்கியத்தை வளத்தல்.**

இவையே மேர்ஜ் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும். இப்போது சரிநிகர் பற்றிய விமர்சனங்களுக்கு வருவோம்.

**1.சரிநிகர் மேர்ஜ் இன் கொள்கைகளுக்கு முரணாக செயல்படுகிறது.**

**2. அரசாங்கத்தில் சமாதானத் தீர்வுப்பொதியை மேர்ஜ் ஏற்றிருக்கும் போது சரிநிகர் ஏற்கவில்லை.**

**3. அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை எதிர்த்து வருகிறது, ஒரு சமாதான ரீதியான தீர்வுக்கு எதிராக சரிநிகர் இயங்கி வருகிறது.**

**4. தென்னிலங்கையில் பரவலாக நடக்கும் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை இருட்டடிப்பு செய்து வருகிறது.**

**5. ஜனநாயகத்துக்காவும், சமாதானத்துகாகவும் பாடுபடும் தனிநபர்களை கிண்டலடிக்கும் பாணியில் எழுதிவருகிறது.**

**6. சரிநிகர், தமிழின வாதத்தை பரப்பும் விதத்தில் செயல்படுகிறது.**

**7. சரிநிகர் தமிழ் மக்களுக்கு புலிகளைத் தவிர வேறுவழியில்லை என்றுகூறி புலிகளின் தலைமையை நியாயப்டுத்தி வருகிறது, இதன் மூலம் புலிகளை நோக்கி மக்களைத்திரட்டி வருகிறது.**

**8. செய்திகளைத் தெரிவதில் 'திவயின' போன்ற பத்திரிகை கடைப்பிடிக்கும் அதே இனவாத முறைக்கு சமமான தமிழ் இனவாத சார்புநிலையை கடைப்பிடிக்கிறது.**

**9.மாற்றுக்கருத்துக்களை உதாசீனம் செய்து வருகிறது.**

**10. யாழ்ப்பாண வாதத்தை** (Jaffna Mentality) அடிப்படையாகக் கொண்டது.

இவை தொடர்பாக உங்களது அபிப்பிராயத்தை எழுதுங்கள்.

இம்முறை உங்களது பணி சற்றுசிரமாமனது என்பதை நாம் அறிவோம். ஆயினும், சரிநிகரின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு உங்கள் பதில்கள் மிகவும் அவசியமானவை.

உங்கள் கடிங்களை கூடிய விரைவில்
ஆசிரியர்,சரிநிகர் இல. 4, ஜயரத்ன மாவத்தை,திம்பிரிகஸ்யாய,
கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*ஆசிரிய பீடம்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர்:- சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615